# இந்து ஒளி

# HINDU OLI



அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

*Quarterly of*
*All Ceylon Hindu Congress*



தீபம் - 14 சுடர் - 03




## அமரர் வே.பாலசுப்பிரமணியம்
## நினைவுச் சிறப்பிதழ்

## வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை (04.04.2010)





அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களது நிழற்படத்திற்கு மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா மலர்மாலை அணிவிப்பதையும், அருகே மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களையும், புதிய கதிரேசன் ஆலய பிரதம தர்மகர்த்தா ஸ்ரீ சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைப்பதையும், அருகே மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை அவர்களையும் காணலாம்.


இரத்மலானை விடுதி மாணவிகள் இறைவணக்கம் செலுத்துவதையும், மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை தலைமையுரை நிகழ்த்துவதையும், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி அதிபருமான திரு. ந. மன்மதராஜன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் காணலாம்.






கிழக்குப் பல்கலைக்கழக சமஷ்கிருத விரைவுரையாளர் சிவஸ்ரீ ம. பாலகைலாசநாதசர்மா நினைவுப் பேருரையாற்றுவதையும், கொழும்பு இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. த. சங்கரலிங்கம், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவதையும், மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை நன்றியுரை நிகழ்த்துவதையும் காணலாம்.




வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை நிகழ்வின் போது இடம்பெற்ற விடுதி மாணவ, மாணவிகளது பிறந்ததின வைபவம்.

அட்டைப்படத்தில் : மாவை கந்தனின் இராஜகோபுரம், பாலாவி பிள்ளையார் கோயில்.

உ

சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

-திருச்சிற்றம்பலம்-

## தேவாரம்
(சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது)

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே!

## திருவாசகம்
(மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது)

அளித்து வந்தெனைக் காவவென் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந் துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வானவா மலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே!

## திருவிசைப்பா
(சேந்தனார் அருளியது)

அம்பரா அனலா அனிலமே புவிநீ
அம்புவே இந்துவே இரவி
உம்பரா லொன்று மறியொணா வணுவா
யொழிவற நிறைந்த வொண்சுடரே
மொய்ம்ப ராய்நலஞ் சொன் மூதறிவாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
எம்பிரா னாகி யாண்டநீ மீண்டே
யெந்தையுந் தாயுமா யினையே!

## திருப்பல்லாண்டு
(சேந்தனார் அருளியது)

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்
(சேக்கிழார் அருளியது)

ஞாலம் உய்ய நாம் உய்ய
நம்பி சைவநன் னெறியின்
சீலம் உய்யத் திருத் தொண்டத்
தொகைமுன் பாடச்செழு மறைகள்
ஓலமிடவும் உணர் வரியார்
அடியா ருடனும்உள தென்றால்
ஆலம் அமுது செய்த பிரான்
அடியார் பெருமை அறிந்தாரார்!

-திருச்சிற்றம்பலம்-


உ

சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 14 சுடர் - 03

விகிர்தி வருடம் ஆனித் திங்கள் 31ம் நாள்

15.07.2010


## புலம்பெயர்ந்தவர்களின் பலம் எமக்குத் தேவை

இடம் பெயர்ந்த மக்களின் அவலக்குரல் இன்னும் கேட்கின்றது. அதனைக் கேட்டுக்கொண்டு பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. எம்மாலான பணிகளை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, இந்நாட்டு இந்து மக்களின் குரலாக ஒலிக்க வேண்டியதும் எமது கடமை.

இடம்பெயர்ந்த மக்களைக் காட்சிப் பொருட்களாகவோ, சுயவிளம்பரத்திற்கு பாவிக்கும் கருவிகளாகவோ எவரும் பார்க்கக் கூடாது. புலம்பெயர்ந்து வாழும் இந்து மக்களும், இந்து ஆதீனங்களும்,வெளிநாட்டிலுள்ள இந்துநிறுவனங்களும் இடம்பெயர்ந்த எமது உடன் பிறப்புகளுக்கு செய்யும் உதவிகள் போதாது. ஏனைய மதத்தைச் சார்ந்தவர்கள் செய்கின்ற சேவையின் அளவிற்கு எம்மவர் செய்யத் தயங்குவது வருத்தத்திற்கு உரியது.

எனினும், எம்மவரிலும் சிலர் சேவை மனப்பான்மையுள்ள நல்லவர்களாக,உத்தமர்களாக இருக்கிறார்கள் என்பதில் ஓரளவு நிம்மதியும் கிடைக்கிறது. இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபை நீட்டும் நேசக்கரம் முக்கியமானது. பல ஆண்டுகளாக எமக்கு பலவழிகளிலும் உதவிவரும் இந்தஆலய அறங்காவலர் சபை, யாழ். பல்கலைக்கழகத்தின் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு மாமன்றம் ஓர் உதவித் திட்டத்தை வகுத்தபோது தாராளமாக தந்து உதவினார்கள். இன்னும் உதவுவார்கள்.

யாழ். மண்ணில் கட்டிடம் அமைத்து சைவப் பிரசாரகர் பயிற்சி நிலையமும், நூலகமும் நிறுவியுள்ள மாமன்றத்தின் முயற்சிக்கு இலண்டன் வெஸ்ரேன் ஜூவலர்ஸ் திரு. வேலுப்பிள்ளை சிவசுந்தரம் அவர்களது பங்களிப்பு போற்றுதற்குரியது. அங்குள்ள நூலகத்திற்குத் தேவையான நூல்களை கொள்வனவு செய்வதற்கு பெருந்தொகை நிதியுதவி செய்திருக்கின்றார்.

இத்தகைய உதாரணங்களைப் பின்பற்றி ஏனையோரும் மாமன்றப் பணிகளுக்கு உதவவேண்டும். இப்போது வடக்கு, கிழக்குப் பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் விஸ்தீரணம் பெற்றிருக்கும் மாமன்றத்தின் பணிகளை மேலும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு இந்துப் பெருமக்கள் வழங்கும் ஆதரவும், ஒத்துழைப்பும் பெரிதும் துணையாக இருக்கும்.

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுக் குறிப்பு 3
- சித்திரைப் புதுவருடப் பிறப்பும் இந்துப் பண்பாட்டு அம்சங்களும்
  *கலாநிதி க. நாகேஸ்வரன்* 5
- வைகாசி விசாகம்
  *நயினை சுப்பிரமணியம் கனகரெத்தினம்* 9
- நாவலர் வழியில் செயல் வீரர்
- "இந்துபோர்ட்" சு. இராசரத்தினம் அவர்கள்
  *கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்* 12
- மாதச் சிறப்புகள் – *ஆத்மஜோதி நா. முத்தையா* 16
- சிவனின் பெருமையைச் சொல்லும் நந்திக் கொடி
  *சிவத்திரு குருபரநி அடிகள்* 18
- வாழ வழியமைப்பான் திருக்கேதீச்சரநாதன்
  *த. மனோகரன்* 19
- தேரேறி வலம் வந்த திருக்கேதீச்சரநாதர்
  *பருத்தியூர் பால வயிரவநாதன்* 21
- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருக்கேதீச்சரப் பதிகம் 23
- சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருக்கேதீச்சரப் பதிகம் 24
- திருப்பதிகங்களில் போற்றப்படும் திருக்கேதீச்சரம் 25
- திருக்கோயில் ஏன்? – *இரா. இராஜசேகரன்* 26
- சிறுவர் ஒளி – சிந்தனைக் கதைகள் 28
- மாணவர் ஒளி – பெரியபுராணக் கதைகள் 29
- மங்கையர் ஒளி – பெரியபுராணம் காட்டும் பெண்களின் சிறப்பு
  *ஆ. காயத்திரிதேவி* 32
- மாசற்ற அன்பில் மலரும் உயர்பக்தி ! 35
- மாமன்றத்தின் அஞ்சலி 36
- மாமன்றச் செய்திகள் 37
- மணிவிழா கண்ட மன்மதராஜன் 38
- Construction of A Hindu Temple
  *- Kalaipulavar K. Navaratnam* 40


**அடுத்த சுடர்**
**விகிர்தி வருடம்**
**ஆடி - புரட்டாதி**

## வாழ்த்து

கரிமுகன் கழல்கள் வாழ்க கந்தவேள் கருணை வாழ்க
அரியயன் காணொ ணாத அரனடி நீடு வாழ்க
விரிசடைப் பெருமானார்தம் அடியவர் எல்லாம் வாழ்க
பரிதிசூழ் பாடும் விண்ணும் பொலிவுடன் நீடு வாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விகிர்தி வருடம் சித்திரை – ஆனி இதழ்
ஆனித் திங்கள் 31ம் நாள்
15.07.2010



ஆசிரியர் குழு :
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. த. மனோகரன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 30.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா | 120.00 |
| | (தபாற் செலவு தனி) | |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
இணையத்தளம் : http://www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி எண : 2434990, தொலைநகல் : 2344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்
ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Sithirai - Aani Issue of**
**ALL CEYLON HINDU CONGRESS**
**15th July 2010**



**Editorial Board :**
Prof. A. Shanmugadas
Dr. Kumarasamy Somasundaram
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. Kandiah Neelakandan
Mr. D. Manoharan



| | | |
|---|---|---|
| Price : | Rs. 30.00 | Per copy |
| Annual Subscription (Inland) | Rs. 120.00 | |
| | (Postage Exclusive) | |
| Annual Subscription (Foreign) (Including Postage) | U. S. $ 10.00 | |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 2434990, Fax No.: 2344720


Next Issue :
**Aadi - Puraddathy**


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

# அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழ்



## மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தின் பிதாமகர்

இன்று கொழும்பு மாநகரிலுள்ள உயர்ந்த கட்டிடங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகம். மாமன்றத்திற்கு ஒரு தலைமையகக் கட்டிடம் அமைக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டி, முழு அளவில் செயற்பட்டவர்களுள் முதல்வராகப் போற்றப்படுபவர் மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

இவர் அமரத்துவமடைந்து பதினெட்டு வருடங்கள் நிறைவு பெறும் நாளில் மலரும் இந்த "இந்து ஒளி" சஞ்சிகையை அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுச் சிறப்பிதழாக இந்துப் பெருமக்களின் கரங்களில் சமர்ப்பணம் செய்வதில் மாமன்றம் பெருமையடைகிறது.

## அமரர் பாலாவின் நினைவை மீட்டிக்கொண்டிருக்கும் மாமன்றத் தலைமையகம்

மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தைப் பார்க்கும்போது அது, வெறுமனே மாமன்றப் பணிகளை எடுத்துச் சொல்வது மட்டுமல்ல, கட்டிடம் அமைவதற்கு பேருதவியாகவும் துணையாகவுமிருந்த ஒரு சில வள்ளல் பெருமக்களையும் என்றென்றும் எங்கள் நினைவலைகளில் மீட்டிக் கொண்டேயிருக்கிறது.

இவர்களுள் முதல்வராகக் குறிப்பிடக்கூடியவர் மாமன்றத்தின் முன்னாள் தலைவரான அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கரவெட்டி கிராமத்தில் பிறந்த இவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்து, கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும், பின்னர் யாழ். இந்துக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்று பூர்த்தி செய்தார்.

அமரர் பாலசுப்பிரமணியம் கல்லூரிக் கல்வியினை முடித்துக்கொண்ட பின்னர் தனியார் நிறுவனங்களில் நிதிதொடர்புடைய பதவிகளை வகித்து வந்தார். பின்னாளில் அவர் வர்த்தக நிறுவனங்களை அமைத்து நிர்வகித்து வந்ததன் மூலம் பிரபல தொழில் அதிபராக விளங்கினார். "முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய உழைப்பால் உயர்ந்த பெருமகனாகத் திகழ்ந்தவர் அவர். தனக்காக - தன் குடும்பத்திற்காக என்றில்லாமல் பொதுநல சேவையில் - சமய, சமூக, கல்விப் பணிகளுக்காக வாரி வழங்கிய அவரது வள்ளன்மை உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகிறது என்பது மட்டுமல்லாது, அவை காலத்தால் அழியாதவையுமாகும். அவரது தொழில் நிறுவன்ங்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில் வசதிகளை வழங்கிக்கொண்டிருப்பதன் மூலம், அவரது சமூக நலப்பணி மேலும் விஸ்தீரணம் பெற்றுள்ளதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவரது சமய சமூகப் பணியின் மகுடமாகக் குறிப்பிடக்கூடியது மாமன்ற தலைமையகக் கட்டிடமாகும். மாமன்றத்திற்கான காணி கிடைத்திருந்தும், அதன் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படாத வேளையிலேயே மாமன்றத் தலைவராக அவர் பதவியேற்றார். மாமன்றத்திற்கான ஒரு தலைமையகக் கட்டிடம் அமைக்கவேண்டும் என்பதில் அவர் காட்டிய ஆர்வமும், அவரது துணிச்சலான செயற்பாடுகளும் முழு அளவில் வெற்றிபெற்றன. இன்று கொழும்பு மாநகரில் உயர்ந்த கட்டிடங்களுள் ஒன்றாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகம், அவரது நினைவை என்றென்றும் மீட்டிக்கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, அவரது பரோபகாரப் பண்பையும் எடுத்துச் சொல்கிறது.

அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் 1986ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் திகதியிலிருந்து மறையும்வரை மாமன்றத்தின் தலைவராகப் பணிபுரிந்தவர். அவர் சிறிது காலம் சுகநலமற்ற நிலையில் இருந்து 1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்களது சமயப் பற்றுணர்வும், அறப்பணி மற்றும் பொது நல சேவைகளில் அவரது பங்களிப்பும் சிறப்பாகப் போற்றத்தக்கது.

இவரது சேவையை மதித்துப் போற்றும் வகையில், மாமன்றம் நன்றி மறவாது வருடந்தோறும் இவரது நினைவு நாளில் நினைவுப் பேருரையை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. இவ்வருட (2010) நினைவுப் பேருரை இவரது மறைவின் பதினெட்டு வருட நிறைவின் நினைவாக ஜூலை 18ஆம் திகதியன்று காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுகிறது.

மீள்பார்வை

# அமரர் பாலா நினைவுப் பேருரைகள்

மாமன்றம் வருடந்தோறும் நடத்திவரும் நினைவுப் பேருரைத் தொடரில் இதுவரைகால நிகழ்வுகளின் விபரத் தொகுப்பு :

| திகதி | நினைவுப் பேருரையாளர் | பொருள் |
|---|---|---|
| **ஜுலை 1996** | **நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்** | **தற்கால நெருக்கடிகளுக்கு இந்து சமயத்தின் அணுகுமுறை** |
| **21.06.1997** | **பேராசிரியர் பொன். பூலோகசிங்கம்** | **பத்தொன்பதாம் நூற்றாண்டின் சைவசமய எழுச்சியும் இருபதாம் நூற்றாண்டுக்கான படிப்பினைகளும்** |
| **09.07.1998** | **வண. பிரமச்சாரி ரமண சைதன்யா (சின்மயா மிஷன், இலங்கை இந்தியா)** | **குரு** |
| **20.06.1999** | **திருமதி சுப்புலஷ்மி மோகன் (இயல் இசை விரிவுரையாளர், தமிழ்நாடு அரசினர் இசைக்கல்லூரி)** | **ஞானசம்பந்தர் தேவாரத்தில் அற்புதங்கள்** |
| **23.07.2000** | **வண. பற்றிக் ஹரிகன்** | **கதிர்காமத்தின் மகிமை** |
| **14.07.2001** | **திரு. ஆ. சிவநேசச்செல்வன் (பிரதம ஆசிரியர், தினக்குரல்)** | **மானுடத்தைத் தேடும் மாகானுபாவர்கள் சித்தர் பற்றிய பாரம்பரியம் சில குறிப்புகள்.** |
| **14.07.2002** | **சைவ சித்தாந்தப் பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி (சென்னை)** | **சைவ சித்தாந்தமும் வாழ்க்கை நெறியும்** |
| **06.09.2003** | **திரு. இலட்சுமி நரசிம்மன் (இந்தியன் ஓவசீஸ் வங்கியின் இலங்கை நாட்டுத் தலைவர்)** | **தமிழ் பக்தி இலக்கியத்தில் பக்தி** |
| **14.08.2004** | **(சாண்டில்ய) இராமகிருஷ்ணமூர்த்தி அவர்கள் (தமிழ்நாடு கோவை இராமகிருஷ்ண வித்தியாலய உயர் நிலைப் பள்ளி இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)** | **தமிழ் பக்தி இலக்கியத்தில் திருமுறைகளின் பங்கு** |
| **09.07.2005** | **சிவஸ்ரீ ம. பால கைலாசநாதசர்மா (கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)** | **சைவக்கிரியைகளும் அவற்றின் தத்துவமும் மகிமையும்** |
| **16.07.2006** | **பேராசிரியர் அ. சண்முகதாஸ் (யாழ் பல்கலைக்கழக இளைப்பாறிய தமிழ்த் துறைத் தலைவர்)** | **இந்துப் பண்பாட்டு கல்வி : நோக்கும் போக்கும்** |
| **21.08.2007** | **தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் (சைவ ஆதீனம், ஹவாய், அமெரிக்கா)** | **சர்வதேச ரீதியில் இந்து மதத்தின் தாக்கம் : புதிய பரிமாணங்கள்** |
| **17.07.2008** | **திரு. ஸ்ரீ. பிரசாந்தன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)** | **கந்தனுக்கு ஒரு அலங்காரம்** |
| **05.08.2009** | **கம்பவாரிதி இ. ஜெயராஜ்** | **சைவம் எதிர்வு கூறும் சில புதிய பிரச்சினைகள்** |

## இரத்மலானை மாணவர் விடுதி

போர்ச் சூழ்நிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பெற்றோர்களை இழந்தும், பாதிக்கப்பட்டுமுள்ள பிள்ளைகளின் நலன்கருதி அகில இலங்கை இந்து மாமன்றம் இரத்மலானையில் ஓர் இலவச விடுதியை ஆரம்பித்து நடத்திவருவதை உங்களில் பலர் அறிவீர்கள். 1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்விடுதி பன்னிரண்டு ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது சிறப்புக்குரிய விஷயம். தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பெண் பிள்ளைகளுக்காக "சக்தி இல்லம்" என்ற பெயரில் இன்னொரு விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது.

மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் மேற்படி இரு விடுதிகளிலும் 150க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்வதற்கான வசதிகளுடன், மேலதிகமாக தனிப்பட்ட வகையில் கல்வி போதிப்பதற்காக பிரத்தியேக வகுப்புகளையும் மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. விடுதியில் மாதந்தோறும், ஒரு விடுமுறை நாளில் அந்த மாதத்தில் பிறந்த பிள்ளைகளது பிறந்த தினமும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விடுதியில் வதியும் பிள்ளைகளுக்கு நீங்கள் அனைவரும் தாராளமாக உதவலாம். பிள்ளைகளுக்கு தினந்தோறும் போசனம் வழங்குவதற்காக உங்கள் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**இதற்கான நன்கொடைத் தொகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளுங்கள்.**

மாற்றப்பட்ட நன்கொடை விபரம் பின்வருமாறு அமைகிறது:

| | | | |
|---|---|---|---|
| காலைப் போசனம் | : | 12500/– | ரூபா |
| | | 15000/– | ரூபா (விசேடம்) |
| மதிய போசனம் | : | 17500/– | ரூபா |
| | | 20000/– | ரூபா (விசேடம்) |
| இரவுப் போசனம் | : | 17500/– | ரூபா |
| | | 20000/– | ரூபா (விசேடம்) |
| மாலை தேநீர்/ சிற்றுண்டி | : | 12500/– | ரூபா |
| | | 15000/– | ரூபா (விசேடம்) |

போசனத்திற்கான நன்கொடை அல்லது வேறு வகையில் உதவ விரும்புபவர்கள் மாணவர் விடுதி மேற்பார்வையாளருடன் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல : 011 – 2625588) அல்லது அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல : 011-2434990,
தொலைநகல் இல : 011-2344720



# சித்திரைப் புதுவருடப் பிறப்பும் இந்துப் பண்பாட்டு அம்சங்களும்

*கலாநிதி க. நாகேஸ்வரன், M. A, Ph.d*
*முன்னாள் மொழித்துறைத் தலைவர்,*
*சபரகமுவ பல்கலைக்கழகம்.*



இந்துக்களின் வருடப்பிறப்பும், சித்திரை மாதப்பிறப்பும் இரண்டும் ஒரே நாளாகும். சூரியன் சித்திரை மாதத்தில் இராசிகளுள் முதலாவதாகிய மேடராசியில் உதயமாவதால் சித்திரை வருடப்பிறப்பு விஷுபுண்ணியகாலம் எனப்படும். புதுவருடம், சித்திரை மாதப்பிறப்பு, தமிழ்–சிங்களப் புத்தாண்டு, சித்திரைப் பெண்ணாளின் வருகை என்றும் வருடப்பிறப்பை அழைப்பர். இந் நன்னாளில் மருத்துநீர் தேய்த்து (பலவகையான மலர்கள், இலைகள், அறுகு, மஞ்சள், பால், கோசலம், கோமயம் முதலானவற்றைக் கொண்டு ஆக்கப்படுவது) நீராடிப் புத்தாடை அணிவார்கள். (புத்தாடையின் நிறம் என்ன என்பதைப் பஞ்சாங்கத்திற் காணலாம்).

தத்தம் வீடுகளில் பூரண கும்பம் வைத்து வெற்றிலை, பாக்கு, பழவகை, மஞ்சள், பணம் முதலியவற்றை வைத்து தூபதீபம் காட்டி வழிபடுவர். பிரார்த்தனையின் பின் ஒவ்வொருவரும் விபூதி அணிந்து சந்தனம், குங்குமம் முதலிய திலகமிட்டு அன்று நிவேதித்த பாற்பொங்கல், சர்க்கரைப் பொங்கல்களை வழங்குவர். குடும்பத் தலைவர் அல்லது முதியோர் ஒருவர் அக்குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், பணம் வைத்து வழங்குவார், இது கைவிசேடம் எனப்படும். அந்நாளில் பஞ்சாங்க முறைமையை அனுசரித்து நல்ல நேரம் பார்த்து சுபநேரங்களில் கைவிசேடம் வழங்கும் மரபும் உண்டு. முன்பு ஆலய வழிபாடு செய்து பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்று உற்றார், உறவினர் இல்லங்களுக்குச் சென்று விருந்துபசாரங்களில் பங்குபற்றி மங்களமாய்க் கொண்டாடுவர்.

பூரணகும்பம் நிறைவையும் மன மகிழ்ச்சியுடன் அமைந்த வரவேற்பையும் குறிக்கும். வெற்றிலை எங்கள் உடலைக் குறிக்கும். பாக்கு செல்வத்தைக் குறிக்கும். வாழைப்பழங்கள் நல்வினை, தீவினைகளைக் குறிக்கும். எனவே ஆரோக்கியம் பாவ புண்ணிய விடுதலை ஆகியவற்றை விரும்பி நிற்கின்றோம் என்பதையே தேங்காய் வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்தல் குறிக்கிறது. வேறும் சில உண்மைகளையும் உணர்த்தும்.

சித்திரை வருடப்பிறப்பில் அன்றும் அம்மாதமுழுவதும் கோயில்களிலும், வித்தியாசாலைகளிலும், பொது இடங்களிலும் போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டு பழங்காலந்தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இது விநாயக வணக்கத்தோடு கூடிய ஒரு விளையாட்டாக இருக்கலாம். எக்கருமத்தைக் தொடங்கும் போதும் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தல் மரபு. குடுமி, கண்கள் ஆகியவற்றைத் தேங்காய் உடையதாக இருப்பதால் அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான எங்கள் தலையை அது குறிக்கிறது. தேங்காயைச் சுற்றியுள்ள ஓடு அறிவைச் சூழ்ந்துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகிறது. ஆணவ மலத்தை நீக்கி அறிவைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்பதே தேங்காய் உடைப்பதன் தத்துவமாகும். தேங்காய் உடைத்தால் மழைபெருகும் என்பது ஆன்றோர் வாக்கு.

இந்துமதத்திலே பிறந்த தமிழர்கள் எங்கு வாழ்ந்திருந்தாலும் எமக்குரிய கலாசாரப் பண்பைக் கையாள வேண்டியது நமது பொறுப்பும் கடமையுமாகும். தாயகத்தில் வாழுவது போல் வெளியூர்களில் இடம் பெயர்ந்துள்ள தேசங்களில் நடாத்த முடியாது விட்டாலும் எங்கள் மரபில் முக்கியமான அம்சங்களைப் பேண வேண்டும். பிரார்த்தனை மிகமிக முக்கியம். பிரார்த்தனையால் நாம் இறைவனுடன் நெருங்கிய தொடர்பு கொள்கிறோம். ஆகவே காலை, மாலை வேளைகளில் குடும்ப அங்கத்தவர்களெல்லோரும் ஒன்றாகப் பிரார்த்தனை நிகழ்த்துவது குடும்ப ஒற்றுமைக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் ஏதுவாகும்.

பெற்றோர் முதியோர் தங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்து பிரார்த்தனையைத் தமிழில் நடத்துவது மிகவும் முக்கியம். குழந்தையின் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறே அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தாய்மொழி அவசியம். தாய்மொழியை நன்றாகக் கற்ற பிள்ளைகள் எந்தப் பாஷையையும் விரைவில் கற்று முன்னேற்றம் அடைவரென்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு.

*"செத்தா ரென்பு திகழ்திரு மார்பனே*
*அத்தா வென்றடி போற்றுவார்க் கன்பனே*
*கத்தா வுன்னை நான் கண்டு களித்திட*
*சித்திரை தனிற் சீக்கிரம் வருகவே"* (நற்சிந்தனை)

இந்து மதத்தின் முழுமுதற் கடவுள் சிவன். சிவனைத் துதித்து வணங்கி நிற்பதே தமிழர் பண்பாட்டு நெறியாகும். எல்லா விழாக்கள் வைபவங்களிலும் இப்பண்பு கடைப்பிடிக்கப்படும் என்பதறிக.

புதுவருடப்பிறப்பன்று கோயில்களிலும் ஏனைய புனித இடங்களிலும் கஞ்சி காய்ச்சி, சித்திரபுத்திரனார் கதை படித்தபின் எல்லோருக்கும் கஞ்சி வழங்குவார்கள். பனையோலையினால் ஆக்கப்பட்ட ஒரு சிறிய பாத்திரத்தில் வழங்குவார்கள். (யாழ்ப்பாண முறைமையில் அதனைப் 'பனையோலைத் தட்டுவம்' என அழைப்பர்). இது ஈழநாட்டுக்குரிய தனிச்சிறப்பு வாய்ந்த பண்பு. இதைச் சித்திரைக்கஞ்சி விழா என்றழைப்பர். இவ்வைபவத்தினால் மக்களின் ஒற்றுமை ஓங்கி சகோதரத்துவம் மிளிர்கிறது என்பது பேருண்மை.

சித்திரைப் புத்தாண்டை வருடாவருடம் இந்துக்களாகிய நாம் கொண்டாடி வருகிறோம். இந்நாள் எமக்கு ஒரு மங்களகரமான நாளாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மரபிற்கமையப் புத்தாண்டில் புதிய விஷயங்களைச் சகலரும் எதிர்பார்ப்பது வழக்கம். புத்தாண்டு புலருமுன் அவ்வாண்டுக்கான பஞ்சாங்கம் வெளிவருகிறது.

எமது வாழ்வை நல்வாழ்வாக நெறிப்படுத்திக் கொண்டிருப்பன வேத வழக்கும், பஞ்சாங்கமுமேயாகும். பிள்ளை பிறந்தால் அப்பிள்ளையின் ஜாதகத்தைக் கணிக்கப் பஞ்சாங்கம் உதவுகிறது.

வருடம் பிறக்கும் நேரத்தையும் விஷுபுண்ணிய காலத்தையும் சங்கிரமதோஷத்தையும் பஞ்சாங்கத்திலே பார்த்து அதிலுள்ள அறிவுறுத்தலின்படி நடந்து கொள்ளும் நடைமுறையே இந்துக்களது வழக்கமாகும். சங்கிரமதோஷ நிவர்த்திக்கு மருத்துநீர் பெரிதும் உதவுகிறது.

**மருத்துநீர் காய்ச்சப்படும் முறை :**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, விஷ்ணுகிராந்தி சீதேவியார் செங்கழுநீர், வில்வம் இலை, அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு முதலிய விசேஷ திரவியங்களை நன்னீரிற் காய்ச்சி பெறப்படுவதே மருத்துநீர் ஆகும். இது சிவாச்சாரியர்களினால் காய்ச்சி எல்லோருக்கும் வினியோகிக்கப்படுகிறது. மருந்துநீரை நாம் பெறும் போது சிவாச்சாரியாருக்குத் தக்ஷிணை கொடுத்து அவரின் ஆசியைப் பெற்று வாங்குதல் உத்தமம். விஷு புண்ணிய காலத்தில் மருத்துநீரை எமது சிரசிலே தேய்த்து நன்னீரில் நீராடல் வேண்டும்.

**புத்தாடை அணிதல் :**

புத்தாடை உடுக்கும் போது அதனை அணிந்த பின் அதன் அழகையும், பொலிவையும் கண்டு சகலரும் மகிழும் நிலையை இங்கு குறிப்பிடலாம். குலதெய்வங்களுக்கும் தம் இஷ்டப்படி புது ஆடைகளை அணிவித்து வரும் வழக்கம் எம்மிடையே நிலவிவருகிறது.

**புத்தாண்டுப் பொலிவு :**

புத்தாண்டு பிறக்குமுன் வீடு, கோவில் முதலானவை கழுவி மெழுகப்படும், வெள்ளையடிக்கப்படும், நிறமை பூசப்படும், மாவிலை தோரணம் போடப்படும், வண்ண வண்ணக் கோலங்கள் போடப்படும். இவற்றால் எங்குமே அழகு ததும்பும், பொலிவுபெறும். புத்தாண்டில் புத்தாடைகளையோ, தோய்த்துலர்ந்த ஆடைகளையோ அணிந்த பின்பே புத்தாண்டு பொங்கல் ஆரம்பமாகும்.

இல்லங்களிலே புத்தாண்டுப் பொங்கலானது சூரியோதயத்தையொட்டியே நடைபெறுகிறது. குடும்பத்தலைவி பசும்பாலைவிட்டுப் பொங்குவாள். பால் பொங்கும் திசைகண்டு சகலரும் இன்புறுவர். சிறுவர், சிறுமியர் வெடி, மத்தாப்பு கொளுத்தி மகிழ்வர். குடும்பத் தலைவன் பாசிப்பருப்புடன் கலந்த அரிசியைப் பொங்கற் பானையுட் போடுவர். மூன்று தடவைகள் இடமிருந்து வலப்புறமாகப் பானையைச் சுற்றியபின் அரிசியை இடுவர். அரிசி வேகும் நிலையில் சர்க்கரையும் சேர்க்கப்பட்டு பொங்கல் பொங்கப்படும். பொங்கற் பானையை இறக்குவதற்குச் சற்று முன்பாகக் கஜு, முந்திரிகை வற்றல், தூளாக்கிய ஏலம், நெய் என்பன எல்லாம் சேர்க்கப்பட்டு நன்றாகத் துளாவிச் சர்க்கரைப் பொங்கல் பொங்குவர். பின்பு இல்லத்தலைவர் கிழக்கு முகமாக நின்று பொங்கற் பானையைக் கீழே இறக்குவர். இதே வேளையில் புதுவருடப் பட்சணங்களைத் தயார் செய்யும் பணியில் பெண்கள் ஈடுபடுவர். முதலில் இனிப்பு பலகாரம் செய்யப்படும். பின்பு ஏனைய வகைவகையான பலகாரங்கள் செய்யப்படும்.

**வழிபாடு (வீட்டில்) :**

புத்தாண்டுக்கான வழிபாடு இனி ஆரம்பமாகும். சூரிய பகவானுக்கான படையல், பூஜை அறையில் உள்ள சுவாமிகளுக்கான படையல் என்பனவெல்லாம் தயார் செய்யப்படும். குத்துவிளக்கு, பூரணகும்பம், அஷ்டமங்கலப் பொருட்கள் என்பன வைக்கப்படும். மஞ்சள் பிள்ளையார் நடுநாயகமாக வீற்றிருப்பார். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் வணங்கிநிற்க இல்லத் தலைவன் பிள்ளையார் வழிபாடு செய்து சூரிய வழிபாடும் செய்வர். இதனையடுத்து வீட்டின் சுவாமி அறையில் பூஜைகள் இடம்பெறும்.

**ஆலய வழிபாடு :**

அடுத்து கோயில் வழிபாடு (சைவாலய வழிபாடு) ஆரம்பமாகும். சகலரும் தத்தமது இஷ்ட தெய்வ வழிபாடுகளைக் கோயிலுக்குச் சென்று நிறைவேற்றுவர். சைவாலய வழிபாடு சைவத்தமிழ்க் கலாசாரத்தோடு இணைந்தது. ஆலயங்களுள்ளே ஆண்கள் மேலங்கி (ஷேட்) அணிதலாகாது. சைவாசாரசீலம் வழிபாட்டினால் மேன்மையுறும்.

**சங்கிராந்தித் தீர்த்தம் :**

புதுவருடமானது எந்நேரத்தில் பிறக்கின்றதோ அதனையொட்டிச் சங்கிராந்தித் தீர்த்தம் கோயில்களில் இடம்பெறுகிறது. இராசி மண்டலத்திலே சூரியன் 30 பாகையுடைய ஓர் இராசியில் இருந்து அடுத்த இராசிக்குட் பிரவேசித்துச் சங்கமித்தல் மாதப்பிறப்பு எனப்படும். இப்படியான 'சங்கமிப்பு' அல்லது சங்கிரமித்து நடைபெறும் காலத்தில் சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுகிறது. புது வருடத்தையொட்டி இப்படியான சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுவதால் இது புத்தாண்டு தீர்த்த நாளாக அமைகிறது. இதன்பின்பே கோயில்களில் புத்தாண்டுப் பொங்கல் இடம்பெறும். புத்தாண்டையொட்டி வீடுகளில் சூரியோதயத்திலும், கோயில்களில் புத்தாண்டு பிறக்கும் நேரத்திலும் பொங்கல் இடம் பெறுவதை நாம் மனதிலிருத்திக் கொள்ளல் வேண்டும். சில கோயில்களில் புத்தாண்டுப் பொங்கல் மாலை வேளையில் இடம்பெறுவதுமுண்டு. இது பரம்பரை பரம்பரையாக வந்த வழக்கமாகும். குலதெய்வ வழிபாட்டின் மேம்பாடு காரணமாகப் புத்தாண்டுப் பொங்கல் கோயில்களில் பல்லாண்டு காலமாக இடம்பெற்று வருகிறது.

**வேப்பம்பூப் பச்சடி :**

புதுவருடப்பிறப்பன்று சுற்றத்தாருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் பொங்கல் சிற்றுண்டி என்பன வீட்டில் வழங்கப்படும். பின்பு வீட்டிலுள்ளோரனைவரும் புத்தாண்டு உணவை உட்கொள்வர். புத்தாண்டுக்கான மதிய போசனத்திற் சிறப்பான ஓர் அம்சம் இடம்பெறும். சித்திரை மாதத்திலே பூத்துக் குலுங்கி அழகுடன் நறுமணம் வீசும் வேப்பம்பூ பச்சடியாகத் தயாரிக்கப்படுகிறது வேப்பம்பூ வடகமும் செய்யப்படும். மதிய போசனத்தில் தித்திப்பு, உறைப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு முதலான அறுசுவை உண்டி புத்தாண்டன்று முக்கியமானதொன்றாகும்.

**கைவிஷேசம் :**

கொக்குவிலிலும், மட்டுவிலிலும் இருந்து "பஞ்சாங்கங்கள்" வெளிவருகின்றன. கணிதம், சோதிடம், வானசாத்திரம், மருத்துவம் ஆகிய துறைகளுடன் விஞ்ஞானபூர்வமாகக் கணிக்கப்பட்டு வெளியிடப்படுவது பஞ்சாங்கம். வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் என்பனவே அவை. பஞ்சாங்கம் கைவிசேஷ நேரத்தைக் கூறும். குடும்பத் தலைவர்

அவ்வேளையில் வெற்றிலையிலே பாக்கு, நெல், பூ, பணம் என்பன வைத்து வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏனையோருக்கும் அன்புடன் கொடுப்பது கைவிசேஷம் ஆகும். வருஷம் பிறக்கும் வேளையில் கைவிசேஷம் கொடுக்கும் மரபும் உள்ளது.

## புதுக்கணக்கு :

வியாபார நிறுவனங்கள் சுபவேளையில் பிள்ளையார் சுழிபோட்டுப் புதுக்கணக்கு எழுதும் வழக்கம் புத்தாண்டில் இடம்பெறும் இன்னொரு விசேஷமாகும். மாணவ, மாணவியர் நல்ல நேரத்தில் தமது பாடங்களைப் படிக்கத் தொடங்குவதும் புத்தாண்டுத் தினத்திலேயாம். மாதா, பிதா, குரு ஆகியோர் தெய்வங்களுக்குச் சமமானவர்கள் ஆவர். புத்தாண்டில் தந்தை, தாய், குரு ஆகியோரை வணங்கி அவர்களின் நல்லாசிகளைப் பெறுதல் எமது இன்னொரு மரபாகும். இன்று இம் மரபு பௌத்த சிங்கள மக்களிடையேயும் வேரூன்றிவிட்டது. தமிழர் பண்பாட்டிலிருந்தே இம் மரபு கடன் வாங்கப்பட்டுள்ளது. இன்று இம்மரபு தமிழ் – சிங்களப் புத்தாண்டின் ஒற்றுமையம்சமாக வந்துவிட்டது. சித்திரைப் புதுவருடத்தில் இனசன வீடுகளுக்கும் சிநேகிதர் வீடுகளுக்கும் சென்று விருந்துண்டு பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்வதும் நமது வழக்கமாகும்.

## விளையாட்டு :

பண்தொட்டுச் சித்திரைப் புதுவருடப் பிறப்பன்று விளையாட்டுகள் முக்கிய இடத்தை வகித்து வருகின்றன. போர்த்தேங்காய் உடைத்தல், கிட்டியடித்தல், சடுகுடு, தாச்சி மறித்தல் முதலானவைகளும் வருடப்பிறப்பன்று இடம்பெறும் பாரிய விளையாட்டுக்களாகும். இக்காலத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள கிறிக்கற், கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுகளும் இடம்பெற்று வருகின்றன. மிகமிகப் பழையனவும், புதியனவுமான விளையாட்டுக்கள் சங்கமிப்பதை புத்தாண்டிலே காணலாம். தமிழர் பரம்பரை பரம்பரையாக வாழும் சமதரையான வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 'மாட்டுவண்டிச் சவாரிப்' போட்டிகள் இடம் பெறுவதுண்டு. சங்க இலக்கியம் 'ஏறுதழுவல்' காளையை அடக்குவது என்ற வீரவிளையாட்டைக் குறிப்பிடும். காளை மாட்டுக்கு குறியடித்தும், நாணயக் கயிறு பூட்டியும் சவாரிபழக்கும் வழக்கம் இன்னும் அழிந்து போகவில்லை.

## வருடப்பிறப்பு மகோற்சவம் :

மானிப்பாய் மருதடிவிநாயகர் கோவிலிலும் வருடப்பிறப்பை யொட்டி மகோற்சவம் நிகழ்ந்து வருடப்பிறப்பன்று தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது. புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் சங்காபிஷேகம் நிகழ்ந்து விசேஷ அலங்கார உற்சவம் வருடப்பிறப்பன்று நிகழும் போது வடபகுதியிலுள்ள சகல விசேஷ மேளவாத்தியங்களும் இவ்வாலயத்தில் முழங்குவது ஒரு விசேஷ அம்சமாகும். தமிழ், சைவப்பண்பாட்டு மரபில்தான் இம் மங்களவாத்திய முறைமை செழித்து வளர்ந்துவந்துள்ளது. தவில்–பறை இரண்டின் முழக்கமும் மங்கலம், அமங்கலம் நிகழ்வுகளைச் சமூகத்திற்கு உணர்த்துவன என்பது பிரதானமான அம்சமாகும். அத்துடன் பறை கோயிலுக்கு வெளியில் நின்று அடிப்பது; தவில் கோயிலுக்கு உள்ளே வாசிப்பது. எனவே சைவாசாரப் பண்டிகையான வருடப்பிறப்பன்று சைவவழக்கிலுள்ள வேத மரபோடு தொடர்புடைய வழக்காறுகளே பெரிதும் இடம்பெறுகின்றன. பிறவனைத்தும் வேதவழக்காற்று மரபிற்கு முற்றிலும் முரணாக அமைவதனையும் நோக்குதல் வேண்டும். வேதவழக்குகள் போற்றிப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

(அகத்திய மாமுனிவரருளிய பாடலொன்று உலகமாதாவாகிய அம்பாளைக் குறித்தும், 'சித்திரைத் திங்களில் வந்தருள் செய்த தாயே' என்றும் வேண்டுவதாயமைந்துள்ளமை நோக்கற்பாலது. அப்பாடல் வருமாறு :

*"முத்தமிழ் போல் முக்கடல் சூழ் குமரிமுனை வளரும்*
*உத்தமியே ஸ்ரீ சக்கரந்தன்னில் உதித்தவளே*
*எத்தருணத்திலும் எனைப் பிரியாமல் எனக்கிரங்கிச்*
*சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே"*

*(அகத்தியர்)*

## சோதிட நம்பிக்கை :

பேரறிஞர் சிலர் சோதிடத்திலே அதிகளவில் நம்பிக்கை கொள்வதில்லை. எனினும் குடும்பவாழ்வென்று வரும்போது குடும்பத் தலைவியருக்குச் சோதிடக்கலையிலே பெரு நம்பிக்கையுண்டு. மாதங்களுட் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. சிகரங்களின் அசைவு பருவகாலங்களின் வேகம், இயல்புகள் எனுமிவைகள் சோதிடக் கலையிலுண்டு. மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றன. தேமாவும் தீம்பலவும் அரும்பழங்களைப் பாருக்கு நல்கி மக்கள் நாவினும் நல்ல சுவையினைக் கொடுப்பதும் சித்திரை மாதத்திலேதான். 'யக்ஞம்' எனப்படும் யாகம், உபநயனம், விவாகம் முதலியன வைதிகக் காரியங்களைச் செய்யவும் சிறந்தகாலம் இது. வருஷ ஆரம்பம் நன்றாக இருந்தால் ஆண்டெல்லாம் நன்மை தரும் என்பது நம் கொள்கை.

பருவகாலங்கள் ஆறினுள்ளும் சிறந்தது இளவேனிற் காலம். இவ்வேனிற் காலத்தின் முதல் மாதம் சித்திரை. கீதையிலே "ருதுக்களில் வசந்த ருதுவாக இருக்கிறேன்" என்று கீதாசாரியர் கூறுகிறார். சித்திரை நட்ஷத்திரம் பூரணையோடு சேர்ந்த காலமாதலால் சித்திரை மாதம் என்னும் பெயர்பெற்றது. இது இராசிச்சக்கரத்தினுள்ள பன்னிரு இராசிகளுள் ஆறாவதான கன்னி இராசியிலும் ஏழாவதான துலாராசியிலும் உள்ள நட்ஷத்திர மண்டலத்துக்குப் பெயர். அச்சுவினி முதலாக எண்ணும் வரிசையில் பதின்நான்காவது. அதாவது நடுநட்ஷத்திரம்.

சூரியன் மகரத்திற்குப் புகுந்து உத்திரத்தை நோக்குங்கால் அக்காலத்திற்கு 'மகரசங்கிராந்தி', "உத்தராயணம்' என்ற பெயர்கள் வழங்கிவருகின்றன. இருபெருஞ்சுடர்களான சந்திரனும், சூரியனும் களங்கமற்ற ஒளிதரும் புத்தாண்டிலே இரவும், பகலும் செவ்விய வானம் திசை போன்றும், பரந்தகடல் பாவைபோன்றும் விளங்கும். அப்பொருள் பற்றியே 'சித்திரை' என்ற பெயர் இடப்பட்டது போலும்.

கேரளத்தவர் வருஷப்பிறப்பன்று அதிகாலையிலே எழுந்தவுடன் முதலில் நல்லதைக் காணவேண்டும் என்று கனிவர்க்கம், காய்கறிகள், புதுவஸ்திரம், ஆபரணம், நவரத்தினம் முதலியவைகளை முதல்நாள் இரவே ஓரிடத்தில் கொலுபோல் அழகாக அமைத்து அதிகாலையில் தீபமேற்றி அதைத் தரிசித்து வழிபடுவர்; காலைக் கடன்களை முடித்துப் புதுவஸ்திரம் அணிந்து பெரியோரை நமஸ்கரிப்பர். பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலும் பெரியோரை நமஸ்கரிக்கும் பண்பாடு வேரூன்றி நிலவிவருகிறது. இம் மரபு இருபாலார்க்கும் பொருந்துவதாகும்.

பஞ்சாங்கப் பலன்களையும், நம்பிக்கையையும் சாடி – நம்பிக்கையின்றியிருப்பதனையும் அலட்சியப்போக்கையும் நாம் காணுகிறோம். எனினும் இனியெதிர்காலச் சந்ததி முற்றிலும் கணனி மயப்படும்பொழுது நிலைமை மிகமிக மோசமானதாகவே இருக்கும். ஆதலினாலே பஞ்சாங்கம் கூறும் திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பவற்றின் பயனை அறிந்தால் நம்பிக்கையினை ஏற்படுத்தும். திதி என்பது நன்மை – விருத்திசெய்வது; வாரம் என்பது ஆயுளை வளர்க்கும்; நட்க்ஷத்திரம் – பாவத்தை அகற்றும்; யோகம் என்பது ரோகத்தை நீக்கும்; கரணம் என்பது ஜயத்தை (வெற்றியை)த் தரும். ஒருவரின் வாழ்க்கையிலே இவையனைத்தும் முழுமை பெற்றுவாழ்வதற்கு இந்நம்பிக்கைகள் மிகமிக அவசியமானவையாகும். அவை தவறாது கடைப்பிடிக்கப்படவேண்டியவை. சித்திரைநாளிலே சித்திரகுப்த வழிபாடும் இடம்பெறுவதுண்டு. சித்திரைக்கஞ்சி வார்ப்பதுமுண்டு. தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிமாநகரிலே சித்திரகுப்தனுக்குத் தனியான சிறந்த ஆலயமுண்டு. யமனுடைய கணக்குப்பிள்ளையே சித்திரகுப்தர். அவரவர்செய்த நன்மை தீமைகளை எழுதி வைத்து, கடைசியில் உத்தரிக்கின்ற காலங்களில் அக்கணக்கை யமனது அரசவையிலே வாசிப்பவர் சித்திரகுப்தராவார். தஞ்சை மாவட்டத்தில் "ஸ்ரீ வாஞ்சியம்" என்ற இடத்தில் யமதேவனுக்குச் சந்நிதி இருக்கிறது. யமதேவனும், சனிபகவானும் சூரியனுடைய திருக்குமாரர்கள் என்று புராணம் கூறுகிறது. சித்திராபூரணையிலன்று போடப்படும் கோலத்தில் "தென்புறவாசலை" மூடியதுபோலப் போடுவது வழக்கம்.

## வருடப்பிறப்புப் பற்றிப் பஞ்சாங்கம் கூறுவன :

"..... புதிய வஸ்திரம் அணிந்து, முத்து பொன்னாபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, தத்தம் குலதெய்வ வழிபாடுகளைச் செய்து குரு, பெற்றார் முதலியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்றுச் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து இயன்ற தானதருமங்களியற்றிப் பந்துமித்திரர்களுடன் அளவளாவி அறுசுவை உண்டிகளுடன் பாற்சோறு, தேன் சேர்த்தருந்தித் தாம்பூலம் தரித்துக் கண்ணாடியில் முகதரிசனம் செய்து புதியவருஷ பலன்களை வாசித்தும் கேட்டும் மங்களகரமாக வாழக்கடவர்". இவையே வருஷப்பிறப்பு நிகழ்வு பற்றிய இந்துப்பண்பாட்டு அம்சங்களாகும்.

**உசாவியவை**


1. சச்சிதானந்தம். இ (1966), சைவசமயநோன்புகளின் கையேடு, யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டன் சபை வெளியீடு, நியூ கீன் அச்சகம், மட்டக்களப்பு.
2. குஹானந்தசர்மா.சோ, (1992) இந்துசமய விழாக்களும் விரதங்களும் (இலவச வெளியீடு), இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.
3. முத்தையா. நா (ஆத்மஜோதி), (1978), பன்னிருமாத நினைவுகள், அரசாங்க அச்சகம், கொழும்பு–08.
4. வெங்கடேச ஐயர். இ. (2000–2001) வாக்கிய பஞ்சாங்கம் (Tamil Almanai, 2000-2001) சோதிடப்பிரகாச யந்திரசாலை கொக்குவில்.


## சிறைச்சாலையிலுள்ள தமிழ் இளைஞர்களுக்காக பொருட்கள் அன்பளிப்பு

கடந்த காலங்களில் போர்க்கால சூழ்நிலைகளின் போது சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு மகசீன், வெலிக்கட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள், யுவதிகளுக்காக இவ்வருட தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடம், சித்திரா பூரணை ஆகிய சிறப்பு நிகழ்வுகளை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஊடாக பலவித நிவாரணப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சமூக சேவையாளரான கொழும்பு, வெள்ளவத்தையைச் சேர்ந்த திரு. எஸ். கிருபானந்தமூர்த்தி அவர்களும், அவரது நண்பர்களும் இணைந்து மேற்படி நிவாரணப் பொருட்களை அன்பளிப்புச் செய்திருக்கிறார்கள். தைப்பொங்கல் தினத்தின்போது சவர்க்கார வகைகள், பற்பசை, பற்தூரிகை, துவாய், வேட்டி, சாரம் மற்றும் உடுப்பு வகைகள், திருக்குறள் நூல்கள் என ரூபா 267,407/= பெறுமதியான பொருட்களும், சித்திரைப் புதுவருடத்தின்போது சவர்க்கார வகைகள், பற்பசை, பற்தூரிகை, துவாய், சாரம் மற்றும் உடுப்பு வகைகள், அங்கர் பால்மா, திருக்குறள் நூல்கள் உட்பட கடலை, உளுந்து, தேங்காய் எண்ணெய், பொங்கிப் படைப்பதற்குத் தேவையான அரிசி மற்றும் அதனுடன் இணைந்த பொருட்களுடன் பூசை வழிபாட்டுக்குத் தேவையானதுமான மொத்தம் ரூபா 177,692/= பெறுமதியான பொருட்களும் மகசீன், வெலிக்கட சிறைச்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவைதவிர, மாமன்றத்தின் அன்பளிப்பாக தைப்பொங்கல் தினத்தின்போது பொங்கல் பூசைக்காக 52,000/= ரூபா பெறுமதியான பொருட்களை வெலிக்கட, மகசீன், மஹர ஆகிய சிறைச்சாலைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மாமன்றத்தின் ஊடாக மகசீன், வெலிக்கட சிறைச்சாலைகளுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருட்களை மாமன்றப் பிரதிநிதிகள் அந்தந்த சிறைச்சாலைகளுக்கு நேரில் சென்று கையளித்தார்கள். மாமன்றத்தின் வெளியீடுகளான இந்து ஒளி, சிவவழிபாட்டு மலர் பிரதிகளும் வழங்கப்பட்டன. தைப்பொங்கல் தினத்தையொட்டி வழங்கப்பட்ட நிகழ்வின்போது விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா, கலாநிதி மு. கதிர்காமநாதன், திரு. ந. கார்த்திகேயன், திரு. எஸ். கிருபானந்தமூர்த்தி, திரு. அ. கந்தசாமி ஆகியோரும், சித்திரைப் புதுவருடத்தையொட்டி வழங்கப்பட்ட நிகழ்வின்போது விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா, கலாநிதி மு. கதிர்காமநாதன், திரு. எஸ். கிருபானந்தமூர்த்தி, திரு. தே. கிரிதரன், திரு. அ. கந்தசாமி, சிவஸ்ரீ க. கி. நாராயணக் குருக்கள் ஆகியோரும் மாமன்றத்தின் சார்பாகக் கலந்து கொண்டனர்.

சித்திரா பூரணை விரதத்தை அனுஷ்டித்த மகசீன், வெலிக்கட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 150 பேருக்குத் தேவையான ரூபா 15,000/= பெறுமதியான அரிசி மற்றும் உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகளையும் மாமன்றம் அன்பளிப்பாக வழங்கியிருந்தது. மாமன்றத்தின் சார்பாக விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா, திரு. தே. கிரிதரன் ஆகியோர் நேரில் சென்று மேற்படி அன்பளிப்புப் பொருட்களை வழங்கினார்கள்.

கடமை, பக்தி - இவை இரண்டுமே சமமானவை. கடமை செய்பவன் கடவுளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. பக்தி செய்பவன் கடவுளைத்தான் பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும். *(ஸ்ரீவேணுகோபாலன்)*

தன்னிடத்திலும், எல்லா உயிர்களிடத்திலும் இறைவனைக் காண விரும்புபவன். தன்னோடு பழகுபவர்கள் அனைவரும் இறைவனின் வடிவம் என்ற உணர்வுடன் பழகுவதை முதலில் கைக்கொள்ள வேண்டும். *(சுவாமி பிரேமேஷானந்தர்)*



# வைகாசி விசாகம்



தெய்வத் தமிழிசைச் செல்வர்
நயினை சுப்பிரமணியம் கனகரெத்தினம்

இந்துப் பெருமக்கள் பண்டை தொட்டு இன்றுவரை ஒவ்வொரு மாதத்திலும் ஒரு சிறப்பான விழாவைக் கொண்டாடி பேரருள் பெறுகின்றனர். இந்த வகையில் சித்திரை வைகாசி மாதங்கள் வசந்த காலங்கள் ஆகும். சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களில் இம் மாதங்களில் வசந்த விழாக்கள் கொண்டாடப்படுகிறது. இந்த வசந்த நன்னாட்கள் முழுநிலவுடன் கூடிய சித்திரை நட்சத்திரத்தில் சித்திரைப் பெருவிழா முடிவடையும். அதேபோல் வைகாசி மாதத்தில் முழுநிலவுடன் கூடிய விசாக நன்னாளில் முருகப் பெருமான் அவதரித்து அன்பர்களுக்கு வேண்டியவற்றை அள்ளி வழங்கி முடிவு பெறும் நன்னாள் மிகவும் சிறப்பானது. வைகாசி விசாகத்தை "நட்சத்திர" விரதமாக இந்துக்கள் தொன்று தொட்டு அனுஸ்டித்து வருகிறார்கள்.

நமது சைவ விரதங்களில் நாள் விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம்; பாவை விரதமென பல்வேறு விரதங்கள் அனுஸ்டிக்கப்படுகிறது. இந்த வைகாசி விசாக நன்னாளில் உலக மக்கள் மட்டுமன்றி தேவர்களும் தங்கள் துன்பங்கள், துயரங்கள் நீங்கி இறை அருளோடு வாழ முருகப்பெருமான் அவதரித்த நன்னாள் என்றால் மிகையாகாது.

தென்னாடுடைய சிவன் என் நாட்டவர்க்கும் அதிபதி. அந்த சிவனுக்கு ஐந்து முகங்கள் என்று வேதங்களால் பேசப்படுகின்றன. அப்படி இருந்தும் உலகில் அதர்மம் தலைதூக்கி, அசுரர்களால் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் துன்பம் நேரிட்டதால் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட இறைவன் ஐந்து முகத்தோடு தனது நெற்றிக் கண்ணாகிய அதோ முகத்தை விழித்து முருகப்பெருமானைத் தோற்றுவித்த நன்னாளே வைகாசி விசாகம். அதோடு பூரணையும் சேர்ந்து முழுநிலாவுடன் காட்சி தரும் நன்னாள். இந்த நன்னாளில் சிவனுடைய நெற்றிக்கண்ணிலே இருந்து அக்கினிப் பொறியாகச் சரவணப் பொய்கையிலே விழுந்த ஆறு அக்கினிப் பிளம்புகளையும் உமையவள் பரிந்தெடுத்து அணைத்துத் தாயாகி நின்று இத்தாரணி துன்பமில்லா வாழ்வு பெற கந்தனெனும் மைந்தனைத் தந்தருளினாள். இதனாலேயே ஆறுமுகனை "உமையாள் பயந்த இலஞ்சியமே" என அருணகிரியார் அழைத்தார். பயந்தவன் என்ற சொல் பெற்றவன் என்ற பொருளிலே வந்துள்ளது. அப்பர் திருமுறையிலும் "நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" என்று சிவனைச் சுட்டும் பொழுதும் உமையும் கடம்பனும் கூடவே பெயரிட்டழைக்கப்படு கின்றனர்.

அக்கினி நீரிலே பாய்ந்ததால் இறுகியது. எனவே உறுதியான, திடமான வடிவும் வனப்புமுடைய திருவுருவம் தோன்றியது. அதாவது சிவனது நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய நெருப்புப் பொறியானது சரவணப்பொய்கையிலே உதித்ததால் அது இறுகித் திருமேனியாயிற்று. இச் செய்தியை கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தில்,

*'அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாயொன்றாய்ப்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்*
*கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே*
*ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய'*

என்று புகழ்ந்துள்ளார். இப்பாடலிலே சோதிப்பிழம்பின் திருப் பெருவடிவம் விரிவாகப் பேசப்படுகின்றது. அருவம், உருவம் ஆகிய பொருளாகவும், அநாதியான பொருளாகவும், பலவாகக் காட்சி தரும் பொருளாகவும் ஒன்றாக ஏகமாகத் தன் முதலாகிய பொருளாகவும் விளங்கும் பிரம்மமான சோதியான ஈசன் தாமே திருமேனியாகிக் கருணைகூர் முகங்கள் ஆறும் கொண்டமைந்ததுடன், பன்னிரு திருக்கரங்களையும் கொண்டு இந்த உலகமானது உய்வடையும் பொருட்டாக வந்து தோன்றினன். "உதித்தனன்" என்று மிகச் சிறப்பாகக் கூறப்படுவது தனி மனித மேம்பாட்டுக்கான அவதாரமல்ல. முருகனவதாரம் என்பதனையே "உதித்தனன் உலகமுய்ய' என்று செப்புவதால் அதனை அனைவரது இடுக்கண்களையும் களைந்தெறிதற்குரிய தோற்றமே முருக அவதாரம் என்ற கருத்தை வலுப்படுத்தி நிற்கிறார் கச்சியப்ப மாமுனிவர்.

சிவனே முருகன் என்ற உண்மையும் திண்மையாகப் புலப்படுகின்றது. அடியவர் மிடி களையவும் ஆறுதல் அளிக்கவும் ஆறுமுகக் கடவுள் அவதாரம் நிகழ்ந்ததை அருணகிரிநாதர் "ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டு"மென வேண்டு கிறார். அவருடைய பாடலில்,

*"ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே*
*ஈசனொடு ஞானமொழி கூறுமுகம் ஒன்றே*
*கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே*
*குன்றுருக வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே*
*மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே*
*வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே*
*ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்*
*ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே"*

என்று கூறுகின்றார்.

சைவ சமயத்திலே பல தெய்வங்கள் போற்றிப் புகழப்பட்டாலும் அத்தெய்வங்களுள் சிறந்த தெய்வமாகத் திகழ்ந்து படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் தாமே ஏற்றுச் செய்த முழுமுதற் பொருளாகத் திகழ்பவர் முருகப் பெருமான். அன்பர்களின் அன்புக்கு இரங்கி அவர்கள் கருதிய வடிவில், அவர்கள் இருக்கும் இடம் நாடிச் சென்று, அவர்களிடத்தே, தானும் அன்பினால் பெருக்குற்று அவர்கட்கு வேண்டும் வரங்களைத் தந்தருளும் தனிப்பெருந் தெய்வமாகத் திகழ்பவர் முருகப்பெருமான். எனவேதான் அவர் தெய்வங்களுள் மணியான 'தண்முகத் துய்யமணி, உண்முகச் சைவமணி, சண்முகத் தெய்வமணியே' என்று இராமலிங்க சுவாமிகள் புகழாரம் சூட்டுகிறார்.

போர்புரிவதில் சேவல் சிறந்த பறவையாதலின், போரில் வல்ல முருகனுக்கு அதனைக் கொடியாகவும், குறிஞ்சிநிலக் கடவுளானதினால் குறிஞ்சி நிலத்து மலராகிய கடம்ப மலரை முருகன் விரும்பியணியும் மலராகவும், அந்நிலத்து மயிலை முருகனின் வாகனமாகவும் கொண்டு பண்டைத் தமிழர் போற்றியுள்ளனர்.

சேவலும் மயிலும் முருகனது ஈர்ப்பிலே என்றும் இயங்குபவை. இயற்கையோடொட்டிய சில ஒற்றுமைப்பாடான இயல்புகள் சேவலுக்கும் மயிலுக்கும் உண்டு. கார்மேகத்தினைக் கண்டவுடன் ஆண் மயில் தோகையை விரித்து ஆடுகிறது. மயிலிறகிலே சூரியனது ஏழு நிறங்களும் உள்ளன. மயிலின் தோகை இயற்கையமைப்பே ஈர்ப்புச் சக்தியுடையதாக அமைந்துள்ளது. மயில் தோகை விரித்தாடும்போது ஓங்காரத்தத்துவம் பளிச்சிடுகிறது. மயிலேறிய மாணிக்கம் முருகன்.

அதிகாலையில் எல்லா உயிர்களும் மாயையாகிய இருளில் மூழ்கி நித்திரை செய்து கொண்டிருக்கும் வேளையில் அந்த மாயை என்னும் இருளைபோக்க, ஆதவன் கீழ்வானத்தில் கதிர்களை வீசிப்புறப்பட இருக்கும் வேளையில் சேவல் தன் சிறகை அடித்துக் கூவி மனிதனை பிரம்ம முகூர்த்தத்தில் இறைசிந்தனை செய்யத் தூண்டுகிறது.

முருகன் தன்புகழைப்பாட அருணகிரிநாதரையும் தன்வரலாற்றைப் புராணமாக எழுத கச்சியப்ப சிவாச்சாரியாரையும் வேண்டுகிறார். "அருணகிரி! நம் திருப்புகழை உலகம் உய்யப்பாடு" என்று நாவிலே பிரணவத்தை எழுதிப் பணித்தார். அதனை அருணகிரிநாதர் "செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பொடு செப்பென எனக்கருள் கை மறவேனே" என்று பாடுகிறார். காஞ்சி மாநகரிலே முருகனின் கனவிலே தோன்றி "திகடசக்கரச் செம்முகமைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து கந்தபுராணத்தை எழுத வைத்தார். கந்தபுராணம் எழுதி முடிந்து காஞ்சி குமரகோட்டத்தில் அரங்கேற்றம் நடைபெற எங்கும் அலங்காரப் பந்தல்கள் தோரணங்கள் போடப்பட்டு பந்தல் அமைத்து அவைக்கு கல்விமான்கள், பண்டிதர்கள் சைவ அருளாளர்கள் என்று பெருந்திரளானோர் கூடியிருக்க கச்சியப்ப சிவாச்சாரியார் அவையிலே எழுந்து இறைவனால் அடி எடுத்துக் கொடுத்த 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்று பாட அவையில் கூடியிருந்த பண்டிதர்களும் கல்விமான்களும் "திகடசக்கரம்" என்று தொடங்கிய பதம் பிழையெனத் தூக்கியெறிந்து சபையில் இரைச்சல் ஒலிக்க சபை கலைந்தது. கச்சியப்ப முனிவரும் பெரும் கவலையடைந்து முருகன் ஆலயத்தில் உணவு உண்ணாமல் பெரும் சோகத்தோடு படுத்துறங்கினார். முருகன் மீண்டும் கனவிலே தோன்றி "கவலை வேண்டாம் நாளை சபையைக் கூட்டி அரங்கேற்றத்தைச் செய். நானே அங்கு வந்து பிழைக்கு ஆதாரம் காட்டுவேன்" என்று கூறி மறைந்தார். மறுநாள் மிகவும் கோலாகலமாக விழா ஏற்பாடு செய்யப்பட்டு எல்லோரும் அவையில் கூடியிருந்தனர். கச்சியப்ப சிவாச்சாரியாரும் எல்லாம் முருகன்செயல் என்ற நம்பிக்கையோடு அவையிலே எழுந்து முதல்நாள் பாடியபடியே "திகடசக்கரச் செம்முகம்" என்று சொல்லியதும் எல்லோரும் எழுந்து கூச்சலிட்டு திரும்பவும் முதல் நாள் பிழை இன்றும் வந்துள்ளது என்று கூறி பரபரப்பை ஏற்படுத்த, அவ் அவையிலே இருந்த செந்நிற மேனியும் திருநீற்றுத் தீட்சையும் மார்பில் உருத்திராக்கமாலையும், பாதித் தலை முடியில் சிறிய குடும்பியும் பூநூலும், பொட்டும் கையில் ஓலைச்சுவடியுடன் எழுந்து மேடைக்கு வந்து எல்லோரையும் அமைதியாக அமரச் சொல்லி ஓலைச்சுவடியை கயிறு அவிழ்த்து விரித்து "திகடசக்கரச் செம்முகம்" என்பதற்கு வீரசோழியம் என்னும் நூலில் விரிவாக உரை கூறப்பட்டுள்ளதால் இதில் பிழையேதும் இல்லை என்று கூறி மேடையை விட்டிறங்கி மறைந்து விட்டார். எல்லோரும் தேடியும் காணாமல் முருகனே பிரதித்தமாகி பொருள் கூறிவிட்டான் என்று ஆச்சரியப்பட்டு தம்மை மன்னிக்க முருகனை உருண்டு புரண்டு தொழுதேத்தி வேண்டினார்கள். இப்படியாக சேவல், மயில், திருப்புகழ், கந்த புராணம் எல்லாமே அவனே தான்.

முருகனுடைய கையில் இருப்பது சக்தி வேல். சிவசக்தியால் சூரனை அழிக்க கொடுக்கப்பட்ட வேல். வேலின் அடிப்பாகம் நீண்டு நிலத்தில் ஊன்றி நிற்கிறது. தலைப்பாகம் அகன்று விரிந்தும், நுனிப்பாகம் கூர்ந்தும் குவிந்தும் கூர்மையாகவும் அமைந்திருக்கிறது. இந்த வேலின் தத்துவமானது நமது அறிவும் செயலும் வேலின் அடிப்பாகம் போல் நீண்டு உலகத்தில் ஊன்றி நிலைத்து நிற்கவேண்டும். தலைப்பாகம் விரிந்த ஞானமும் அகன்ற மனமும் பெறவேண்டும். நுனிப்பாகம் போல் மதிநுட்பமும் சிந்தனையும் கூர்மையாக இருக்க வேண்டும்.

ஒருமுறை பராசர முனிவரது மக்கள் மீன்களைப் பிடித்து விளையாடியதால் தந்தையின் சாபம் பெற்று சரவணப் பொய்கையில் மீன்களாகித் திரிந்து கொண்டிருந்தனர். சரவணப் பொய்கையில் சிவனுடைய முகத்தில் இருந்து தோன்றிய தீப்பொறிகள் விழுந்து ஆறுகுழந்தைகளாக உருவெடுக்க, உமாதேவியார் அறுவரையும் அணைத்து முத்தமிட்டு பால் ஊட்டும் போது குழந்தைகளின் வாயில் இருந்து பால் வழிந்து பொய்கையில் கலக்க அந்தப்பாலைப் பருகிய பராசர முனிவரது பிள்ளைகள் சாபம் நீங்கி முன்னைய வடிவம் பெற்றனர். முருகப் பெருமான் வைகாசி விசாகத்தன்று பராசர முனிவர்களின் குழந்தைகளுக்கு சாப விமோசனம் அளித்தருளினார். அதுமட்டுமல்லாமல் சூரிய பகவான் வைகாசி விசாகத் திருநாளன்று முருகப்பெருமானை வழிபடுவதாகவும் ஐதீகம் உண்டு. இப்படியாக வைகாசி விசாக நன்னாளில் உதித்த முருகன் அருள் தேங்கிய திருமேனி கொண்டு ஆங்காங்கும் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களின் தீராவினைகளையும் தீர்த்துக் கொண்டிருப்பானாயினும், சூரபத்மனுடன் போர் செய்ய எழுந்தருளிய அவனது படைகள் தங்கி இருந்த இடம் ஆறு. அந்த இடங்களையும் ஆறுபடை வீடுகள் என்று அழைக்கிறார்கள். படைவீடுகள் என்றால் படை தாங்கிய இடங்கள் எனப் பொருளாகும். சிலர் திருமுருகாற்றுப்படை என்னும் சங்க நூலின் பெயர் பொருத்தம் கொண்டு ஆற்றுப்படுத்திய இடமே ஆறுபடை வீடு எனப் பெயர் உண்டாயிற்று என கூறுவர். சிலர் முருகன் ஆறு நிலையில் எழுந்தருளியுள்ள தலங்களே ஆறுபடை வீடெனப் பெயர் பெற்றது என்பர். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன் குடி(பழநி) திருவேரகம்(சுவாமிமலை) குன்றுதோறாடல் (திருத்தணி) பழமுதிர் சோலை என்பனவாகும்.

இந்திரன் மகள் தெய்வானையை திருமணம் செய்த இடம் திருப்பரம்குன்றம் என்றும், சூரனை வதைத்தது திருச்செந்தூர் என்றும், பழத்திற்காக வலம் வந்து பழம் கிடையாமையால் தந்தை தாயாரை விட்டு ஆண்டிக் கோலமாய்த் தங்கிய இடம் பழநி என்றும், தந்தைக்கு பிரணவப் பொருள் உணர்த்திய இடம் சுவாமிமலையென்றும், வள்ளியைத் திருமணம் செய்தது திருத்தணியென்றும், வள்ளி தெய்வானையோடு ஆறுமுகத்துடன் மயில் மீதமர்ந்து அடியார்களுக்கு காட்சியளித்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இடம் பழமுதிர் சோலை என்றும் கூறுவர்.

புறத்தே காணும் இந்த ஆறுபடை வீடுகளையும் அகத்தே காணும் ஆறு அவதாரத் தலங்களாகவும் குறிப்பிடுவதுண்டு. திருப்பரம்குன்றம்–மூலாதாரத்தலம், திருச்செந்தூர்–சுவாதிஷ்டானத்தலம், திருவாவினன்குடி–மணிபூரகத்தலம், திருவேரகம்–அனாகத்தலம், குன்றுதோறாடல்–விசுத்தித்தலம், பழமுதிர்சோலை–ஆக்ஞைத்தலம்.

இதனிடையே போக முனிவர் அவருடைய சௌன சாகரத்தில் 315ம் பாடலில் திருக்குழுக்குன்றம் முருகனின் நாலாவது படைவீடாகக் குறிப்பிட்டிருக்கிறார். முருகனே கூறுவது போல் அமைந்த அப்பாடல் வருமாறு:

*"நிரைத்திட்டேன் யானிருக்கும் மூலம் சொல்வேன்*
*நிலையான வரையானும் தலங்களாகி*
*அரைத்திட்ட ஆவினன்குடியும், பரங்குன்றம்*
*அழகான திருத்தணிகை கழுக்குன்றம்*
*பளாத்திட்ட ஏரகமும் செந்தூராகும்*
*பரிவான தலமாறும் நாம் தாமே!"*

முருகப்பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் வேறுபாடு என்பதே கிடையாது. முருகனைப் பாலகனாய் நினைந்து போரிட நினைத்த சூரபத்மனுக்கு முன் முருகன் விசுவரூபம் எடுத்து நின்றார். சூரனே நீ பல வடிவங்களை எடுத்ததைக் கண்டேன். நீயும் என் வடிவங்களைப் பார் என்று உரைத்தார். திடீரென பெரிய வடிவமாக செக்கச் சிவந்த திருமேனியாக திகழ்ந்த வடிவத்தில் பெரிய மலைகள் அவரது திருப்பாதங்களில் இருந்தன.கால்விரல் கடல் வரை இருந்தன. நட்சத்திரங்கள், மின்னல்கள், நவக்கிரகங்கள் ஆகியவை அவரது கணுக்காலில் காணப்பட்டன. முனிவர்கள் முழங்காலுக்கு அடியிலும், சிந்தாமணி முழங்காலிலும், தொடைகளில் இந்திரன் ஜெயந்தன் முதலானவர்களும் காணப்பட்டார்கள். இடுப்பின் சந்திப்பில் யமனும், விலாக்களில் தேவர்கள், இடுப்பில் அரக்கர்கள், நாகர்கள் இருந்தனர். தொப்புளில் அனைத்து உற்பத்திகளும், மார்பில் சாஸ்திரங்களும், உடல் ரோமங்களில் கோடிக்கணக்கான பிரமாண்டங்களும் காட்சியளித்தன.

இருகைகளிலும் பிரம்மாவும், விஷ்ணுவும், கைவிரல்களில் தேவமாதர்களும், கழுத்தில் சொற்களும், நாக்கின் நடுவில் வேதங்களும், பற்களில் அட்சரங்களும், நாக்கு முழுவதற்குமாக சிவாகமங்களும், உதட்டில் சப்த கோடி மகா மந்திரங்களும் அடங்கியிருந்தன. மூக்கில் வாயு, கண்களில் சூரிய சந்திரர், காதுகளில் திசைகள், நெற்றியில் ஓங்காரமும் இருந்தது.

இவரது விஸ்வரூபத்தைக் கண்டு அனைத்து தேவர்களும் சிரசில் கரம் கூப்பி வணங்கினார்கள். அப்போதுதான் சூரபத்மனுக்கு ஞானம் உதயமாயிற்று. இப்படியான பேரருள் நிறைந்த முருகப்பெருமான் அவதரித்த அந்நாளில் விரதமிருந்து,

*பன்னிரு கரத்தாய் போற்றி பசும் பொன் மாமயிலாய் போற்றி*
*முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி*
*கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி*
*என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி!'*

என்று அவனுடைய திருப்பாதங்களை வணங்கி பேரருள் பெறுவோமாக !

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாமன்றத்தின் நிதியுதவி தொடருகிறது

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்துவிட்டு யாழ். பல்கலைக்கழகம் திரும்பிய பட்டதாரி மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தொடர்ந்தும் நிதியுதவி செய்து வருகிறது. வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக இவர்கள் ஒவ்வொருவருக்கும் 10000/= ரூபா வீதம் மாமன்றத்தால் வழங்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதியன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இது தொடர்பாக நடந்த நிகழ்வின் போது 43 மாணவர்களுக்கும் அதன் பின்னர் 3 மாணவர்களுக்குமாக மொத்தம் 46 மாணவர்களுக்கு ரூபா. 10000/= வீதம் வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவு வழங்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழகம் சார்பாக உதவிப் பதிவாளர் திரு. யோ. ஜெயக்குமார், விரிவுரையாளர்களான கலாநிதி கி. விசாகரூபன், திரு. அ. ம. கொன்ஸ்ரன்ரைன் ஆகியோரும், மாமன்றத்தின் சார்பாக மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், மாமன்ற யாழ். பிராந்திய பணிமனை நிர்வாக அலுவலர் திரு. வீ. ஜெயசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்வின்போது, வன்னியிலிருந்து இடப்பெயர்வுக்குள்ளாகிய யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடந்த வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக கட்டம் கட்டமாக நிதியுதவி வழங்கி வரும் மாமன்றத்தின் நற்பணியை பலரும் பாராட்டியதுடன், எதுவித ஆடம்பரமும் இல்லாமல் அமைதியான முறையில் மாமன்றம் ஆற்றிவரும் இத்தகைய கைங்கரியம் வெகுவாகப் போற்றத்தக்கது என்றும் தெரிவித்தார்கள்.

நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சார்பாக, செல்வி விக்னா கனகலிங்கம் நன்றியுரை வழங்கினார். இந்தக் கொடுப்பனவுக்குரிய நன்கொடையாக அவுஸ்திரேலியா, சிட்னி நகரிலுள்ள யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கிளையினர் 500, 950/= ரூபாவை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மேலும் 45 மாணவர்களுக்கு கடந்த மே மாதத்தில் வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக, ஒவ்வொருவருக்கும் ரூபா 10.000/= வீதம் வழங்கப்பட்டுள்ளது. மனிதநேய நிதியத்தின் நன்கொடையாகக் கிடைத்த 4,50,000/= ரூபா நிதியுதவியே மாமன்றத்தின் ஊடாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்துவிட்டு வடக்கு–கிழக்கு பகுதிகளிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு திரும்பிய பட்டதாரி மாணவர்களுக்கு மாமன்றம் கடந்த வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக நிதியுதவி செய்து வருகிறது. மாமன்றத்தின் இத்தகைய சமூகநலப் பணிக்கு லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையும், மனிதநேய நிதியமும் நிதியுதவி வழங்கி பெரும் பங்களிப்புச் செய்து வருவதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

மாமன்றத்தின் தலைவரும் திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவலர் சபைத் தலைவருமான மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களை தலைவராகக் கொண்டு மனிதநேய நிதியம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



# நாவலர் வழியில் செயல் வீரர் "இந்துபோர்ட்" சு. இராசரத்தினம் அவர்கள்



கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் ஆற்றிய சைவ, தமிழ், கல்விப் பணிகள் அரியனவும் பெரியனவும் ஆகும். அப்பணிகள் "காலத்தினாற் செய்த நன்றி" அதனால் அவை "ஞாலத்தில் மாணப்பெரிது" ஆகும். நாவலர் வாழ்ந்த காலம், இலங்கையில் அந்நிய ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். எமது தமிழ் மொழி, சைவசமயம், தமிழ் மரபுக்கல்வி, பண்பாடு, கலாசாரம் என்பன அந்நிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு இலக்காகி மங்கி மறைந்து விடுமோ என்ற அச்சம் மேலோங்கியிருந்தது. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் அநுசரணையோடு கிறிஸ்தவ மிஷனரிமார் கல்விக் கூடங்கள் ஆரம்பித்து நடத்தினர். மதமாற்றத்திற்கு அக் கல்விக் கூடங்கள் உதவியாக இருந்தன. ஆங்கிலக்கல்வி அரச உத்தியோகம் பெறுவதற்கும் உயர் ஊதியம் பெறுவதற்கும் வழிசெய்தன. ஆங்கிலேய கலாசாரம், பண்பாடு, மற்றும் நடை, உடை, பாவனை என்பவற்றில் மோகங்கொண்டு நம்மவர்கள் பலர் அவற்றை பின்பற்றத் தொடங்கினர். சைவமும் தமிழும், தமிழ்க்கல்வியும், சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களும் இடுக்கண்ணுக்கு உள்ளாகின. இத்தகைய ஒரு இக்கட்டான கால கட்டத்தில்தான், நாவலர் பெருமான் தமது சைவசமயப் பணியையும், கல்விப் பணியையும் ஆற்ற முன்வந்தார்.

"சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும்" என்னும் பெருவிருப்பம் நாவலர் பெருமானின் உள்ளத்திலிருந்து பொங்கியெழுந்தது.

இலங்கையை கி. பி. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து 1948 ஆம் ஆண்டு வரை, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் அரசாட்சி செய்தனர். அதனால் எமக்கு ஏற்பட்ட தீய விளைவுகள் பற்றிப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"பறங்கியர், ஒல்லாந்தர் காலத்திலே சைவசமயத்திற்கு வந்த வருத்தம் சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித்தோல் வருத்தம். உள்ளூரச் சமயம் உயிரைப் பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்துக்கு வந்த வருத்தம் கச வருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம் அது. உட்பகையான வருத்தம். புறப்பகையில் உட்பகை பொல்லாதது".

போர்த்துக்கேயரைப் பறங்கியர் என்றும் அழைப்பர். திருநெல்வேலி தந்த ஞானப்பிரகாசர், போர்த்துக்கேயர் ஆண்ட காலத்தில் வாழ்ந்தவர். அவர் பசுக்கொலைக்கு அஞ்சி சொந்த நாட்டைவிட்டுப் பரதேசம் சென்றவர். யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த பறங்கிப் படைத்தளபதியும் பரிவாரமும் உண்பதற்குத் தினசரி ஒவ்வொரு வீட்டாரும், குறித்த ஒழுங்கு முறையில் ஒவ்வொரு பசு கொடுக்க வேண்டும் என்பது அரச கட்டளை. பசுவைக் கோமாதாவாகப் பூசித்து வரும் சைவர்களுக்கு இது பேரிடியாக இருந்தது. இக் கொடுங்கோன்மைக்குத் தீர்வுகாண வேண்டிப் பரதேசம் சென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். சிதம்பரத்தில் நாற்பது நாள் உபவாசம் இருந்து கடும் தவம் புரிந்தார். அநுக்கிரகம் பெற்றார். முனிவர் ஆனார். பறங்கியர் அரசு ஒடுங்கியது.

சுவாமி ஞானப்பிரகாசரின் தவம் திரண்டு, அவர் மரபில் ஆறுமுக நாவலர் தோன்ற ஏதுவாயிற்று என்பர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை. ஆறுமுகநாவலர் தோன்றிப் பணி செய்த பத்தொன்பதாம் நூற்றாண்டு, சைவத் தமிழ்மக்கள் தமது சமய தமிழ்ப் பண்பாட்டு பாரம்பரியத்தினையும் சுயாதிக்கத்தையும் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த இருள்சூழ்ந்த காலம் ஆகும். கிறிஸ்தவமும் ஏகாதிபத்தியமும் இணைந்து காணப்பட்ட நிலையில் மதமாற்றமும், ஐரோப்பிய கலாசாரத் திணிப்பும் முட்டின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆங்கிலம் அரசகரும மொழியாக விளங்கியது. உத்தியோகம் பெறுவதற்கு ஆங்கிலம் கற்கவேண்டியிருந்தது. ஆங்கிலக் கல்லூரிகள் கிறிஸ்தவ மிஷனரிமாரின் முகாமையின் கீழ் இயங்கின. சைவசமய இளைஞர்கள் தம் சமய நெறியை இழந்து புறச்சமயச் சூழலில் கல்வி கற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையிலேயே, சைவ நெறியையும், தமிழ்ப் பண்பாட்டையும் கல்விக் கூடங்கள் மூலமே பாதுகாக்க முடியும் என்னும் நிலைப்பாடு உருவாகிற்று. ஆறுமுகநாவலர் தமது தனிமுயற்சியினால் சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து அதற்குத் தலைமை தாங்கி நடத்தினார். 1848இல் நாவலரின் கடும்முயற்சியால் வண்ணார்பண்ணையில், சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது. 350 ஆண்டு அந்நிய ஆட்சியின் பின் எழுந்த முதற்பாடசாலை இதுவாகும். சைவப்பிள்ளைகள், சைவசமயச்சூழலில், சைவத்தமிழ் பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணிக் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ் வித்தியாசாலை, பின்னர் தோன்றிய இந்துக் கல்லூரிகளுக்கும், சைவ வித்தியாசாலைகளுக்கும் முன்னோடியாக விளங்கிற்று.

நாவலர் பெருமான் சிதம்பரத்திலும் 1865 ஆம் ஆண்டில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

ஒரு தேசம், அந்நிய ஆட்சியின் பிடியிலிருந்து அரசியல் விடுதலை பெறுவதற்கு முன், சமய, மொழி, பண்பாட்டு, கலாசார உணர்வு விடுதலை பெற வேண்டியது மிக அவசியம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்ட நாவலர் பெருமான், அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்குத் தாய்மொழி, சைவசமயப் பண்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று முழுமை பொருந்திய கல்விச் சமுதாயத்தை உருவாக்க நாவலர் திட்டமிட்டுச் செயற்பட்டார்.

நாவலர் பெருமான் கருத்துப்படி கல்விக்கு பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம் ஆகும். கற்றல், நிற்றல் என்பன கல்வி எனும் நாணயத்தின் இரு பக்கங்கள். நாவலரின் கல்வி சார்ந்த மறுமலர்ச்சி இயக்கம் பல்வேறு துறைகளின் வளர்ச்சியைக் கொண்டதாக விளங்கியது. சைவத் தமிழ் மரபுவழிக் கல்வி, தாய்மொழிக் கல்வி என்பவற்றில் மிகுந்த நாட்டம் உடையவராயிருந்த அதேவேளை தாம் வாழ்ந்த காலப்பகுதியில்

நடைமுறையில் இருந்த ஆங்கிலக் கல்வி முறைமையையும் நாவலர், காலத்தின் தேவையை உணர்ந்து, வெறுத்து ஒதுக்கவில்லை. அத்தகைய கல்வியைச் சைவசமயச் சூழலில் பண்பாடு பேணிக் கற்கும் வாய்ப்பினைச் சைவப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே நாவலரின் இலட்சியமாகும். கல்வியானது வசதி வாய்ப்புக்களைக் கொண்டதும், மதமாற்றத்திற்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதுமான ஒரு சிறு குழுவினருக்கே என்ற நிலைமாறி பொதுமக்கள் யாவரையும் சென்றடைய வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தார். ஊர்கள் தோறும் பாடசாலைகளை அமைக்கும்படி மக்களிடம் நாவலர் வேண்டுகோள் விடுத்தமை இந் நோக்கத்தைக் கருத்தில் கொண்டேயாகும். நாவலர் பாடநூல்களையும் எழுதி வெளியிட்டார். ஆசிரியர் பயிற்சியின் தேவையையும் உணர்ந்திருந்தார். இலவசக் கல்வி மூலமே அனைவர்க்கும் கல்வி சாத்தியமாகும். அதனால் அன்னம், வஸ்திரம், உடுபுடவை மாணவர்களுக்கு வழங்கும் திட்டத்தையும்; மாணவர் விடுதியில் தங்கிக் கல்விபயிலும் முறைமையையும் நாவலர் வகுத்த கல்வித் திட்டத்தில் காணலாம்.

நாவலர் விட்டுச் சென்ற கல்விப் பணிகளைத் தொடர்ந்து எடுத்து நடத்தச் சைவபரிபாலன சபை, இந்துக் கல்லூரிச் சபை போன்ற நிறுவனங்களும்; நாவலர் மாணவர் பரம்பரையைச் சார்ந்த அருணாசல உபாத்தியாயர் போன்ற சிலரும்; நாவலர் இலட்சியங்களைப் பெரிதும் போற்றிய சேர். பொன் இராமநாதன், சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி போன்றோரும் பெரிதும் முயற்சித்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், நாவலர் கொண்டிருந்த கல்விசார் இலட்சியங்கள் பலவற்றை, ஆங்கிலேய அரசும், மிஷனரிமாரும் ஒருசில சுதேசிகளும், நிறைவேற்றவிடாமல் தடுத்தமையும் நோக்கற்பாலது.

இத்தகைய சூழ்நிலையில்தான், நாவலரால் நிறைவேற்றப்படாது விட்டுச் செல்லப்பட்ட கல்விப் பணிகளை, நிறுவனம் மூலம் நிறைவேற்றி, சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் பெருமைக்குரியவர் ஆயினார். அந்த நிறுவனம் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆகும். உயர்திரு சு. இராசரத்தினம் அவர்கள் அந்நிறுவனத்தின் முகாமையாளராகவும் செயலாளராகவும் விளங்கியவர். நாவலர் மரபினையும் கல்வி இலட்சியங்களையும் அவர் காட்டிய வழியில் நின்று முழுமனதுடன் செயற்படுத்தியவர்.

உயர்திரு சு. இராசரத்தினம் அவர்கள் 1884 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் 1879 ஆம் ஆண்டில் நாவலர் பெருமான் காலமானார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பயின்ற அவர் உயர்கல்வியைக் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பெற்றார். கொழும்பு சட்டக்கல்லூரியில் கற்றுச் சட்டத்தரணியானார். சட்ட வல்லுனராக அக்காலத்தில் முன்னணி வகித்த மிகச் சிலருள் ஒருவராக விளங்கியவர்; நீதியரசராகக் கடமைபுரியக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தும்; உயர் பதவிகளை அரசிடம் பெற்று செல்வம் செல்வாக்குடன் பெருவாழ்வு வாழக்கூடிய தகைமை தகுதிகள் இருந்தும் அவற்றையெல்லாம் துச்சமெனப் புறந்தள்ளி விட்டு நாவலர் வழியில் சைவத்தையும் தமிழ் மொழிக்கல்வியையும் பாதுகாத்து வளர்க்கச் சித்தங்கொண்டார்.

வைமன் கதிரவேற்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் தாய்மாமன். அவர் நாவலர் மீது அபிமானங்கொண்டு, அவரின் சைவத்தமிழ்ப் பணிகளைத் தொடர்வதற்கு முயன்றவர்களுள் ஒருவர். தாய்மாமன் பராமரிப்பிலும் வழிகாட்டலிலும் வளர்ந்த சு. இராசரத்தினம் இளமையிலிருந்தே நாவலரின் இலட்சியங்களையும் பணிகளையும் அறிந்து கொள்வதற்கான சூழ்நிலைகள் அவருக்கு நிறைய இருந்தன. சேர். பொன் இராமநாதன், வட்டுக்கோட்டை எம். எஸ். இராசரத்தினம், காரைநகர் அருணாசல உபாத்தியாயர், சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி முதலிய பெரியார்களுடனான தொடர்பும் இராசரத்தினம் அவர்கள் நாவலர் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்ல உந்து சக்தியாக விளங்கியது. நிறுவன அமைப்பு ஒன்றின் தேவையையும் நன்குணர்ந்திருந்தார். அக்கால ஆங்கிலேய அரசின் எதிர்ப்புக்களையும், அரச ஆதரவுடன் இயங்கும் கிறிஸ்தவ சமயக் குருமார்களினதும். கிறிஸ்தவ பிரமுகர்களினதும் இடையூறுகள், மதமாற்ற முயற்சிகள் என்பவற்றையும் பெற்றுக் கொண்டு, சைவப் பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவவும் நிர்வகிக்கவும், சைவ சமயத்தைச் சார்ந்த பிள்ளைகளை சைவசமயச் சூழலில் சைவ அனுட்டானங்களை மேற்கொண்டு கல்வி கற்கவும் வாய்ப்பாகச் சைவ நிறுவன அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் திரு. சு. இராசரத்தினம் ஈடுபடலானார். முயற்சி திருவினையாக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை அவருக்கு இருந்தது.

1923 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சைவ வித்தியா விருத்திச் சங்கம் உதயமானது. சேர். பொன். இராமநாதன், வட்டுக்கோட்டை எம். எஸ். இராசரத்தினம் ஆகியோர் மற்றும் நாவலர் பரம்பரையில் வந்த சிலர், இச் சங்கத்தின் தாபகர்கள் ஆவர். இந் நிறுவனத்தின் முகாமையாளராகவும், செயலாளராகவும் பணியாற்றிய உயர்திரு சு. இராசரத்தினம் அவர்கள் 1923 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12 ஆந் திகதி சிவபதம் அடையும் வரை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் (Hindu Board of Education) முழுநேரத் தொண்டனாக, தமது உடல், பொருள், ஆவி, குடும்பம் அனைத்தையும் அர்ப்பணித்துச் சைவக் காவலனாக வாழ்ந்தவர். அப் பெருமகனார் இந்துபோர்ட் இராசரத்தினம் என அழைக்கப்படலானார்.

நாவலர் மரபும் அவர் தம் சமய, கல்விச் சிந்தனைகளும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகளுக்கு மூலமும் வரையறையாகவும் விளங்கின. கல்வி, சமூகத்தின் உயர் குழாத்தினருக்கும் பிறமதத்திற்கு மாற்றம் பெற்றவர்களுக்குமே என்ற நிலைப்பாட்டினை மாற்றி சாதாரண மக்களுக்கும் கல்வி கற்க வாய்ப்பளிக்குமுகமாக, கிராமங்கள் தோறும் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவச், சைவ வித்தியா விருத்திச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வெற்றிகண்டது. நகர்ப்புறங்களிலும் பார்க்கக் கிராமப்புறங்களிலேயே அதிகமான பாடசாலைகள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெடுந்தீவு முதல் வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி அடங்கலாக சகல பிரதேசங்களிலும் சைவவித்தியாசாலைகள் நிறுவப்பட்டன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப் பெருநிலத்திலும் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. குடியேற்றங்கள் இப்பிரதேசங்களில் துரிதமாக நடைபெற்ற காலம். பாடசாலைகளின் தேவையை சைவ வித்தியா விருத்திச் சங்கம் நன்குணர்ந்து செயற்பட்டது. முந்தல், வதுளை முதலிய பிறமாவட்டங்களிலும் சைவ வித்தியா விருத்திச் சங்கம் அதன் கல்விப் பணிகளை விரிவுபடுத்தியது. இவை அனைத்திற்கும் மூலகாரணர் ஆகவும் உந்து சக்தியாகவும் விளங்கியவர் உயர் திரு சு. இராசரத்தினம் ஆவார்.

சைவப் பிள்ளைகள் மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுத்தற் பொருட்டு பாடசாலைகள் நிறுவியும், சைவமக்களிடையே இருந்து வரும் சமூக ஏற்றத் தாழ்வுகளைத் தணித்தற் பொருட்டு சைவப்

பாடசாலைகளில் சமபோசனம், சமஆசனம் என்பவற்றைத் தாமே முன்னின்று நடத்தியும் பெருந்தொண்டாற்றியர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். இவையனைத்தையும் பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நிறைவேற்றிய பெருமை கொண்டார். சரியெனத் தமது மனதில்பட்டவற்றை உறுதியுடன் பற்றிச் செயற்படுத்தும் அஞ்சா நெஞ்சம் கொண்ட கரும வீரராகத் திகழ்ந்தவர் திரு. சு. இராசரத்தினம். பின்தங்கிய சமூகங் களினதும்; பெற்றோரை இழந்த ஆதரவற்ற குடும்பங்களினதும் பிள்ளைகளின் நலன்களில் பெரிதும் சிரத்தை கொண்டு அவர்களின் கல்வி, சமய, சமூக, பண்பாட்டு முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் பலதடைகளைத் தாண்டிப் பணியாற்றிய ஒரு சமூகப் புரட்சியாளர். முற்போக்கு எண்ணங்கொண்டிருந்த இராசரத்தினத்தை, அன்றைய காலகட்டத்தில், நிலவிய சமூகச் சூழ்நிலை காரணமாக சரியாக மதிப்பீடு செய்யப்படாமை பற்றிக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். அதனால் பல அவதூறுகளைச் சந்திக்கவும் நேர்ந்தது. "காய்த்த மரம் தானே கல்லெறிப்படும்" என்று எப்பவோ சொல்லி வைத்து விட்டார்கள்.

சைவத்தமிழ் சமூகத்தில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள், மற்றும் ஏழ்மை நிலை, ஆதரவு அற்றோர் நிலை என்பவற்றைத் தமக்குச் சாதமாக்கிக் கொண்டு அவற்றைச் சுட்டிக்காட்டி, அத்தகைய நலிந்தோர்களை அணுகி "கல்வி தருகிறோம், உடு புடவை தருகிறோம், உத்தியோகம் தருகிறோம் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குவோம்" என்று பிரசாரஞ்செய்வது சைவப்பிள்ளைகளைத் தமது மதத்திற்கு மாற்றுஞ் செய்யும் ஓர் உத்தியாகவும் உபாயமாகவும் அக்காலத்துக் கிறிஸ்தவ மிஷனரிமார் கொண்டனர்.

இந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் நன்கு அறிந்திருந்த சு. இராசரத்தினம் அதனை முறியடிக்கும் முயற்சிகளை விரைந்து மேற்கொண்டார். 1924 ஆம் ஆண்டு, தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பிள்ளைகளையும், எவ்வித பாகுபாட்டிற்கும் உட்படுத்தாது சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையின் கீழுள்ள சகல பாடசாலைகளிலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற பிரேரணை ஏகமனதாக சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க திருப்புமுனையாகும்.

இலங்கைச் சட்ட நிரூபண சபையிலும், தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடசாலைகளில் சமாசனம், சமபோசனம் உள்ளிட்ட எந்த விடயங்களிலும் பாகுபாடு காட்டப்படக்கூடாது என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சேர். பொன். இராமநாதனும், சு. இராசரத்தினமும் இதற்குப் பெரிதும் பாடுபட்டனர். இத்தீர்மானம் சகல பாடசாலைகளிலும் அமுல்படுத்தப்படுவதற்கு சு. இ. அவர்கள் நடவடிக்கை எடுத்தார்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற சீரிய கொள்கையை மகுட வாசகமாகப் பதித்துக் கொண்ட சைவ வித்தியா விருத்திச் சங்கம், அதனை விளங்கச் செய்வதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்தது. ஆளுக்கொரு நீதி, சாதிக்கொரு நீதி, சமூகத்திற்கொரு நீதி, ஏழைக்கொரு நீதி, செல்வம் செல்வாக்கு உடையவர்களுக்கு ஒரு நீதி என்று கூறு போட்டுக் கொள்ள முடியாத ஒரே நீதியாக விளங்குவது சைவநீதி. சைவ வித்தியா விருத்திச் சங்கம் மேற்கொண்ட கல்விச் சேவை, சமூக நலப்பணிகள், சைவத் தமிழ்ப் பண்பாட்டினைப் பாதுகாக்கும் சேவை அனைத்திலும் சைவ நீதியையும் மனித நேயத்தையும் அடிநாதமாகப் பேணப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. "சாதியிலும் சமயமே மேல்" என்னும் நாவலரின் கூற்று இங்கு சிந்திக்கற்பாலது. நாவலரின் இலட்சியத்தைச் சரிவரப் புரிந்து கொண்டு, அவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து தொடர்ந்து அவற்றை எடுத்துச் சென்ற தமது சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிகள் மூலம் நிறைவேற்றிய பெருமை உயர்திரு சு. இராசரத்தினம் அவர்களுக்கே உரியது. அதற்கு அவரின் இயல்பான விவேகம், சட்டநுணுக்க அறிவு, சாதுரியம், சவால்களை எதிர்கொள்ளுந்திறன், சைவாபிமானம், மனிதநேயத்தின் பலனான விருப்பு என்பன உறுதுணையாக அவருக்கு இருந்து வெற்றி தேடித்தந்தன. திரு. சு. இராசரத்தினத்தின் ஆளுமையும் உணமைத் தேசியம் பற்றிய உணர்வும் விதந்துரைத்தற்பாலது.

உயர்திரு. சு. இராசரத்தினத்தின் சைவாபிமான, மற்றும் மனிதாபிமானப் பணிகளின் மகுடமாக விளங்குவது, விளங்கி வருவது, 1930 களில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரண்டு சைவஅநாதை (ஆதரவற்றோர்) விடுதிகளைத் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய வளாகத்தில் அமைத்து நடத்திவந்தமையாகும். இவ்விரு அநாதை விடுதிகளும் திரு. சு. இராசரத்தினுடைய தனிமுயற்சியினாலே நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் தோன்றிய பல அநாதை விடுதிச் சாலைகளுக்கு இவை முன்னோடியாக இருந்தமை நோக்கற்பாலது. இத்தர்ம கைங்கரியம் இன்றும் அவர் வழி வந்தவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும். இன்று இருநூறு மாணவ மாணவியர்கள் வரை இவ் விடுதிகளில் உறைந்து கல்வி கற்கின்றார்கள். இன்றைய காலச் சூழ்நிலையில், இத்தகைய விடுதிச் சாலைகளின் தேவை முன்னரைவிடப் பன்மடங்குஅதிகரித்துள்ளது. இத் தர்ம காரியத்துக்கு உதவ வேண்டியது சைவப் பெருமக்களின் தலையாக கடமையாகும். 1930 களில் இருந்து இற்றைவரை இவ்விடுதிகளில் வதிந்து, இலவசப் பராமரிப்பு, இலவசக் கல்வி என்பவற்றைப் பெற்று நன்னிலையில் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்பவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டியது தார்மீகக் கடமையாகும். சைவர்கள் சமூகநல உணர்வு அற்றவர்கள் என்ற தவறான பிரச்சாரத்தை முறியடித்தவர் திரு. சு. இராசரத்தினம் ஆவார். சமயம் வேறு சமூகம் வேறு என்று பிரித்து நோக்காது, இரண்டையும் ஒன்றாக இணைத்து நோக்கியவர் அவர்.

சைவப் பாடசாலைகளில், சைவச் சூழலை ஏற்படுத்தி, சைவப் பாண்பாட்டினை மாணவர்களில் வளர்க்கவல்ல நல்லாசிரியர்களை உருவாக்கும் நோக்கத்துடன், திருநெல்வேலியில் சைவாசிரிய பயிற்சிக் கல்லூரி, 1928 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. திரு. சு. இராசரத்தினம் அவர்களின் வழிகாட்டலில் அதிபர் மயிலிட்டி சுவாமிநாதன், உப அதிபர் அளவெட்டி பொ. கைலாசபதி, தமிழ் பேராசான் மட்டுவில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோர், நாவலர் கண்ட "கற்றுவல்ல உபாத்தியாயர்" களை இக் கல்லூரிமூலம் உருவாக்குவதற்குப் பெரிதும் உழைத்தனர். சைவத் தமிழ் பல்கலைக்கழகமோ இது என்று கூறும்படி அக்காலத்தில் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை மிளிர்ந்தது. அங்கு கற்றுத் தேர்ந்த ஆசிரியர்கள் நாடெங்கிலும் ஆற்றிய பணிகள் மகத்தானவை. நாவலர் அவர்களின் இலட்சியங்களை நன்கு அறிந்திருந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையைச் சிறந்த களமாக, நாவலர் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தினார். சைவப் பெரியார் "இந்துபோர்ட்" இராசரத்தினம் அவர்களின்

கல்வி மற்றும் சமூகப் பணிகள் சிறக்கத் தகுந்த நல்லாசிரியர்களை உருவாக்கியும் நல்ல ஆலோசனைகளை வழங்கியும் அவருக்கு உறுதுணையாக விளங்கியவர் பண்டிதமணி அவர்கள்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1958 ஆம் ஆண்டு வெளியிட்ட அதன் அறிக்கையில், அதன் காரியதரிசி சு. இராசரத்தினம் குறிப்பிட்டுள்ள விடயங்கள் நமது கவனத்தை ஈர்ப்பனவாயுள்ளன.

"எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளால் எமது சங்கம் சைவ மக்களின் பண்பாட்டையும் கல்வி முன்னேற்றத்தையும் குறித்துக் கடந்த 35 ஆண்டுகளாகப் பெரிதும் முயன்று பயன்மிக்க பணியாற்றி வருகின்றது. ஆதி தொடக்கம் இச்சங்கம் சிறப்பாகத் தமிழ்ப்பள்ளிக் கூடங்களின் முன்னேற்றத்திலேயே கருத்தூன்றி வருகின்றது.

சென்ற 35 ஆண்டுகளாகச் செய்து வந்த தொண்டின் பயனாக இச்சங்கம் 187 கல்லூரிகளில் 1500 ஆசிரியர்களின் துணை கொண்டு ஏறக்குறைய 35000 மாணவர்களின் கல்வியைப் பரிபாலித்து வருகிறது. அவை பின்வருமாறு:

(1). பெண்களுக்கும் ஆண்களுக்குமாகவுள்ள சைவஆசிரிய பயிற்சிக் கலாசாலை
(2). 7 ஆங்கில வித்தியாசாலைகள்
(3). 147 தமிழ் வித்தியாசாலைகள்
(4) 300 மாணவர்களுக்கு மேலுள்ள அநாதைப் பிள்ளைகளின் விடுதிப் பாடசாலைகள் இரண்டு
(5). 15 நெசவுப் பள்ளிகள்
(6). 16 கூடை இழைக்கும் பள்ளிகள்.

"தானத்தில் சிறந்தது வித்தியாதானம்", "தருமத்தில் சிறந்த தருமம் பாடசாலைகளை ஸ்தாபித்தல்" என்பார் நாவலர் பெருமான். அவரின் இக்கூற்றுக்களை மதித்துச் செயற்பட்டவர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். அவர் இலங்கைச் சட்டசபையில் உறுப்பினராக இருந்தபோது சைவ வித்தியாசாலைகளின் அபிவிருத்தி, உதவி நன்கொடை பெறுதல், கல்விச் சட்டங்களை உருவாக்குதல், இலவசக் கல்வி, ஆசிரியர் விருத்தி, பிறமதப் பாடசாலைகளில் சைவ மாணவர்களின் சமய அனுட்டானங்களைப் பாதுகாத்தல், கல்விப் புனரமைப்பு, பாடசாலை சமாசனம் சமபோசனம் என்பவற்றை உறுதிப்படுத்தல் போன்ற பல விடயங்களில் தகுந்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்கி அவற்றை அமுல்படுத்த உதவினார். அக்காலகட்டங்களில் அரசாங்கம் இயற்றும் கல்விச் சட்டங்கள், சுற்று நிருபங்கள் என்பவற்றில் விதி விலக்குகளையும், புறநடைகளையும் கண்டு பிடித்து அவற்றைத் தமது கொள்கைகளுக்குச் சாதகமாக்கி தமது முகாமைத்துவத்தின் கீழுள்ள சைவ வித்தியாசாலைகளின் நன்மைக்காகப் பயன்படுத்துவதிலும் எதிரிகளின் சூழ்ச்சித் திட்டங்களைச் சாதுரியமாக முறியடிப்பதிலும் வல்லமை படைத்தவர் ஆக விளங்கினார். அதனால் சட்டங்களுக்கு மீண்டும் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் ஆங்கிலேய அரசுக்கு ஏற்பட்டமை பற்றி அறியக்கிடக்கிறது.

*"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"* (திருக்குறள்– 647)

இக்குறள் கூறும் ஆளுமைப் பண்புகளுடன் சிறந்த தலைவராகவும், நிர்வாகியாகவும் வாழ்ந்து காட்டிய சாதனையாளர், சைவத்தமிழ்க் காவலர் சு. இராசரத்தினம் அவர்கள்.

உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்தல்; அரசாங்கத்தைத் தவிர வேறு எந்த மதக் குழுவினரையோ தனியாரோ பாடசாலைகளைப் புதிதாக நிறுவ விடாமல் தடுத்தல்; மற்றும் உதவி நன்கொடை வழங்கலை நிறுத்துதல் ஆகிய அரசாங்கத்தின் எத்தனங்களுக்கு எதிர்ப்புக்களைத் தெரிவித்துவந்தவர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். எனினும் 1960 – 61 ஆம் ஆண்டுகளில் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த போது, சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழுள்ள சகல சைவத்தமிழ் பாடசாலைகளும் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. அதன்பின்னர் 300 மாணவர்களுக்கு மேல் உள்ள இரண்டு அநாதைப் பிள்ளைகளின் விடுதிச் சாலைகள் மாத்திரம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமைத்துவத்தின் கீழ் இருந்து வருகின்றன. இவற்றின் தொடக்கத்திற்கும், அபிவிருத்திக்கும், தொடர்ச்சியான இருப்பிற்கும் கருத்தாகவும், கருவியாகவும், காப்பாளராகவும் விளங்கியவர். சைவப்பெருந்தகை இந்துபோர்ட் இராசரத்தினம் ஆவார். இந்துபோர்ட் வேறு, இராசரத்தினம் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றே என்ற நிலைப்பாடு எம்மனைவரினதும் மனங்களில் பதிந்துவிட்டமை, பெரியாரின் பெருமைக்குச் சான்றாகும்.

## யாழ். சைவ ஆராய்ச்சி நூலகத்திற்கு மற்றுமொரு தொகுதி நூல்கள்

மாமன்றத்தின் யாழ். பிராந்திய பணிமனையில் இயங்கும் சைவ ஆராய்ச்சி நிலையத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் 16ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்ட நூலகத்திற்கு லண்டன் வெஸ்டர்ன் ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு. வே. சிவசுந்தரம் பத்து லட்சம் ரூபா பெறுமதியான சமய அறிவு நூல்களை அன்பளிப்புச் செய்திருக்கிறார்.

இதன் ஆரம்பமாக சிறுதொகுதி நூல்களை திறப்பு விழா நிகழ்வின்போது யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்கள், மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை தம்பதியினரிடம் கையளித்திருந்தார். ஆறு லட்சம் ரூபா பெறுமதியான மற்றுமொரு தொகுதி சமய அறிவு நூல்கள் இந்தியாவிலிருந்து கடந்த ஜூன் மாதத்தில் மாமன்றத்தின் யாழ். நூலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

## சிவனவனை வணங்கிடுவோம்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

சங்கரனைச் சண்முகனின் தந்தையினைத் திரிபுரங்கள்
சங்காரம் செய்தவனைத் தில்லையுறை கூத்தனை

ஐங்கரனின் அப்பனை அடியவர்க்கு எளியவனை
அபயமென அடிபணிந்தால் அச்சமெலாம் தீர்ப்பவனை
கங்கைதனைச் சடையினிலே சூடியருள் புரிந்தவனை
பிட்டுக்காய் மண்ணதனைச் சுமந்தசிவ பெருமானை
சங்கடங்கள் ஒழிப்பவனை சகலதும் வல்லவனை
சந்ததமும் சிந்தைதனில் வைத்தோம் நாம் வணங்கிடுவோம்!

# மாதச் சிறப்புகள்

ஆத்மஜோதி நா. முத்தையா

## சித்திரை மாதம்

### சித்திரைப் பிறப்பு

தமிழர் தம் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் இரண்டும் ஒன்றேதான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும், முதலாவதாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் மல்லிகையும், முல்லையும் மலர்ந்து மணம் வீச மாநிலத்தை மகிழ்விக்கின்றன. தேமாவும் தீம்பலாவும் அரும்பழங்களைப் பாருக்கு நல்கி மக்கள் நாவினுக்கு நல்ல சுவையினைக் கொடுப்பதும் இக்காலத்திலேதான். யக்ஞயாகம், உபநயனவிவாகம் முதலிய வைதிக காரியங்களைச் செய்யவும் சிறந்த காலம். வருஷ ஆரம்பம் நன்றாக இருந்தால் ஆண்டெல்லாம் நன்மை தரும் என்பது நம் கொள்கை.

ஆறு பருவகாலங்களிற் சிறந்தது இளவேனிற்காலம். இளவேனிற் காலத்தில் முதல் மாதம் சித்திரை. ருதுக்களுள் வசந்த ருதுவாக இருக்கின்றேன் என்று கீதையில் கீதாசிரியர் கூறுகின்றார். சித்திரை நட்சத்திரம் பூரணையோடு கூடியகாலம் ஆதலால் சித்திரை மாதம் என்றும் பெயரை பெற்றது. இது இராசிச் சக்கரத்திலுள்ள பன்னிரண்டு இராசிகளுள் ஆறாவதான கன்னி இராசியிலும் ஏழாவதான துலா இராசியிலுமுள்ள நட்சத்திர மண்டலத்துக்குப் பெயர். அச்சுவினி முதலாக எண்ணும் வரிசையில் பதினான்காவது அதாவது நடுநட்சத்திரம்.

### சித்திரா பூரணை

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணையே சித்திரா பூரணையாகும். அன்று சித்திரகுப்த விரதம் நோற்பார்கள். அந்த நாளில் பொங்கி வழியும் பால் நிலவைப்போல் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும். அந்நாளில் பொங்கலிட்டுத் தெய்வங்களை மக்கள் வழிபட்டு விழாவாற்றி வந்தார்கள். ஏழைகளுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவார்கள். இதற்குச் சித்திரை கஞ்சி என்று பெயர். மாலையில் சித்திர குப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க மற்றவர்கள் எல்லாரும் பயபக்தியாய் கேட்டு அநுபவிப்பார்கள்.

பொன், வெள்ளி இவைகளாலான பதுமையில் சித்திர குப்தனை இருத்தி நியமப்படி வழிபாடு செய்ய வேண்டும். அன்னம், வெல்லத்துடன் கலந்த எள், பால், நெய் முதலியவை படைக்கும் பொருள்கள். வழிபாட்டின் முடிவில் பாயாசம் நிறைந்த வெண்கலப் பாத்திரம் தானமாகக் கொடுப்பது வழக்கம். அன்று முழுவதும் உப்பில்லாத உணவுண்டு விரதம் இருத்தல் வேண்டும்.

மாதம் தோறும் பூரணை விரதம் அநுட்டிக்க முடியாதவர்கள் சித்திரா பூரணையாவது அநுட்டிக்க வேண்டும். இப்பூரணை விரதம் மற்றைய பூரணை விரதங்களை அநுட்டிப்பதன் பலனைக் கொடுக்க வல்லது. முதன்முறை விரதம் தொடங்கும் போது ஐந்து அல்லது ஒன்பது கலசங்கள் வைத்து, அவைகளில் சித்திர குப்தனையும் மற்றும் எட்டுத் திக்குப் பாலகர்களையும் (அல்லது நான்கு திக்குப் பாலகர்களை) இருத்தி வழிபட்டுப் பிறகு தானம், ஓமம், பிராமண போசனம் முதலியன செய்யவேண்டும்.

அன்று எல்லாப் பலன்களையும் கொடுக்க வல்ல இந்திர வழிபாடு செய்தல் வழக்கம் என்று தேவி புராணம் கூறுகின்றது. மருக்கொழுந்தினால் இந்திரன் முதலிய தேவர்களை வழிபட வேண்டும். அத்திதி சனி, ஞாயிறு அல்லது வியாழன் அன்று வருமாயின் மிகவும் விசேஷமானது. இயமனுடைய கணக்கப்பிள்ளையே சித்திரகுப்தர் என்று அழைக்கப்படுவார். அவரவர்கள் செய்த நன்மை தீமைகளை எழுதி வைத்துக் கடைசியில் உத்தரிக்கிற காலங்களிலே அக்கணக்கை வாசிப்பவர் சித்திர குப்தர் ஆவார்.

## வைகாசி மாதம்

### விசாகத் திருநாள்

விசாக நட்சத்திரத்தில் பூரணை கூடிய மாசம் ஆதலால் வைகாசி எனப்பட்டது. முருகப் பெருமானுடைய நட்சத்திரம் விசாக நட்சத்திரம் ஆகையால் முருகப்பெருமான் விசாகன் என்று கூறப்படுகின்றார்.

இது பூட்டீஸ், ஹெர்க்குலீஸ் என்னும் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையில், சிறிது தெற்கில் உள்ள அழகான மண்டலம். ஐந்து நட்சத்திரம் சேர்ந்து ஒரு கிண்ணம் போல் இருக்கும். இந்த மண்டலத்தில் முதல் மூன்று கால்கள் துலாத்திலும் கடைசிக்கால் விருச்சிகத்திலுமாக இருக்கின்றன. இந்த நட்சத்திரத்தின் அதிபன் குரு. விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு குரு திசையே தொடக்க திசையாகும்.

புத்தபெருமான் பிறந்ததும், ஞானம் பெற்றதும், பரி நிர்வாணநிலை அடைந்ததும் வைகாசி நட்சத்திரமாகும். பௌத்த உலகத்திலே வைகாசி விசாகம் இரு தினங்கள் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது. பௌத்தர்கள் ஒளிவிளக்கேற்றி கொண்டாடப்படும் தினம் இதுவே.

சித்திரையும், வைகாசியும் இளவேனிற் காலமாகும். இளவேனிற் காலமும் விழாக்களுக்கு இயைந்தகாலமாகும். வேனில் என்றால் வெயிற்காலம் என்பது பொருள். ஆனியும், ஆடியும் முதுவேனிற் காலமாகும். இமயத்தலங்களாகிய கேதார், பத்திரி என்ற இரு தலங்களும் ஐப்பசி மாதம் தொடக்கம் பனியினால் மூடப்பட்டு கோயில்களும் பூட்டப்பட்டு இருக்கின்றன. வேனிற் காலத்தில்தான் யாத்திரிகர்கள் செல்லத் தொடங்குவர். அக்காலத்தில் கோயில்கள் திறந்து பூஜை தொடங்குவர்.

இவ்வேனிற் காலத்திலே ஈழத்தில் மாத்திரம் அன்றி தமிழகத்திலும் பல கோயில்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. காஞ்சியில் வைகாசி நிறைமதியில் நடக்கும் கருட சேவையும், திருச்செந்தூரில் நடக்கும் பெருவிழாவும் முக்கியமானவை. இவ்வைகாசி மாதத்திலே கோடையிலே பெரும்பாலும் வேட்டுவர் விழாக் கொண்டாடுவர். கிராமங்களிலே ஊர்தெய்வங்களுக்கு வழிபாடு நிகழும்.

காளி, துர்க்கை, கண்ணகை அம்மன் போன்ற தெய்வங்களை இக்காலத்தில் வழிபடுவதை இன்றும் கிராமங்களுக்குச் செல்பவர்

காணலாம். பழங்கள் மிகச் செழிப்பாகக் கிடைக்கும் காலமும் இதுவே. இக்காலத்திலே தான் கிராம தேவதைகளின் பொங்கல் விழா நடைபெறும்.

தமிழகத்து கிராமக்கோயில்களில் இக்காலத்திலேதான் கூழ் ஊற்றும் விழாவும், கஞ்சி ஊற்றும் விழாவும் நடைபெறுகின்றன. இக்காலத்திலே தெருகூத்தும் நடைபெறுவதைக் காணலாம். கங்கை அம்மன் கூத்து என்ற பழைய நாடகத்தை அவர்கள் ஆடி மகிழ்வார்கள். தெருத்தோறும் கூத்தாடிகள் பெண்வேடம் புனைந்தும் வேறு வகை வேடங்கள் ஏற்றும் விளையாடும் காட்சி உளம் உருக்கும் காட்சியாகும்.

இந்தக் கூத்தாடிகள் வீடுதோறும் சேகரிக்கும் தானியங்களை மாவாக்கி விசாக தினத்தன்று கூழ்காய்ச்சி ஊற்றுவார்கள். மற்றவர்கள் வாழத் தாம் வாழ்தலே விழாவின் முக்கிய குறிக்கோளாகும். இக்குறிக்கோளை மையமாக வைத்துக் கொண்டே விழாக்கள் கொண்டாடுவர்.

அக்காலத்து ஊர்கள் சோலைகளால் சூழப்பட்டிருக்கும். இக்காலத்தில் மரங்கள் வெட்டப்படுவதால் சோலைகளும் இல்லை. புனைந்தும் வேறு வகை வேடங்கள் ஏற்றும் விளையாடும் காட்சி உளம் உருக்கும் காட்சியாகும்.

மழை வீழ்ச்சியும் மிகக் குறைவு. இதனால்தான் அரசினர் மரங்களை உண்டாக்கச் செய்வதற்காக வனமகோற்சவம் கொண்டாடுவர். "கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே, தருநிழலே" என்று இராமலிங்க சுவாமிகள் இக்குளிர் மரங்களையும் அவற்றால் பெறும் நிழலையும் தாமே இறைவனுடைய தன்மையாக ஏற்றம் தந்து பாடுகின்றார்.

கோடையில் மகிழ்ச்சி அளிப்பது குளிர் நிழல். அக்குளிர் தரும் சோலைகளுக்கு இடையிலேதான் கன்னி, ஐயை, கங்கை, காளி முதலிய தெய்வங்களின் கோயில்கள் இருக்கும். முருகன் தங்கியிருக்கும் கோயில்களில் எல்லாம் விசாகத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். விசாக நாளில் திருச்செந்தூரில் செந்தில் முருகனுக்குப் பன்னீர் அபிஷேகம் செய்விப்பார்கள். நல்லவர்கள் நாடெங்கும் பலப்பல தண்ணீர்ப் பந்தல்கள் அமைப்பார்கள்.

உலகம் முழுவதும் வாழுகின்ற பௌத்த மக்களுக்கு வைகாசி விசாகம் ஒரு சிறந்த நாள். இலங்கை ஒரு பௌத்த நாடு. ஆகையால் இருதினங்கள் அரசாங்க விடுமுறை கொடுத்து வைகாசி விசாகத்தைக் கொண்டாடுகின்றார்கள். புத்தபெருமான் பிறந்த தேசமாகிய பாரத நாட்டில் ஒரு தினம் விடுமுறை கொடுக்கப்படுகின்றது.

வளமார்ந்த அரச வாழ்வையும், கண்ணனைய மனைவியையும், மைந்தனையும் விட்டு, மக்கள் வாழ்வைத் தம் வாழ்வாக – ஏன்– பிற உயிர்களின் வாழ்வே தம் வாழ்வாக வாழ்ந்து மன்பதைக்கு வழிகாட்டிய அண்ணல் புத்தர் விழா இவ்வேனில் விழாவேயாகும்.

இப்புத்த பெருமானுடைய பொன்னாளை மணிமேகலை சிறக்க எடுத்துக்காட்டுகின்றது. மணிபல்லவத் தீவில் எழுந்து நின்ற மணிமேகலையைத் தேற்றிய தீவத்திலகை அவள் வரலாற்றையும் வந்த விதத்தையும் தன் வரலாற்றையும் கூறியதோடு, ஆபுத்திரனைப் பற்றியும் அவனது வற்றாத் அமுதசுரபியைப் பற்றியும் கூட எடுத்துக் காட்டினாள். காட்டி அந்தப் பாத்திரம் அமுதசுரபி மணிமேகலையின் கையை வந்தடையும் என்றும், அந்த அடையும் சிறந்த நாள் வைகாசி விசாக நாளே என்றும் காட்டினாள். மேலும் அந்தப் புண்ணிய நாளே புத்தபிரானது புனித நாள் என்றும், போதி ஞானம் பொருந்திய நாள் என்றும் காட்டினாள். சீத்தலைச்சாத்தனர் தாம் பாடிய மணிமேகலை என்னுங் காவியத்தில்

*"இருது இளவேனில் எறிகதிர் இடபத்து*
*ஒருபதின் மேலும் ஒரு மூன்று சென்ற பின்*
*மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்*
*போதித் தலைவனோடு பொருந்தித் தோன்றும்*
*ஆபுத்திரன் கை அமுத சுரபி"*

என்று கூறுகின்றார். இதில் இளவேனில் காலத்தைக் காட்டி இடபமாகிய வைகாசித் திங்களைக் காட்டி பதின்மூன்று நட்சத்திரங்களைக் கடந்த இடைப்பட்ட விசாக நட்சத்திரமும், நிறைமதியும் சேர்ந்த அந்த நல்ல நாளிலே அறமுரைத்த போதித் தலைவனோடு அமுதசுரபியும் பொருந்தித் தோன்றும் எனக் காட்டுகின்றார்.

மதுரையிலே பசுவினாலே வளர்க்கப்பட்டவன் ஆனமையினால் ஆபுத்திரன் என்னும் பெயரைப் பெற்றான். சிந்தாதேவியிடம் இருந்து அமுரசுரபி என்ற பாத்திரத்தைப் பெற்றான். அமுதசுரபி தினமும் எத்தனை பேருக்காயினும் உணவு சுரக்கும் வல்லமை உடையது. ஒரு நாளைக்கு குறைந்தது ஒருவருக்காயினும் உணவு வழங்காமல் சாப்பிடாத நியமத்தை உடையவன் ஆபுத்திரன். ஆபுத்திரனுடைய தருமச் செய்கையினால் இந்திரனுடைய இந்திரபதவிக்கே ஆபத்து வந்து விடும் போல் இருந்தது. மதுரையில் உள்ள எல்லோருடைய வறுமையையும் போக்கினான் இந்திரன். அதனால் ஆபுத்திரனுடைய உதவியை நாடினார் எவருமில்லை.

உலகில் எங்கு வறியவர்கள் இருக்கிறார்கள் என்பதனை அறிந்து அவர்கள் வறுமையை நீக்கக் கருதி கப்பல் ஏறிப் புறப்பட்டான் ஆபுத்திரன். அவன் சென்ற கப்பல் மணி பல்லவத் தீவை அடைந்து இரண்டொருநாள் தங்கி நின்றது. கப்பலில் உள்ளார் ஊர் வளம்பார்க்கச் சென்றிருந்தனர். ஆபுத்திரனும் எல்லாரோடும் சென்றவன் கப்பலுக்குத் திரும்புவதற்குக் காலம் தாழ்த்து விட்டான். கப்பலில் உள்ளார் ஆபுத்திரனைக் கவனியாது புறப்பட்டு விட்டனர். ஆபுத்திரன் வந்து பார்த்தான். கப்பல் புறப்பட்டுவிட்டதை அறிந்தான். தீவு முழுவதும் சுற்றிப்பார்த்தான். சனநடமாட்டமே இருக்கவில்லை. பொய்கை ஒன்றைக் கண்டான். பொய்கைக் கரையிலே நீர் அருந்தி இருந்தான். நாட்கள் சில கழிந்தன. இறப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை உணர்ந்தான். அமுதசுரபியைக் குளத்திலே எறிந்து உயிர்விட்டான்.

தன்னலங்கருதாத ஒருவரை இந்த அமுதசுரபி அடைய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். ஆண்டு தோறும் வைகாசி விசாக நன்னாளிலே அமுதசுரபி குளத்திலே மிதந்து வரும். தகுந்தவர்கள் இல்லாமையினாலே மறுபடியும் குளத்திலே மறைந்து விடும்.

தனது பழம் பிறப்புணர வந்த மணிமேகலை மணிபல்லவத் தீவிலே வைகாசி விசாக நன்னாளன்று அமுதசுரபியைப் பெற்று வறியோரின் இன்னலைத் தீர்த்தாள் என்பது மணிமேகலை காவியம் கூறும் செய்தி.

வைகாசி விசாகத் திருவிழா திருச்செந்தூரிலே மிகப் பிரமாதமாகக் கொண்டாடுவார்கள். கடற்கரைக்கும், மணல் பரப்புக்கும் பால்போல் வீசும் நிலவொளிக்கும் இருக்கும் அழகு எத்தனை நாள் அநுபவித்தாலும் தெவிட்டாது.

*(நன்றி: பன்னிருமாத நினைவுகள்– இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு)*



# சிவனின் பெருமையைச் சொல்லும் நந்திக் கொடி



**சிவத்திரு குருபழநி அடிகள்**
*திருக்குறள் பீடம், குருபழநி ஆதீனம், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா*

**கொ**டியும் குடையும் முரசும் பிறவும் அரசர்க்குரிய மங்கலப் பொருள்கள். திருவாசகத்தில் இறைவனுக்கு திருத்தசாங்கம் கூறுமிடத்தில் கொடியும் கூறப்படுகின்றது.

புறநானூற்று 56ஆம் பாடல் நாற்பெருங்கடவுளரை அறிமுகப்படுத்தும் போது,

*ஏற்றுவலன் உயரிய.....மணிமிடற்றோன்*
*பனைக் கொடியோன் (வாலியோன்)*
*விண்ணுயர் புட்கொடி விறல் வெய் யோன்*
*மணிமயில் உயரிய செய்யோன்*

என்று அவரவர்களுக்குரிய கொடியினையும் சேர்த்தே கூறுகின்றது. சங்க காலத்தில் நாற்பெருங் கடவுளர்களின் வழிபாடு காணப்பட்டாலும் முதல் இடம் சிவபெருமானுக்கே வழங்கப்பட்டுள்ளது. சிவபெருமானுக்குரிய கொடியும் ஏற்றுக் கொடியாக விளங்குகின்றது. ஏறு பெருமிதம் மிக்கது. தோற்றத்தால் மட்டுமன்று செய்கையாலும் அதற்குப் பெருமிதம் உண்டு.

எருது உழைப்பின் அடையாளம். உணவைப் பற்றிக் கூறும்போது நாலடியாரில் பகடுநடந்த கூழ் என்று கூறப்படுகின்றது. புறநானூற்றில்,

*உழுத நோன்பகடு அழிதின்றாங்கு*

என்றோர் உவமை உண்டு. நமக்கு உழைத்துக் கொடுத்த எருதுதான் வைக்கோலைத் தின்னும் இந்தத் தியாக உணர்வு இறைவன் நமக்கு உணர்த்தும் பாடம். இறைவன் நஞ்சினைத் தான் உண்டு அமுதத்தைத் தேவர்களுக்கு கொடுத்துத் தியாகராசன் ஆனவன். திருநாவுக்கரசரும் 'அருள் மன்னர் ஆரூர் அரன் நெறியாரே' என்று கூறுவார். சிவபெருமானைப் போன்றே அவருடைய ஊர்தியும் நெல்லை மற்றவருக்குக் கொடுத்துத்தான் வைக்கோலைத் தின்கின்றது.

எருது இறைவனுக்கு கொடியாவதுடன் ஊர்தியாகவும் விளங்குகின்றது. ஆனேறு ஊர்தியாகவும் கொடியாகவும் விளங்குதற்கு ஏற்புடையது.

*ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த*
*சீர்கெழு கொடியும் அவ்வேறென்ப*

என்பது பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து.

ஆனேறு உழைப்பால் உதவுவது போல் பசு, பாலும் நெய்யும் பிறவும் கொடுத்து உதவுகின்றது. பால் நினைந்தூட்டும் தாய் போன்றது. வடமொழி கலந்த வழக்கத் தமிழில் அதனைக் கோமாதா என்று அழைப்பர்.

*தங்கும் அகிலயோனி கட்கும்*
*மேலாம் பெருமை தகைமையன*
*பொங்கு புனித தீர்த்தங்கள்*
*எல்லாம் என்றும் பொருந்துவன*
*துங்க அமரர் திருமுனிவர்*
*கணங்கள் சூழ்ந்து பிரியாத*
*அங்கம் அனைத்தும் தாம் உடைய*
*அல்லவோ நல்ஆனி னங்கள்*

என்று சண்டேசுரர் நாயனார் வரலாற்றில் மேன்மையைப் புகழ்ந்து போற்றுகிறார் சேக்கிழார்.

ஆனேறு இறைவனைத் தாங்குவதனாலே புண்ணியத்தின் வடிவமாகும். இறைவன் எழுந்தருளியிருக்கும் வெள்ளி வெற்பினை,

*அண்ணல் வீற்றிருக்கப் பெற்றது ஆதலின்*
*நண்ணும் மூன்று உலகும் நான்மறைகளும்*
*எண்ணில் மாதவம் செய்ய வந்து எய்திய*
*புண்ணியம் திரண் டுள்ளது போல்வது*

என்று போற்றுவார் சேக்கிழார்.

எனவே எருது புண்ணியத்தின் (தருமத்தின்) வடிவமாகவும் போற்றப்படுகின்றது. பெருமிதம், உழைப்பு, உயர்வு, புண்ணியம் ஆகியவற்றைக் குறிக்கும் அடையாளமாக விளங்கும் ஆனேறு (எருது) இறைவனுக்குக் கொடியாகவும் ஊர்தியாகவும் விளங்குவது ஆதலினால் சிவபெருமான் திருக்கோயிலிலும் சிவமே நிலவும் விழாக்களிலும் இடபக்கொடி ஏற்றுகின்றோம். திருக் கோயிலில் திருவிழாக் காலங்களில் கொடி ஏற்றம் நடைபெறுகின்றது. அரண்மனைகளில் என்றும் கொடி பறக்கும். செல்வமாக வாழ்வதனைக் கொடிகட்டி வாழ்தல் என்று கூறுவர். கொள்கை விளக்கத்துக்காகவும் கொடி கட்டிக் கொள்வதுண்டு. உமாபதி சிவனார் பாடிய கொடிக்கவி சிதம்பரத்தில் கொடி ஏற்றுவதற்காகப் பாடியதே. ஆனாலும் பாடல்களின் உள்ளுறையை நோக்கி சித்தாந்த உண்மைகளை விளக்கக் கொடி கட்டினேன் என்றும் கூறலாம். காவிரிப்பூம்பட்டினத்தில் பறந்த பல்வேறு கொடிகளை பட்டினப்பாலையில் எடுத்துக் காட்டுகின்றார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

இவ்வளவு கொடிகளிலும் சிவபெருமானுக்குரிய ஏற்றுக்கொடி சிறந்து விளங்குவது. கொடியிலும் ஆனேற்றினை (இடபத்தை) நந்தி என்று குறிக்கும் வழக்கம் எப்போது தோன்றியது என்பது தெரியவில்லை. நந்தி என்பது 'ஆதிதேவனார் கோயில் நாயகன்' என்று பெரியபுராணப்பாடலிலும் (திருமலைச் சருக்கம் – 10) கயிலையில் வேத்திரப் படை தாங்கி நிற்பவரே நந்தி என்று கூறுகின்றது. நந்தீஸ்வரர் என்ற சொல்லுக்கு ஆனந்தத்தைத் தருபவர் என்பது பொருள்.

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டதனைக் கூறுமிடத்தில்,

*......செங்கண்மால் விடைஎதிர் நிற்ப*
*முந்தை மாதவப் பயன்பெறும் முறைமையால் மகிழ்ந்தே*
*நந்தி எம்பிரான் நடுவிடை ஆடிமுன் நாணுக (1648)*

என்று சேக்கிழார் விடையையும் நந்தியையும் தனித்தனியே கூறுகின்றார்.

ஆறுமுக நாவலரவர்களின் சைவ வினாவிடை சிவாலய தரிசன இயலில் 'திருக்கோயில் உள்ளே போனவுடன் பலிபீடத்தையும், துசத்தம்பத்தையும், இடபதேவரையும் கும்பிட்டு .... முன்பு துவார பாலகரை வணங்கி பின்பு கணநாயகராகிய திருநந்தி தேவரையும் வணங்கித் துதித்து..., என்று கூறுமிடத்திலும் இடபதேவரும், திருநந்தி தேவரும் தனித்தனியே குறிப்பிடப்படுகின்றனர். இன்று பலர் இடபதேவரையே நந்தி என்று கருதுகின்றனர். எப்படி இருந்தாலும் இடபக் கொடி எம்மை உடையவராகிய ஏற்றுயர் கொடி உடைய சிவபெருமானது பெருமையும் புகழும் விளங்கப் பட்டொளி வீசிப் பறக்கின்றது.

*சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்*
*கோலம் பொலியும் கொடிகூறாய் – சாலவும்*
*ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர்காட்டும்*
*கோதிலா ஏறாம் கொடி.*


*(மாணிக்கவாசகர்)*

மே மாதம் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை மகோற்சவப் பெருவிழா நடைபெற்றதையொட்டிய சிறப்புக் கட்டுரை

# வாழ வழியமைப்பான் திருக்கேதீச்சரநாதன்

த. மனோகரன்

இலங்கையைச் சிவபூமி என்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார். இங்கு இந்துசமயம் எப்போது வந்தது. மக்கள் இந்து சமயத்தை, எப்போதிருந்து பின்பற்றத் தொடங்கினார்கள் என்று காலவரையறை கூறமுடியாது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புராண, இதிகாச காலங்களிலேயே இலங்கையில் இந்துசமயம் நிலவியதற்குப் பல கதைகளும், சான்றுகளுமுள்ளன. மகாபாரதத்திற்கு முற்பட்ட இராமாயணகாலத்திலேயே இந்நாட்டில் சிவ வழிபாடு நிலவியதாகக் கூறப்பட்டுள்ளது.



இரண்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் முன் இலங்கையில் விஜயன் கரையொதுங்கியபோது அவனுடன் உபதிஸ்ஸன் என்ற பிராமணன் வந்ததாகவும், அப்பிராமணன் இலங்கையில் அக்காலத்தில் பிரசித்திபெற்று விளங்கிய ஐந்து சிவாலயங்களைச் சென்று தரிசித்ததாகவும் மகாவம்சம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

அவ்வைந்து சிவாலயங்களே இன்று பஞ்சேஸ்வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அதாவது இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கும் முன் ஒரு பிராமணனால் தரிசிக்கப்பட்ட நாட்டின் நான்கு திசைகளிலும் மிகுந்த ஐந்து சிவாலயங்களே இப் பெயரைப் பெற்றன.

இலங்கையில் வேறெந்தவொரு சமயமும் உள்வாங்கப்படாத காலத்தில் சிவவழிபாடு நாட்டின் நான்கு திசைகளிலும் சிறப்புற்றிருந்தது என்பது இதன் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இலங்கையின் ஆதிசமயம் இந்துசமயமே என்பதும், சிவவழிபாடே ஆதிவழிபாடு என்பதும் தெளிவுறுத் தப்படுகின்றது.

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம், கிழக்கே திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம், தெற்கே மாத்தறை தேவேந்திரமுனை (தெவுந்தர)யில் அமைந்திருந்த தொண்டீஸ்வரம் (சந்திரசேக ரேஸ்வரம்), மேற்கே சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரம் மற்றும் வடமேற்கே மன்னாரில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் ஆகிய ஐந்து சிவாலயங்களே பஞ்சேஸ்வரங்கள் என்று குறிக்கப்படும் பெருமைப் பெற்றுள்ளன.

குறிப்பிட்ட ஐந்து சிவாலயங்களில் தென்னிலங்கையிருந்த தொண்டீஸ்வரம் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட நிலையில் மீள விஷ்ணு ஆலயமாகப் புரைமைக்கப்பட்டு இன்று அப்பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயமாக விளங்குகின்றது.

இப் பஞ்சேஸ்வரங்கள் தவிர மேலும் பல வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இதிகாசகாலப் பழமை கொண்ட ஈஸ்வரங்கள் இலங்கையின் நான்கு திசைகளிலும் இருந்துள்ளன. கிழக்கிலங்கையிலே மட்டக்களப்பிலுள்ள மாமாங்கேஸ்வர கோயில் அவற்றிலொன்று. இன்று விநாயகர் கவசத்துடன் காட்சி தரும் மூலஸ்தான விக்கிரகத்துள் சிவலிங்கமேயுள்ளதாகக் கூறப்படுவதன் மூலம் இவ்வாலயம் ஆதியில் சிவாலயமாக இருந்தது என்பது ஏற்கப்பட்டுள்ளது. இம்மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்த சிவலிங்கம் இராமபிரானால் ஸ்தாபிக்கப்பட்டு பூசிக்கப்பட்டது என்பதும் வழங்கி வரும் கதையாகும். எனவே, இராமாயண காலத்துடன் தொடர்பு கொண்ட இவ்வாலயம் பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்து ஆலயம் ஆகும்.

அவ்வாறே தென்னிலங்கையின் காலி மாநகரிலமைந்துள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரம் என்ற சிவாலயமும் இராமா யணகாலத்தில் இருந்த ஒரு ஆலயம் என்று கூறப்படுகின்றது. இராவணன் இந்த சிவாலயத்தைச் சென்று வழிபட்டான் என்று கூறப்படுவதுடன் அனுமனும் இங்கு எழுந்தருளியுள்ள சிவனை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. அனுமனால் இமயமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சஞ்சீவி மலையின் ஒரு பகுதி இச்சிவாலயத்திற்கண்மையில் விழுந்ததாகக் கூறப்படுகின்றது. சஞ்சீவிச் செடிகள் நிறைந்த ருமஸ்தலகந்த என்ற மலை இன்றும் உள்ளமை இதை உறுதிப்படுகின்றது.

இவைபோன்ற இலங்கையின் இந்து சமயத்தின், சமயத்தவரின் பண்டைய இருப்பையும், சிவவழிபாட்டின் பழமையையும் பறைசாற்றி நிற்கும் சிவதலங்கள் பலவுள்ளன. இவற்றின் அடிப்படையில் கணிப்பிடும் போது இலங்கையின் ஆதி சமயம் இந்துசமயமே என்பதும் சிவவழிபாடே முதல் வழிபாடாக இருந்தது என்பதும் தெளிவானது; புரிந்து கொள்ளக் கூடியது.

இந்த நிலையிலே இலங்கையின் வடமேற்குப் பகுதியில் வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரத் திருத்தலம் தொடர்பில் கவனம் செலுத்துவோம். பல்வேறு இடர்பாடுகளை எதிர் கொண்டு பல நூற்றாண்டுகள் மண்ணுள் மறைந்திருந்து இன்று மீளெழுச்சி பெற்று தன் பண்டைய பெருமையைப் பறைசாற்றி நிற்கும் திருக்கேதீஸ் வரத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா மே மாதத்தில் நடைபெற்றுள்ளது.

பஞ்சேஸ்வரங்களில் ஒன்று எனக் கொள்ளப்படும் திருக்கேதீஸ்வரம் பல சிறப்புகள் கொண்டது. வரலாற்றுப் பழமை மட்டுமல்ல தேவாரத் திருப்பாக்களைப் பெற்றுக் கொண்ட பெருமையும் இதற்குண்டு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன அமையப் பெற்ற இச்சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவனார் திருக்கேதீச்சரநாத னென்றும், உமையம்மையார் கௌரி அம்பாள் என்றும் திருப்பெயர்கள் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

தலவிருட்சமாக வன்னிமரமும், தீர்த்தமாகப் பாலாவியும் அமைந்துள்ளன. ஆதியில் இச்சிவத்தலத்தில் கேது என்னும் கிரகம் பூசை செய்ததாக கூறப்படுகின்றது. அத்துடன் இராமபிரானும், இராவணனும் வழிபட்ட தலமாகவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களாலும் போற்றிப் பேணப்பட்டு வந்த இந்துக் கோயில்களில் திருக்கேதீஸ்வரமும் ஒன்றாகும். இந்தியாவின் தென்னகத்தே இருந்த தமிழ்நாடுகளிலும் இச்சிவனாலயம் நன்கு தெரியப்பட்டதாக, பிரசித்தி பெற்றதாக விளங்கியுள்ளது. நெடுங்காலத்திற்கு முன்பு மன்னாரின் மாதோட்டத்துறைமுகம் வணிகத் துறைமுகமாகப் பிரசித்தி பெற்றிருந்தது. இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்து வியாபாரத்தின் பொருட்டு வணிகர்கள் வந்து செல்லும் இடமாகவும் விளங்கியது.

இவ்வாறான ஒரு கேந்திர இடத்தில் அமைந்துள்ளமையால் கடல்கடந்தும் புகழும், சிறப்பும் கொண்ட சிவாலயமாக விளங்கும் பேற்றை திருக்கேதீஸ்வரம் பெற்றது.

புத்தசமயம் இலங்கையில் மூத்தசிவன் என்ற அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இந்து அரசனின் மகனான தேவநம்பியதீசன் காலத்திலேயே உள்வாங்கப்பட்டது. அதாவது விஜயன் இலங்கையில் கரையொதுங்கி சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்பே புத்தசமயம் புகுந்தது. அதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே அதாவது புத்தசமயம் வருகைக்கு முன்பே திருகேதீஸ்வரம் உள்ளிட்ட சிவாலயங்கள் பல இலங்கையி லிருந்துள்ளன என்பது நிரூபணமாகின்றது. நிறைவான உண்மையைத் தெளிவாக்குகின்றது.

அவ்வாறே ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாமிய சமயம் கருக் கொள்வதற்கு முன்னரும், பதினொராம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறிஸ்தவ சமயம் அடியெடுத்து வைக்கும் முன்னமே சிவவழிபாடும், இந்துசமய திருக்கோயில்களும் இந்நாட்டில் சிறப்புற்று இருந்தவை வெளிப்படுகின்றது. இவற்றினடிப்படையில் இலங்கையின் ஆதிசமயம் இந்துசமயமே என்பதும், ஏனைய சமயங்கள் இந்நாட்டில் புகுத்தப்படும் முன்னரே சிறப்புடன் இந்து சமயத்தவர்கள் இந்நாட்டில் வாழ்ந்தனர் என்பதும் புலப்படுத்தப்படுவதுடன் இருப்பின் பழமையும் வலியுறுத் தப்படுகின்றது.

ஏழாம் நூற்றாண்டில் பாடப்பட்டவை தேவாரத் திருப்பதிகங்கள். இலங்கையிலுள்ள திருக்கேதீஸ்வரம், திருகோணேஸ்வரம் ஆகிய தலங்கள் மீது தேவாரப் பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. சிவனாரின் சிறப்பும், இயற்கைவர்ணனையும் ஒருங்கே அமையப் பெற்றவை தேவாரத் திருப்பதிகங்கள். பத்துப் பாடல்கள் கொண்டது ஒரு பதிகம். தேவாரங்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூன்று நாயன்மார்களால் பாடப் பெற்றமையும் சேக்கிழார் பெருமான் திருமுறைகளைத் தொகுக்கும் போது முதல் ஏழு திருமுறைகளில் தேவாரங்கள் இடம் பெறுமாறு தொகுத்துள்ளார் என்பதும் தெரிந்ததே.

முதல் மூன்று திருமுறைகளிலே திருஞானசம்பந்தரது தேவாரங்களும், அடுத்த மூன்று திருமுறைகளிலே திருநாவுக்கரசரது தேவாரங்களும், ஏழாவது திருமுறையிலே சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரங்களும் இடம் பெற்றுள்ளன.

திருக்கோணேஸ்வரப் பெருமான் மீது திருஞானசம்பந்தர் "நிரைகழல் அரவம் சிலம்பொலியலம்பும்" என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியுள்ளார்.

திருக்கேதீஸ்வரநாதன் மீது திருஞானசம்பந்தர் "விருது குன்றமா மேருவில் நாணற" என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தையும், சுந்தரமூர்த்தி நாயனார் "நத்தார்படை ஞானன் பசு" என்று தொடங்கும் பதிகத்தையும் பாடியுள்ளனர்.

இலங்கைக்குள் புகுந்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட போர்த்துக் கேயர் நாட்டிலிருந்த இந்துக் கோயில்களைச் சிதைத்துச் சூறையாடினார். 1620 ஆம் ஆண்டில் திருக்கேதீஸ்வரமும் இவ்வாறன நிலைக்குள்ளானது. சிவாலயம் சிதைக்கப்பட்டு அதன் கற்கள் கோட்டை அமைப்பதற்கும் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண தமிழ் அரசை வீழ்த்தி அந்நாட்டைத் தமது ஆதிக்கத்தில் கொண்டுவர முற்பட்ட போர்த்துக்கேயர் அந்த அரசின் ஆதரவு பெற்றிருந்த திருக்கேதீஸ்வரத்தை முற்றாகவே சிதைத்தனர். போர்த்துக்கேயர் இந்நாட்டின் இந்துக்களின் பண்டைய இருப்பின் ஆதாரங்களை அழிப்பதில் செயற்பட்டனர். ஒரு சமூகத்தினதோ, மொழி, இனக் குழுக்களினதோ இருப்பையும், பழமை பெருமைகளையும் மறைப்பதற்கு திரிபுபடுத்துவதற்கு அவர்களது சமய, கலாச்சார சின்னங்களை அழிப்பது என்பது அன்று கைக்கொள்ளப்பட்டது. அதுவே இன்றும் நடைமுறையிலுள்ளது.

எது எவ்வாறிருந்த போதும் சிதைக்கப்பட்டு, பழம் பெருமை மறைக்கப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் கடந்த நிலையில் 1892ஆம் ஆண்டில் ஆறுமுகநாவலர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியால் இன்று திருக்கேதீஸ்வரம் மீளெழுச்சி பெற்றுள்ளது. உலக அரங்கில் தன் பண்டைய செல்வாக்கைப் பெற்று வருகின்றது. இலங்கை இந்துக்களின் இருப்பின் சின்னமாகப் பிரகாசிக்கின்றது.

பாடல் பெற்ற திருத்தலங்களை நினைவிற் கொள்ளும் போது ஆறுமுகநாவலரையும் நன்றியுடன் நினைவிற் கொள்ள வேண்டியது நமது கடமையாகின்றது. "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற பிரசுரத்தில் அவர் பின்வருமாறு மக்களைத் தெளிவுபடுத்துகிறார்.

"சைவசமயிகளே, தேவாரம் பெற்ற சிவத்தலங்கள் இரண்டு இலங்கையில் உள்ளன. அவைகளுளொன்றாகிய திருகோண மலைக்கு சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்திற்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும், சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன" என்றும்,

"மன்னாருக்குச் சமீபத்தில் மாதோட்டத்திலே திருகேதீஸ்வரம் என்னும் தேன்பொந்து ஒன்று உள்ளது. அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கிறது" என்றும் கூறியுள்ளார்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதும், இரண்டு நூற்றாண்டு களுக்குமேல் மறைக்கப்பட்டிருந்ததுமான பழம்பெரும் சிவாலயங்கள் இரண்டும் மீளெழுச்சி பெற்று இலங்கை வாழ் இந்துக்களின் பண்டைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த நாவலர் பெருமான் ஆற்றிய பணி மகத்தானது.

ஆறுகால பூசைகள் சிறப்பாக நடைபெறும் இச்சிவாலயத்தில் மகாசிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தைப்பூசம், பங்குனி உத்திரம், மார்கழித் திருவெம்பாவை உட்பட சகல சிறப்புத் தினங்களிலும் சிறப்பான பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசி விசாகதினத்தன்று பத்தாவது நாள் தீர்த்த உற்சவத்துடன் முடிவுறும் வருடாந்த திருவிழா நடைபெறுகின்றது.

தட்சிணகைலாச மான்மியம், மாந்தைப் பள்ளு என்பன இவ்வாலய வரலாறு பற்றிக் கூறுகின்றன. இவ்வாலயம் தொடர்பிலாக எழுந்த நூல்களாக திருகேதீச்சரத்துக் கௌரி நாயகி பிள்ளைத் தமிழ், திருகேதீச்சரத்துப் புராணம், திருகேதீச்சர நாதர் திருப்பதிகம், திருக்கேதீச்சரநாதர் கிள்ளை விடுதூது, திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல் என்பன விளங்குகின்றன.

தற்போது திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை இவ்வாலயத்தை நிர்வகித்து வருகின்றது.

சிதைப்பதும், அழிப்பதும், அடக்குவதும், மறைப்பதும் கால வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்படும். உரிய பெருமை மீளவெளிவரும்; பிரகாசிக்கும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாக ஒரு தத்துவமாகவே திருக்கேதீஸ்வர திருத்தல வரலாறு விளங்குகின்றது.

கௌரி அம்பாளுடன் வீற்றிருந்து, பலகாலம் மண்ணுள் மறைந்திருந்து மீண்டும் வெளிப்பட்டு அருள் வழங்கி வரும் எம்பெருமான் கேதீஸ்வரநாதன் துன்பங்களைத் துடைத்தெறிவான், துயரங்களைக் களைந்திடுவான், வாழ்வில் மங்களம் பொங்க வழிதருவான் என்று நம்பிக்கையுடன் தொழுவோம்.

ஆணவம் அடங்கும், அதர்மம் தகரும், தூயவள நிம்மதியான வாழ்வு நம்மைத் தேடிவர திருக்கேதீச்சரத்தான் திருவருள் கிட்டும். நம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்கொள்வோம். இவ்வாண்டு தேரேறி வலம் வந்த நம்பெருமான் திருவருளால் கொடுமைகள் களைந்து, நாடு நலம் பெற, நம்மவர் வளம்பெற வழியேற்படுவது திண்ணம் என்ற நம்பிக்கை வீணாகாது என்று நம்புவோம். நலம் சூழ, வாழ்வு சிறக்க நல்ல வழிகிட்ட பிரார்த்திப்போம்.

மே மாதம் 26ஆம் திகதியன்று இரதோற்சவம் நடைபெற்றது.



# தேரேறி வலம் வந்த திருக்கேதீச்சரநாதர்



கலாபூஷணம் பருத்தியூர் பால வயிரவநாதன்

சிவபூமியாம் எம் ஈழத்திருநாடு, பல பெருமைமிக்க வரலாற்றுச் சிறப்புக்களையும் தெய்வீக சம்பவங்கள் எண்ணற்ற நிகழ்வுகளையும் கொண்ட அற்புதத் தீவு ஆகும்.

எமது முழுமுதற் கடவுள் சிவனார் கால் பதித்த சிவனொளிபாதமலை இங்கு உள்ளதுடன், காத்தல் கடவுள் மகா விஷ்ணுவின் திரு அவதாரங்களில் ஒன்றாயிருந்து தோன்றிய ஸ்ரீ இராமபிரான் இலங்கைக்கு வந்தமையும் மேலும் எமது நாட்டிற்குக் கிடைத்த ஒப்பற்ற பெரும் பேறுமாகும்.

இதுமட்டுமா? சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் ஆண்ட பூமி இது. சிவபெருமானின் அருள் கடாட்சம் கிடைத்த மையினாலேயே அவன் பெயருடன் இராவணன் + ஈஸ்வரன் என்ற சொற்பதம் இணைந்து இராவணேஸ்வரன் எனச் சொல்லப்படுவதாயிற்று. மேலும் நாம் சொல்லிக் கொள்ள வேண்டியவை பலவுண்டு. அவை ஏராளம், ஏராளம் !

இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, சிவ வழிபாட்டிற்கென பஞ்ச ஈஸ்வரங்கள் இலங்கையின் பல திசையிலும் தோன்றியிருந்தன. இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களால் மேலும் பல சிவாலயங்களும் தோன்றியிருந்தன.

வட இலங்கையின் கண்ணே யாழ்ப்பாணத்தில் (கீரிமலை) நகுலேஸ்வரம், கிழக்கு மாகாணம் திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம், தென்னிலங்கையின் தேவேந்திர முனையில் தொண்டீஸ்வரம், மேற்கே சிலாபத்தில் முன்னேஸ்வரம் அத்துடன் வடமேற்கு வன்னியோடிணைந்த மன்னாரில் திருக்கேதீஸ்வரம் ஆகியன அமைந்துள்ளமை, தொன்மைமிகு சைவத்தின் பெருமைகளைப் பறைசாற்றி நிற்கின்றமைக்குச் சான்றாகும்.

இவற்றுள் திருக்கேதீஸ்வரம் சிவாலயத்தினை நாம் எடுத்துக் கொண்டால், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் இத்திருத்தலத்தினை வியந்து போற்றித் திருப்பதிகம் பாடியருளினார்கள்.

காலத்திற்குக் காலம் எமது சிவாலயங்கள் அந்நியர் ஆக்கிரமிப்புக்களால் பல சோதனைகளைக் கண்டபோதும், ஈசனின் திருவருள் கூடி நிற்க மக்களின் பக்தியுணர்வு காரணமாக, எல்லாவித இடர்களுமே துவம்சமாகிப் போயின. இன்று உலகம் முழுவதுமே இந்து சமயம் மாபெரும் தத்துவங்களைப் போதிக்கும் மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

*"அஞ்சுவது யாதொன்றுமில்லை*
*அஞ்சவருவ துமில்லை"* — என்றார் அப்பர் அடிகள். மக்கள் மனதினுள் சிவன் அருட்சக்தி இருப்பின் எத்தகைய இடர்வரினும், அவர்தம் சமயப் பற்றினால், பிறரால் ஏற்படும் துன்பங்கள் புகுந்திடுமோ?

மேலும் சிவன் கழுவடி சேவித்தோருக்கு யாதுகுறை நேர்ந்து விடப் போகின்றது? இதனையே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும்,

*மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்*
*கண்ணில் லஃதுறுங் கழுமல வளநகர்ப்*
*பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே*

என்கின்றார். எனவே அடியவர்க்கு இனிய அருள் பாலிக்கும் சிவபெருமான் திருகழல் போற்றி நிற்கும் நாம், திருக்கேதீஸ்வர நாதன் கௌரி அம்பாள் சமேதரராக, தேரேறிவரும் தெய்வீக அருங்காட்சியைக் காணுவது பெரும்பேறாகும்.

திருவிழாக்களில் தேர் உற்சவம், தீர்த்த உற்சவங்களில் நாம் பங்கு கொள்ளும்போது ஏற்படும் புளகாங்கித உணர்வுகள் இயம்புதற்கரியது. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை, சுவாமி இரதமேறி, திருவுலா வரும் காட்சியைக் காணப் பிரியப்படாதோர் யாருளர்?

எல்லாவற்றையுமே எமக்கு அருளும் எங்கள் அப்பனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும் ? அவன் திருக்கழலை அவன் எழிலை, அவன் திருவுலாக் காட்சிகளை கண்டு மெய்மறந்து ஏத்தி வழிபாடு செய்தலையன்றி வேறு எதனையும் வழங்க எம்மால் இயலாது.

அவன் அருளாலே அவனை வணங்கித் தொழுது நிற்கின்றோம்.

*"அப்பனை ஆராவமுதினை வள்ளலை*
*எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்துமின்,*
*அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே"*

*(திருமூலர் திருமந்திரம்)*

மேலும் சிவவழிபாடு பற்றி யோகசுவாமியார் இவ்வாறு பாடுகின்றார்.

*"அண்ணன்மாரே ! தம்பிமாரே ! ஆச்சிமாரேகேளீர்*
*அருமையான தெய்வம் நாங்கள் அதையறிந்து வாழ்வீர்*
*இன்னதன்மை என்று நம்மை எடுத்துச் சொல்வாருண்டோ*
*என்ன பயமெங்களுக்கு எல்லாஞ் சிவமன்றோ*
*அவனின்றி ஓரணுவும் அசையா தெனப் பெரியார்*
*அன்று சொன்ன நிறைமொழியை மறுப்பதுவுஞ் சரியோ*
*அங்கிங் கெனாதபடி எங்குச் சிவமென்று*
*அறிந்தடங்கி அகிலத்திலே வாழ்வதுவே நன்று !"*

எமது ஸ்தலங்களில் நடைபெறுகின்ற தேரோட்ட உற்சவத் தினைக் காணும் நாம் "தேரோட்டம்" எதற்காகக் கோவில்களில் நடைபெறுகின்றன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை என்பனவைகளை அழிக்கும் "மும்மல காரியங்களை" எமக்கு உணர்த்தவே, இரத உற்சவங்கள் ஆலயங்கள் தோறும் நடாத்தப்படுகின்றன.

மும்மலங்களை அழித்தலையும் பின்னர் ஆன்மாக்களுக்கு அருள்புரிதலையும் காட்டுதற்கு பின்வரும் புராண வரலாறுகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும்.

சிவபெருமான் முப்புரங்களை எரிக்கப் பூமியினையும் அண்டங்களையும் பிரதான பீடங்களாகக் கொண்டார். தேரின் சில்லுகளாக சந்திர, சூரியரும், நாண் ஏற்றுதற்கு அம்பாக திருமால் கொண்டிருக்க, சிவனார் ஏறி அமர்ந்திருக்க முன் திருமால் தான் அம்பு ஆக முப்புரத்தை அழிக்கப் போகின்றேன் என எண்ணிக் கொண்டாராம்.

திருமாலின் எண்ணத்தை, தன் திருவுளத்தால் புரிந்து கொண்ட சிவபிரான் ஒரு புன்முறுவலைச் சிந்தினார். என்னே ஆச்சரியம்! முப்புரங்கள் கணப்பொழுதில் கருகின.

இதனையே, திருமூலர், தமது திருமந்திரத்தில்,

*"முப்புரமாவது மும்மல காரியம்*
*அப்புரம் எய்தமை ஆரறிவாரோ"* என்கின்றார்.

தேர் உற்சவத்தின்போது எழுந்தருளும் மூர்த்தி ஆக்ரோஷமாகப் புறப்படுவதையும், பின்னர் சம்ஹாரம் நிறைவு பெற்று, தேரில் இருந்து இறங்கும்போது கோபம் நீங்கி, குளிர்ச்சியுடன் வருவதை சுவாமிக்குப் பச்சை சாத்துதல் மூலமும் நாம் கண்டு கொள்ளலாம்.

எந்த ஒரு காரியத்தையும் நம் முன்னோர்கள் காரணங்கள் இன்றிச் செய்வதேயில்லை. மும்மலங்களை அழிப்பதும், ஆன்மாக்களை சர்வசம்ஹார காலத்தின் பின்பு "இளைப்பாற்றுதல்" படுத்தலையும் அதாவது பல்வேறு பிறவிகளை எடுத்து எடுத்து உழன்றுபோன ஆன்மாக்களை இளைப்பாற வைத்தலுமாகும். இது அருளும் நிலை.

இவ்வண்ணமே தேர் உற்சவம் முடிந்து தீர்த்த உற்சவம் நடைபெறுவதையே மேற்படி "அருளல்" எனும் தொழில் எமக்குக் காட்டுகின்றன.

எனவே கொடியேற்றம் படைத்தல் தொழிலையும், வாகனத் திருவிழா காத்தல் தொழிலையும், தேர் திருவிழா அழித்தல் தொழிலையும், தீர்த்த உற்சவம் அருளல் தொழிலையும், மௌன உற்சவம் மறைத்தல் தொழிலையும் காட்டுவன என்பதை அறிந்து கொள்வோமாக!

"நமச்சிவாய" எனும் மந்திரத்தை நாம் என்றும் ஓதுதலே இறைவனுக்குப் பிரியமான ஒன்றாகும். இதனையே மாணிக்கவாசகப் பெருமானும், ஈசனைப் பலவாறு போற்றித் துதி செய்கின்றார். இறைவன் இறைவியுடன் திருவீதியுலா வரும்போது "நமசிவாய" எனும் திருவாசகத்தினைப் பாடுவீர்களாக!

சிவபுராணத்தில் வாழ்க! என்றும், வெல்க! என்றும், போற்றி! என்றும் பாடப்படுகின்றன. இச்சொற்பதங்கள் எமக்கு ஆறுதலையும், மன எழுச்சியையும், பணிவுடனான, பக்தியுணர்வினையும் ஊட்டுகின்றன.

*நமச்சிவாய வா(அ)ழ்க! நாதன்தாள் வாழ்க!*
*இமைப் பொழும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!*
*கோகழி யாண்ட குருமணி தன் தாள் வாழ்க!*
*ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க!*

*வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!*
*புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!*
*கரங்குவிவார் உள் மகிழுங் கோள்கழல்கள் வெல்க!*
*சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க!*

*ஈசனடி போற்றி எந்தையடி போற்றி!*
*தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி!*
*நேயத்தே நின்ற நிமல னடி போற்றி!*
*மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி!*
*சீரார் பெருந்துறை நம் தேவ னடி போற்றி!*

நாம் பதிகங்களைப் பாடும்போது அதன் அர்த்தங்களைப் புரிந்து பாடுகையில், எல்லையில்லா பக்தியுணர்வும், மேனி எங்கும் புத்துணர்வு, நெகிழ்வு ஏற்படுதலையும் எம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

## உலக சைவ மாநாட்டில் இலங்கைப் பிரமுகர்கள்

உலக சைவப் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பன்னிரண்டாவது உலக சைவ மாநாடு நடைபெற்றது. இதில் இந்தியாவிலிருந்து மட்டுமல்ல, இலங்கை, லண்டன், அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மொரிசியஸ் போன்ற நாடுகளிலிருந்தும் பலர் வருகைதந்து நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

இரண்டாவது நாளான பெப்ரவரி 6ஆம் திகதி காலை நிகழ்ச்சியின் போது யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அன்றையதினம் காலை நிகழ்வில் பத்து இறைபணியாளர்களது திருவுருவப் படங்கள் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன. இவர்களுள் ஒருவராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவிருந்து பெரும் பணியாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி, தெய்வத்திருமகள், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது திருவுருவப் படமும் திரைநீக்கம் செய்யப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து, மாநாட்டு சிறப்பு மலர் வெளியீடு இடம் பெற்றது. சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டவர்களுள் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை தலைவரான திரு. கா. தயாபரன் அவர்களும், தொடர்ந்து இடம் பெற்ற ஆய்வுக்கோவை கட்டுரைத் தொகுப்பு நூலின் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டவர்களுள் மாமன்ற உப தலைவரும், மாமன்ற சமுகநலன் குழுத் தலைவருமான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களும் அடங்குகிறார்கள்.

மேற்படி நிகழ்வின் போது கலந்து கொண்ட இலங்கைப் பிரமுகர்கள் பலருக்கு கௌரவம் வழங்கப்பட்டது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த

# திருக்கேதீச்சரப் பதிகம்



விருது குன்றமா மேருவி னாணரை வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க் கருவினை யடையாவே.

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர் மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேன் மொய்த்தெழும் வினைபோமே.

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பக னினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய் கேதீச்சர மதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்னலங்கெட வடர்த்தவற் கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னிலங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநுன் னடியிணை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தவெம் பெருமானே.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சர மடைமின்னே.

மாடெலாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொன் னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள் பரகதி பெறலாமே.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த

# திருக்கேதீச்சரப் பதிகம்



நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான் திருக்கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறைக் கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை பெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனெத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் நகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் நகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச சரத்தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

## புதுச்சேரி பெரிய புராண பன்னாட்டு ஆய்வு மாநாட்டில் இலங்கை பிரமுகர்களுக்கும் கௌரவம்

புதுச்சேரி பன்னிரு திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் மூன்றாவது ஆண்டு விழாவும், பெரிய புராண பன்னாட்டு ஆய்வு மாநாடும் பெப்ரவரி 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை புதுச்சேரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்தியா, இலங்கை உட்பட பல உலக நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், விருதுகளும், பட்டங்களும் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

இரண்டாவது நாளான பெப்ரவரி 13ஆம் திகதி காலை நடைபெற்ற ஆய்வரங்கம் நிகழ்வின் போது மாமன்ற உப தலைவரான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா முன்னிலை வகித்தார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரும், மாமன்ற முகாமைப் பேரவை சிறப்பு உறுப்பினருமான திருமதி சாந்தி நாவுக்கரசன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

மூன்றாவது நாளான பெப்ரவரி 14ஆம் திகதி காலை நடைபெற்ற கருத்தரங்கம் நிகழ்வின் போது மாமன்ற பிரதிச் செயலாளரான கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

மேற்படி மாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட திருமதி சாந்தி நாவுக்கரசன், விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் உட்பட பலருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

## மாமன்றத்தில் சிவராத்திரி

கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதியன்று இரவு மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. அன்றைய தினம் மாலை 6.30 மணியளவில் சாயங்காலப் பூசையுடன் ஆரம்பமாகி இரவு நான்கு சாமம் பூசைகளும் , லிங்கோற்பவ கால சிறப்பு அபிஷேகமும் இடம் பெற்றன.

லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் பஜனைப் பாடல் நிகழ்ச்சியும், இரத்மலானை விடுதி மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு அம்சங்களாக இடம் பெற்றன. மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" மகா சிவராத்திரி சிறப்பிதழும் அன்றைய தினம் முதலாம் சாமப் பூசையின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

### சிவதீட்சை வைபவம்

மகா சிவராத்திரியையொட்டி மாமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிவதீட்சை வழங்கும் வைபவம் மகா சிவராத்திரி தினமான மார்ச் 13 ஆம் திகதியன்று காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. சிறுவர் முதல் பெரியோர் வரையிலான பலர் இதில் கலந்து கொண்டனர். மாமன்ற சமய விவகாரக் குழுவினரின் பங்களிப்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# திருப்பதிகங்களில் போற்றப்படும் திருக்கேதீச்சரம்

## திருநாவுக்கரசர் தேவாரத்தில் கேதீச்சரம்

பூதியணி பொன்னிறத் தார்பூண நூலர்
பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர்
கேதிசரம் மேவினார் கேதா ரத்தார்
கெடில வடஅதிகை வீரட் டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவா ளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவி னாரே!

### பொழிப்புரை

சிவபிரான், திருவெண்ணீறு பூசியவர், பொன்னிறத்தினர், முப்புரி நூலினர், அரவத்தையுடைய சங்கரர், காதில் வெண்குழையினர், கேதீச்சரம், கேதாரம், திருவதிகை வீரட்டானம், திருமழபாடி, வேதிகுடி, மீயச்சூர் ஆகிய இடங்களில் உறைபவர். பெருந்துயரத்தை தருவதாகிய வினையைத் தீர்க்கும் பெருமான் மழுப்படை ஏந்தியவராக திருவீழிமிழலையில் எழுந்தருளியுள்ளார்.

*(இது திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பெற்ற பதிகப் பாடல்களுள் ஒன்று. இப்பதிகம் திருவீழிமிழலை திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவன் மீது பாடப்பெற்றாலும், இறைவன் வெவ்வேறு தலங்களில் மேவி அருள்பாலிக்கும் நிலையை இங்கு எடுத்துச் சொல்கிறார். அந்தவகையில் ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சர திருத்தலத்தையும் இப்பதிகப் பாடலில் திருநாவுக்கரசர் குறிப்பிட்டிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது.)*

## சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் திருக்கேதீச்சரமும், திருக்கோணேஸ்வரமும்

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்!

### பொழிப்புரை

திருஞானசம்பந்தர் அந்த இராமேச்சரம் என்னும் நகரில் தங்கி இனிதே சிறந்திருந்து, பெரும் சமுத்திரம் பக்கமாகச் சூழ்ந்து ஒலித்திடும் வகையில் நன்கு விளங்கும் ஈழநாடு என்னும் இலங்கையில் இனிது பொருந்திய திருகோணமலை பதியிலே விரும்பி இனிதமர்ந்த சிவந்த கண்ணுடைய தருமதேவதையாய இடப வாகனத்தை மேற்கொண்ட செல்வர் சிவபெருமானைப் போற்றி செய்து வணங்கிப் பாடி, அப்பால் இலங்கை நகரில் உயர்ந்த மாடங்கள் தம்முடிமீதுள்ள சந்திரனை முட்டும் படியாக நெருங்கி ஓங்கிய சீருடைய மாதோட்டம் என்னும் பெருநகரில் விளங்கிடும் திருக்கேதீச்சரத்திலே கௌரி அம்பாளுடன் இனிதே சிறந்து விளங்கும் அண்ணல் சிவனின் செவ்விய திருப்பாதங்களை நினைந்து மிகவும் பணிந்து போற்றிப்பாடி அன்பருடன் அங்கிருந்தே எடுத்திடக் குறையாத பொற்கிழியைப் பெற்று மகிழ்ச்சியுற்றார்.

*(திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இராமேஸ்வரத்தில் தங்கியிருந்த போது ஈழநாட்டிலே திருக்கோணேஸ்வரத்திலும், திருக்கேதீச்சரத்திலும் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை நினைந்து போற்றி திருப்பதிகங்கள் பாடியுள்ளார். இந்தப் புராண வரலாற்றையே சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தில் எடுத்துச் சொல்லியிருப்பதை மேற்கண்ட பாடலில் காணமுடிகிறது.)*

## சுந்தரர் தேவாரத்தில் கேதீச்சரம்

ஈழ நாட்டுமா தோட்டந் தென்னாட்டு இராமேச்சரம்
சோழ நாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழி யூரன நாட்டுக் கெல்லாம் அணியாகிய
கீழை யில்அர னார்கிடம் கிள்ளி குடியதே!

### பொழிப்புரை

சிவபெருமானாருக்கு உரிய தலங்கள் ஈழநாட்டிலுள்ள மாதோட்டம், தென்னாட்டிலுள்ள இராமேச்சரம், சோழ நாட்டிலுள்ள துருத்தி, நெய்த்தானம், திருமலை, கடல் சூழ்ந்த நிலவுலகிற்கெல்லாம் அணியாய் விளங்கும் கீழையில் கிள்ளிக்குடி என்பவை.

*(சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் தங்கியிருந்த போது பல தலங்களையும் நினைந்து பாடியருளிய திருப்பதிகப் பாடல்கள் "திருநாட்டுத் தொகை" என்ற மகுடத்தின் கீழ் அடங்கியிருக்கின்றன. இப்பதிகத்தின் ஏழாவது பாடலில் திருக்கேதீச்சர திருத்தலத்தைப் பற்றியும் சுந்தரர் குறிப்பிட்டிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது.)*

## மணிவாசகரின் திருவாசகத்தில் கேதீச்சரம்

ஏர் தரும் ஏழுலகு ஏத்த
எவ்வுருவும் தன்னுரு வாய்
ஆர் கலிசூழ் தென்னி லங்கை
அழகுஅமர் வண்டோ தரிக்கு
பேர் அருள் இன்ப மளித்த
பெருந்துறை மேய பிரானை
சீரிய வாயால் குயி லே
தென்பாண்டி நாடனைக் கூவாய்!

(குயிற்பத்து)

வந்திமை யோர்கள் வணங்கி யேத்த
மாக் கருணைக் கடலா யடியார்
பந்தனை விண்டற நல்கு மெங்கள்
பரமன் பெருந்துறை ஆதியந்நாள்
உந்து திரைக் கடலைக் கடந்தன்று
ஓங்கு மதிலிலங்கை யதனில்
பந்தணை மெல்விர லாட் கருளும்
பரிசறி வாரெம்பி ரானாவாரே!

(திருவார்த்தை)

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தின் குயிற்பத்து, திருவார்த்தை ஆகியவற்றில் இலங்கையில் இராவணன் மனைவி மண்டோதரிக்கு இறைவன் அருள் செய்த தலம் எனக் குறிப்பிட்டிருப்பது திருக்கேதீச்சரமே என்று வரலாற்று ஆய்வாளர்களால் சொல்லப்பட்டுள்ளது. இதுபற்றியும், மண்டோதரியின் தந்தையான மயன் என்பவன் வாழ்ந்த இடம் மாதோட்டம் என்பதையும் வரலாற்று ஆராய்ச்சி அறிஞரான ஸ்ரீமான் வ. குமாரசாமிப்பிள்ளை என்பவர் எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது.



# திருக்கோயில் ஏன்?

இரா. இராஜசேகரன்

கடவுள் எங்கும் நிறைந்தவர்; எல்லாப் பொருட்களிடத்தும் தங்கியிருப்பவர். அவ்வாறு எங்கனும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனுக்குத் திருக்கோயில் கடவுள் எழுந்தருளியுள்ள இடம்! ஆனால் கடவுளுக்காகத் திருக்கோயில்கள் அல்ல. மானிட குலம் இறைவனைக் காண, அதனுடன் கலந்து உறவாட இறைநலன்களைப் பெறத் துணையாய் அமைவது திருக்கோயில். அடுத்து வாழப்பிறந்த மனித இனம் ஒன்றுபடவும், ஒப்புரவு நலன்கள் பெற்றுச் சிறந்து வாழ்ந்திடவும் திருக்கோயில் துணையாய் அமைவது. திருக்கோயிலை மையமாகக் கொண்டு இறைமைத் தத்துவம் மேலாண்மை செய்தது! இறைமைத் தத்துவத்தின் வழிநின்ற மக்கள், சமுதாயத்தை ஒருங்கிணைக்க சமுதாய மேம்பாட்டுக்குரிய நெறிமுறைகளைக் காண – சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்கு உருவம் கொடுக்கத் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு இயங்கினர். செயல்பட்டனர். ஏன்? அப்பாலுக்கு அப்பாலாக விளங்கிய கடவுளையே சமுதாய உறுப்பாகக் கொண்டு வந்து செயல்படுத்தினர்; ஏவல் கொண்டனர். இஃதொரு அருமையான தத்துவம்.

திருக்கோயில்கள் கடவுள் எழுந்தருளியிருக்கும் இடங்கள் மட்டுமல்ல, சமுதாய மையங்கள்! சமுதாயத்தின் இயக்கம்!

## சமுதாய மையம்:

நடுவூரில் திருக்கோயில் உயர்ந்து விளங்கும்; திருக்கோயிலைச் சுற்றி நான்கு புறமும் மக்கள் சூழ்ந்து வாழ்வர். நான்கு திசைகளிலிருந்தும் மக்கள் திருக்கோயிலுக்கு வந்து கூட, நான்கு திசைகளிலும் பெரிய வாயில்கள்! ஊர் முழுதும் ஒலித்து அழைக்கும் மணிகள்; இஃதோர் அற்புதமான அமைப்பு! மாலை நேரத்தில் ஊர் மக்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினருடன் அணிபெற ஆலயத்திற்கு வருதலும், வணங்கி மகிழ்தலும் சிறந்த காட்சி! இறை வழிபாடு முடிந்தவுடன் இங்குமங்குமாகத் தனித் தனியாகவும் கூட்டாகவும் ஒருவர் மற்றவரை நலம் விசாரித்தும், கலந்தும் களித்துப் பேசுதலும், திருமணம் முடித்தல் முதலிய நிகழ்வுகள் பற்றிப் பேசுதலும் இன்றைக்கும் நடைபெறும் நிகழ்ச்சி. திருக்கோயிலில் ஒருமனப்பாட்டுடன் மக்கள் கூடுவர்; களித்தும் கலந்தும் பேசுவர். அதனால், திருக்கோயில் வளாகத்துக்குள் அன்பு செறிந்த, அருள் நலம் கனிந்த மனித உறவு வளர்கிறது; மனித நேயம் வளர்கிறது. சில சமயங்களில் அங்கேயே ஒரு கூட்டம் கூடுகிறது. கிராமத்தின் பொது நிகழ்வுகள் கலந்து பேசப்படுகின்றன. குடி மராமத்து நாள் நிர்ணயித்தல், தண்ணீர் வரும் கால்கள் வெட்டுதல், நல்லேர் கட்ட நாளும் நாழிகையும் முடிவு செய்தல், விதை தெளிக்க நாள் முடிவு செய்தல், இன்னொரன்ன ஊரின் தேவைகளையும் ஆய்வு செய்து முடிவு எடுத்தல் நிகழ்கின்றன. இதனால் சமுதாயம் ஒருங்கமைவு பெறுகிறது. ஓர் அருமையான கூட்டு வாழ்க்கை கால் கொள்கிறது.

## ஒப்புரவு வாழ்க்கை:

திருக்கோயிலில் சிறந்த ஒப்புரவு நெறி வளர்ந்தது. பணி செய்வோர் உயர்வு தாழ்வு மனப்பான்மையின்றி பணி செய்வர். திருக்கோயிலில் இறைவன் திருமுன்னர் திருவமுது படைக்கப்படுகின்றது. திருக்கோயிலைச் சார்ந்து வாழ்பவர்கள் – பணி செய்பவர்கள்; அனைவரும் தம்முள் எந்தவித வேறுபாடுமின்றி அந்தத் திருவமுதைப் பங்கிட்டு உண்பதும் உழைப்பதும் ஒரு பொருள் பொதிந்த காட்சி.

## கவிச்சாலை:

அருமையான கல்வியினைத் திருக்கோயில் வழங்கியது. திருவாவடுதுறைத் திருக்கோயிலில் இலக்கணம் கற்றுத் தரும் கல்விச்சாலை இருந்ததாகவும், திருவாமாத்தூர் திருக்கோயிலில் திருமுறை பயிற்றுவிக்கும் கல்விச்சாலை இருந்ததாகவும். கல்வெட்டு கூறுகிறது. திருக்கோயில்களில் பட்டி மண்டபங்கள் நிகழ்ந்துள்ளன.

## கலைக்கூடம்:

திருக்கோயில் ஒரு சிறந்த கலையியில் கூடம். திருக்கோயில் சிற்பக்கலையின் உறைவிடமாக விளங்குகிறது. மதுரை, கிருஷ்ணாபுரம், திருப்பெருந்துறை, தாராசுரம், கங்கை கொண்ட சோழபுரம், பேரூர், காஞ்சி, மாமல்லபுரம், தஞ்சை முதலிய ஊர்களில் உள்ள திருக்கோயிற் சிற்பங்கள் சிறந்தவை. பல்வேறு வண்ணங்களால் தீட்டப்பட்ட ஓவியங்களும் திருக்கோயில்களை அணி செய்துள்ளன. ஆடற்கலையும் / பாடற்கலையும் / இசைக்கலையும் / நாடகக் கலையும் வளர்ந்ததும் வளர்வதும் திருக்கோயிலைச் சார்ந்துதான். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசேசுவர நாடகம் நடந்திருக்கிறது.

## மருத்துவச் சாலை:

திருக்கோயில் சார்ந்த வாழ்க்கை முறையில் மருத்துவம் சிறந்த முறையில் விளங்கியிருக்கிறது. திருக்கோயில் தத்துவத்தைக் கண்டவர்கள் சித்தர்கள். புறத்தே திருக்கோயிலைக் கண்ட சித்தர்கள் ஊனுடம்பாம் திருக்கோயிலையும் பேண சித்த மருத்துவம் கண்டார்கள். இறைவனே மருந்தாகவும் மருத்துவனாகவும் நின்று அருள் செய்பவன். எனவே எண்ணற்ற நோய்களை நீக்கி "மருந்தீசன்" என்றும் "வைத்தியநாதன்" என்றும் பெயர் பெற்று விளங்குகின்றான். திருக்கோயில் வளாகத்தில் சிறந்த மருத்துவச்சாலைகள் இருந்தன. திருவாவடுதுறையில் ஒரு வைத்தியக் கல்லூரி இருந்ததாகவும், காஞ்சிபுரம் பக்கத்தில் உள்ள முக்கூடலில் ஒரு வைத்தியசாலை நிர்வகிக்கப்பட்டதாகவும் அந்த ஊர்க் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. மேலும் தஞ்சையில் குந்தவைப் பிராட்டியாராலும் திருவிசலூர், திருப்புகலூர், கோவந்தபுத்தூர், குன்றத்தூர், மைசூரைச் சார்ந்த சுகடுரிலும் வைத்தியசாலைகள் நிறுவப் பெற்றிருந்தன. "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய் தீர்க்கவல்லான் தன்னை" என்கிறார் அப்பர் பெருமான்.

## ஊராட்சி மன்றம் :

திருக்கோயில்களில் ஊராட்சி மன்றங்கள் அமைந் திருந்தன. அவை, ஊராட்சியின் மேலாண்மைக்குரிய பணிகளைத் திறம்பட செய்தன. நீர்நிலைகளை ஆழப்படுத்துதல், நீர்நிலைகளைத் தூய்மையாகப் பேணுதல், காடுகள் வளர்த்தல், அவ்வப்பொழுது மக்கள் மன்றத்தில் தீர்த்து வைத்தல் முதலியவைகளை ஊராட்சி மன்றங்கள் திறமையாகச் செய்து வந்துள்ளன. திருக்கோயிலைச் சுற்றி வளர்ந்து வந்துள்ள ஆட்சி முறையில் நிறைவான மக்களாட்சித் தேர்வு முறை இடம் பெற்றிருந்தது. "குடவோலை"யின் மூலம் மக்கள் தங்கள் ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்வு செய்தனர்.

## நீதிச்சபை :

திருக்கோயிலை மையமாகக் கொண்டு நீதி விளங்கியது. திருக்கோயில்களில் நீதி வழங்கு சபைகள் இருந்தன. அந்தச் சபைகள் வழங்கிய நீதிகள் வரலாற்றுப் புகழுடையன. திருக்கோயில் தத்துவத்தில் கடவுளும் நீதிக்குக் கட்டுப்பட்டவர். திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கும், சுந்தரருக்கும் இடையேயிருந்த வழக்கைக் கூறி, இறைவன் திருவெண்ணெய் நல்லூர் பஞ்சாயத்தார் முன்னே நீதிகேட்டு நின்றான். அதுபோலவே செட்டிப் பெண்ணுக்கு நலம் செய்ய நினைந்த திருப்புறம்பியத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், திருக்கோயிலில் விளங்கிய நீதிசபையின் முன்னால் சாட்சிக் கூறி உதவி செய்தான். அதுபோலவே மதுரையில் எழுந்தருளியுள்ள ஆலவாயண்ணல், மாமனாக வந்து வழக்குரைத்தான். திருக்கோயில்கள் நீதிதேவதையின் திருக்கோயில்களாகவும் விளங்கின.

## திருத்தொண்டுப் பயிற்சி :

திருக்கோயில் திருத்தொண்டை வளர்த்து. திருக் கோயிலைச் சார்ந்து நடைபெற வேண்டிய தொண்டுகள் செய்வதற்குப் பயிற்சிப் பள்ளி ஒன்றைக் கணநாதநாயனார் நடத்தினார். திருக்கோயிலைச் சார்ந்து, திருமாலை தொடுத்தல் முதல் சுவைமிக்க திருவமுது படைத்தல் வரை பல்வேறு தொண்டுகள் நடைபெற்று வந்துள்ளன.

திருவாமாத்தூர்த் திருக்கோயிலில், கண் பார்வை யிழந்தோர் 16பேர் உண்டியும், உறையுளும் பெற்றுத் திருமுறை பயின்றனர். கண்ணிழந்த சுந்தரர்க்கு இடர்பாடின்றி நடக்க ஊன்றுகோல் கொடுத்து உதவியது திருவெண்பாக்கத்துத் திருக்கோயில் வட்டம் ஆகும்.

## நீர்நிலைப் பாதுகாப்பு :

திருக்கோயிலின்றும் பிரிக்கப்படாது உடனிருந்து இயங்குகிறது தீர்த்தம். அதாவது திருக்குளம், தீர்த்தத்தைச் சார்ந்தே திருக்கோயில் விளங்குகிறது. திருக்கோயில்களைச் சார்ந்து மிக அகலமாகவும், ஆழமாகவும் எழிலுற அமைந்துள்ள திருக்குளங்களைக் காணும் பொழுதெல்லாம் நமது சமுதாய முன்னோடிகள் நமது சமுதாய அமைப்பை நிர்மாணித்த திறன் வியப்பினை அளிக்கிறது. இந்தத் திருக்குளங்களைப் பாதுகாத்தல், தூய்மையாகப் பேணுதல் திருக்கோயிலின் கடமையாக இருந்தது. திருவாரூரில் கமலாலயம் என்று புகழ்பெற்ற திருக்குளத்தை கண்ணிரண்டுமில்லாத குருடராக வாழ்ந்த தண்டியடிகள் தூர்வையெடுத்துத் தூய்மை செய்த அரும்பெரும் சாதனையைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பதிவு செய்கிறார்.

## விழவுமலி வாழ்க்கை :

விழவு நிறைந்த வாழ்க்கை தமிழர் வாழ்க்கை. திருவாரூர்த் திருக்கோயிலில் விழா நிகழ்ந்ததைப் பன்னிரண்டு திருமுறைகளுள் ஒன்றான திருப்பல்லாண்டு எடுத்துக் கூறும். ''குழல் ஒலியாழ் ஒலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகு திருவாரூர்'' என்பது திருப்பல்லாண்டு. சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து இருந்த நாளில், திருவாரூர் வசந்த விழாவை நினைத்து திருப்பதிகம் பாடினார் என்பது வரலாறு. விழாக் காலங்களில் விழா நிகழும் ஊர்களில் உள்ள இல்லங்களில் எல்லாம் விருந்தினர் சூழ்ந்து வந்திருப்பார். உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒரணியில் நின்று தேர் இழுக்கும் காட்சி, சமுதாயம் ஓர் உருப்பெற்றுள்ள காட்சியைப் புலப்படுத்தும்.

## சுகாதார வாழ்வு :

திருக்கோயில் வளாகத்தில் அகன்ற முச்சுற்றுக்கள், உயர்ந்த மதில்கள் சூழ அமைந்திருப்பதால் தூய்மையான காற்றுண்டு! எல்லாத் திருக்கோயிகளிலும் தூய்மையான தண்ணீருண்டு! இறைவனுக்குப் படைக்கும் காய்களும், கனிகளும் உணவிற் சிறந்தவை! இவற்றை உண்டு வாழ்ந்தால் ஏன் நோய் வருகிறது? அப்பரடிகள் திருக்கோயில் வளாகத்தை தூய்மை செய்தார். திருக்கோயிலைச் சார்ந்து தூய்மை செய்வதோடு திருக்கோயிலைச் சார்ந்திருந்த வீதிகளிலும் தூய்மை இயக்கம் வளர்ந்தது.

## தமிழாய்வு :

தமிழரின் தாய்மொழியாகிய தமிழ், திருக்கோயில் வளாகத்தில் வளர்ந்தது! தமிழ், திருக்கோயில் தத்துவத்திற்கு உருக் கொடுத்தது. சங்கப் புலவர்களின் தலைவனாக இறைவன் அமர்ந்து தமிழை ஆய்வு செய்தனன். அவன் மட்டுமா? உமையம்மையும் உடனிருந்து ஆய்வு செய்தாள். திருக்கோயில் வளாகத்திற்குள் தமிழோடு இசைபாடல் ஓதப்பெற்றது; தமிழாய்வு செய்யப் பெற்றது. ஆக, மானிட இயக்கத்தின் ஊற்றாக இருக்கிற சிந்தனை, கருத்து, இலக்கியம், தத்துவம் ஆகிய அனைத்தும் திருக்கோயில் சூழலிலேயே காணப் பெற்றன; படைக்கப் பெற்றன.

## எல்லா உயிர்க்கும் இறையருள்:

திருக்கோயில் தத்துவத்தில் விலங்குகள், பறவைகள் முதலியனவும் உரியவாறு பாராட்டப் பெற்றுள்ளன; பேணப் பெற்றுள்ளன! ஏன்? மதுரைத் திருக்கோயில், திருவானைக்கா திருக்கோயில் முதலியவற்றில் இறைவனை யானைகள் பூசித்துள்ளன. திருவான்மியூர்த் திருக்கோயிலில் பசு பூசித் திருக்கிறது. மற்றும் பிற திருத்தலங்களில் சிலந்தி, குரங்கு, நண்டு ஆகியவைகளும் பூசித்துள்ளன என்ற வரலாறுகள் உண்டு. கரிக்குருவிக்கு மதுரைத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஆலவாயண்ணல் உபதேசித்தார்.

## பரிவின் உறைவிடம்:

திருக்கோயில் வளாகத்தில் இறைவன் ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' அருள் செய்யும் காட்சி மாட்சிமைமிக்குடையது. திருச்சிராப்பள்ளி திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன், பேறுகாலத்தில் அல்லற்பட்டிருந்த பெண்ணுக்கு, ஈன்ற தாயாக அருகிலிருந்து மகப்பேறுக்குத் துணை செய்தான் என்பது வரலாறு.

## நிதி :

வாழ்க்கைக்கு பொருள் இன்றியமையாதது. திருக்கோயில் மற்றவர்களிடமிருந்து பெறவும் செய்தது. அதுபோலவே நாடிவந்தாருக்குத் தானும் வழங்கியது. இறைவன், திருவாவடுதுறையில் திருஞானசம்பந்தருக்கு பொற்கிழி தந்தருளினன்; சுந்தரருக்குச் சித்தவடமடத்தில் பொற்கட்டி தந்தருளினன்; திருவீழிமிழலையில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்கள் துயர் நீங்க, திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் பணி செய்ய நாள்தோறும படிக்காசு தந்தருளினன்.

## வரலாற்று ஏடு:

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சுவர்கள் வரலாற்று ஏடுளாக விளங்கும் மாண்பினை, தமிழ் நாட்டில் நிலவிய மொழி, கலை, பண்பாடு, சமூகம், அரசியல், பொருளியல், சமயம் முதலியவற்றின் வரலாற்றுச் செய்திகளைத் திருக்கோயில் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. ஆகத் திருக்கோயில்கள் சென்ற கால வரலாற்றைக் கூறும் ஏடுகளாகவும், எதிர்கால வரலாற்றை இயக்கும் உந்துசக்திகளாகவும் விளங்கி வருகின்றன.

இதுகாணும் கூறியவாற்றால் கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலும் எனப் பழந்தமிழ் சமுதாய அமைப்பு விளங்கியதை அறிய முடிகிறது.

*(நன்றி: வாழ்வியல் சைவம்)*

இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. சிறுவர் சிந்தனைக் கதைகள் சிலவற்றை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.




# சிந்தனைக் கதைகள்

## இறை சிந்தனை

மூன்று துறவிகள் சொர்க்கத்திற்குச் செல்வதற்காக ஆகாய வழியே பறந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் கண் எதிரே கழுகு ஒன்று வாயில் பாம்பைக் கவ்வியபடி பறந்து சென்று கொண்டிருந்தது. பாம்பு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு துறவி, "ஏ கழுகே! இப்படி ஒரு பாம்பைத் துன்புறுத்துகிறாயே. இது நியாயமா?" என்று கேட்டார். உடனே அந்தத் துறவி, பறக்கும் ஆற்றலை இழந்து பூமியில் விழுந்து விட்டார். இரண்டாவது துறவி, "கழுகே! நீ செய்வது நல்லதுதான். இந்த நஞ்சுள்ள பாம்பு, பூமியில் வாழுமானால் எத்தனை உயிர்களுக்கு துன்பத்தைத் தரும். கொடியவர்களை அழிப்பது அறமே" என்றார். உடனே அவரும் பறக்கும் ஆற்றலை இழந்து பூமியில் விழுந்து விட்டார். ஆனால் மூன்றாவது துறவி மட்டும் நேராக சொர்க்கத்திற்குச் சென்றார். காரணம், சொர்க்கம் செல்பவர்கள் இறை நினைவிலிருந்து கொஞ்சமும் பிறழாமல் செல்ல வேண்டும். முதல் இரண்டு துறவிகள் இறைவனை மறந்து உலக நியதிகளைப் பற்றிச் சிந்தித்ததால் தங்கள் ஆற்றலை இழந்தனர்.

## குழந்தையும் தெய்வமும்

ஒரு வீட்டுக்கு விருந்தினர் ஒருவர் வந்தார். அந்த வீட்டில் உள்ள ஒரு சிறுமி அவரிடம், "உங்களுக்கு பொம்மைகள் பிடிக்குமா?" எனக் கேட்டாள். "ஆகா ! பிடிக்குமே !" என்றார் வந்தவர். உடனே அந்தக் குழந்தை ஒரு கூடை நிறைய பொம்மைகளை எடுத்து வந்து காட்டினாள். "இதில் எந்த பொம்மை உனக்கு மிகவும் பிடித்தமானது?" என்று கேட்டார் அவர்.

மூக்கு தேய்ந்து, தலைமுடி பிய்ந்து, கன்னங்கள் நசுங்கி, காலும், கையும் உடைந்து போன ஒரு பொம்மையை எடுத்துக் காண்பித்து, "இதுதான் எனக்குப் பிடித்தது" என்றாள் சிறுமி.

"எவ்வளவோ அழகான பொம்மைகள் இருக்க, உடைந்து போன இந்த பொம்மையை ஏன் விரும்புகிறாய்?" என்று கேட்டார் விருந்தினர். "மற்ற எல்லா பொம்மைகளும் பிறரால் விரும்பப்படலாம். ஆனால் உடைந்த இதனை நான் கூட ஒதுக்கி விட்டால் எப்படி?" என்றாள் சிறுமி இரக்கத்துடன்.

ஆண்டவனும் குழந்தைபோல்தான் வாழ்க்கையில் உடைந்துபோன, வறுமையில் வாடுபவர்களையே அதிகம் நேசிக்கிறார் என்ற தத்துவத்தை, குழந்தையின் பதிலிலிருந்து தெரிந்து கொண்டார் அந்த விருந்தினர்.

## பாவமே இல்லாதவர்

குருநாதர் ஒருவர் தாம் கூறுவனவற்றை தன் சீடர்கள் எந்த அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பினார். ஒருநாள் கங்கையில் குளிக்கும்போது, "ஐயோ! என்னை கங்கை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடும் போலிருக்கிறது. யாராவது என்னைக் காப்பாற்றுங்களேன் என்று கூக்குரலிட்டார். உடனே சீடர்கள் அனைவரும் குருவைக் காப்பாற்ற கங்கையில் குதிக்க முனைந்தனர். உடனே குரு "நில்லுங்கள். உங்களில் பாவமே செய்யாதவன் எவனோ அவன் மட்டுமே என்னைக் காப்பாற்றவேண்டும். பாவமுள்ளவர்கள் என்னைத் தொட்டால் நான் வெள்ளத்தோடு போய் விடுவேன்!" என்றார். இதைக் கேட்ட அனைவரும் திகைத்தனர். "பாவமே இல்லாதவனாக எவன் இருக்க முடியும்?" என்றெண்ணி அனைவரும் கரையிலேயே தங்கி விட்டனர். ஆனால் ஒரே ஒரு சீடன் மட்டும், துணிவுடன் கங்கையில் குதித்தான். குருநாதரைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான், உடனே குருநாதர் அவனிடம், "நீ மட்டும் பாவமே இல்லாதவனா ? உனக்கு எப்படித் துணிவு வந்தது?" என்று கேட்டார். "குருவே! நீங்கள் தானே கூறினீர்கள். ஒருமுறை கங்கையில் மூழ்கினால் எல்லாப் பாவங்களும் கரைந்து விடும் என்று. எனவே உங்களைக் காப்பாற்ற நான் கங்கையில் குதித்த போதே என் பாவங்கள் விலகி விட்டனவே!" உங்களைக் காப்பாற்றியபோது பாவமே இல்லாதவன்தான் நான்!" என்றான்.

## இறைவன் படைப்பு

ஒரு துறவி, ஒரு மரக்கன்றை தன் ஆசிரமத்திற்கு முன்பாக நட்டு, விரைவில் பெரிய மரமாகி, தான் அந்த நிழலில் அமர்ந்து தியானம் செய்ய எண்ணினார். 'ஆண்டவனே ! இந்த மரக் கன்று விரைவில் வளர நிறைய மழையைப் பெய்விக்க வேண்டும்" என வேண்டினார். பிரார்த்தனைப்படியே அடை மழை பெய்தது. மரக்கன்று அழுகி விடுமோ என்று கவலைப்பட்டு, "ஆண்டவனே! மழை போதும், செடி அழுகாமல் இருக்க வெயில் அடிக்க வேண்டும்" என்று வேண்டினார். ஆண்டவனும் செவி சாய்த்து, கடுமையான வெயில் அடிக்கச் செய்தார். வெயில் அதிகமாகவே செடி வாடத் தொடங்கியது. செடி வாடுவதைப் பார்த்து பனியைத் தருமாறு பிரார்த்தித்தார். நன்கு பனி பெய்யத் தொடங்கியது. ஆனால் திடீர் திடீரென்று மாறிய சீதோஷ்ண நிலையால் செடி பட்டுப்போய் விட்டது.

'ஆண்டவனுக்குத் தன் படைப்புகளுக்கு என்ன தேவை என்று தெரியும். நாம் பிரார்த்திப்பதால் மட்டும் பயனில்லை' என்ற ஞானம் அப்போதுதான் தெரிந்தது துறவிக்கு.

## எது பெரிய செல்வம்?

ஞானி, ஒருவர் கடும் தவம் செய்து கொண்டிருந்தார். கடவுள் அவர் முன் தோன்றி, என்ன வரம் வேண்டுமென்று கேட்க அவர், "ஐயனே.. எனக்கு ஆரோக்கியமான வாழ்வும், அளவற்ற செல்வமும் அளிக்க வேண்டும்" என்று வேண்டிட, கடவுளும் 'அவ்வாறே ஆகுக!" என்று சொல்லி மறைந்தார்.

அப்படியே ஞானி பல ஆண்டுகள் நோயின்றி ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்தபோதிலும், செல்வம் மட்டும் சேரவே இல்லை. ஞானி இதை எண்ணிப் பெரிதும் வருத்தம் அடைய, அன்றிரவு அவரது கனவில் தோன்றிய கடவுள், "அன்பரே... ஒரு மனிதனுக்கு ஆரோக்கிய வாழ்வே அளவற்ற செல்வம்தானே" என்று கூறினார். ஆரோக்கிய வாழ்வின் சிறப்பை உணர்ந்து மனத்தெளிவு அடைந்தார் ஞானி.

(நன்றி : குமுதம் பக்தி)

தன் லட்சியத்திற்கு உதவும் மனப்பான்மையைத் தேடிக்கொள் பவனுக்குத்தான் சந்தோஷமான வாழ்க்கை அமையும். (ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்)

இது மாணவர்களுக்கான பக்கம். வழமைபோல பெரிய புராணக் கதைகள் இடம்பெறுகின்றன. இதுபோன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.




# பெரியபுராணக் கதைகள்

## பாடிப் பரமனடி சேர்ந்தவர்

காஞ்சி மாநகரில் பல்லவர் குலத்தில் தோன்றி நல்லவராக ஆட்சி நடத்தியவர், ஐயடிகள் காடவர்கோன் நாயனார். இவர் ஆட்சியில் பசியும் பட்டினியுமின்றி மக்கள் நல்வாழ்வு பெற்றிருந்தனர். பகையச்சமோ பிற பயமோ நாட்டில் இல்லை.

சைவம் தழைக்க இவர் மெய் வருந்தி உழைத்தார். இவர் உருவாக்கிய கலைகளிலே தெய்வமணம் கமழ்ந்தது. மக்கள் மட்டுமல்ல, மற்றுள்ள உயிர்களும் துன்பமில்லாது வாழவேண்டும் என்னும் நன்நோக்கத்தால், இவர் நாடு பல வென்று நல்லாட்சி நடத்தினார்.

ஆண்டவன் நினைவில் தோய்ந்த இவருக்கு ஆட்சியில் வெறுப்புத் தட்டியது. மைந்தரும் அரசேற்கும் பருவத்தை அடைந்திருந்தார். மக்கள் நலத்தைத் தன் உயிராகப் பேணி மகன் ஆட்சி நடத்துவான் என்பதில் இவருக்கு அழுத்தமான நம்பிக்கை. எனவே தம் மைந்தருக்கு முடிசூட்டு விழாவை நடத்திவிட்டு, அரண்மனையை விட்டு மன்னர் வெளியேறினார். பல திருத்தலங்கள் சென்று வழிபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே அதில் ஈடுபட்டார். ஒவ்வொரு திருப்பதிக்கும் சென்று இறைவரை வழிபட்டு ஒரு வெண்பா பாடுவார். இவ்வாறு பாடிப்பாடி பரமன் பணி செய்து அவர் திருவடிப் பேறு பெற்றார்.

நாடு ஆளும் மன்னரும் இறைவர் நினைவில் யாவும் துறந்து வருதலையும், அவ்வாறு துறந்து வந்தவர் அருள்பேறு பெறுதலையும் ஐயடிகள் காடவர்கோன் வரலாற்றால் உணர முடிகின்றது.

## திருமுடியை விளக்காய் எரித்தவர்

வடவெள்ளாற்றுத் தென்கரைப் பகுதியிலே உள்ள நகர் இருக்குவேளூர். இங்கு, செல்வம் நிறைந்த ஒருவர் இருந்தார். சிறந்த குணங்களின் இருப்பிடமான இவர், திருக்கோயிலில் விளக்கேற்றும் பணியை மேற்கொண்டு சிவத்தொண்டு செய்தார். நாளடைவில் இப்பணியில் இவரது செல்வம் முழுதும் தீர்ந்தது. இவர் தம் ஊரை விட்டுத் தில்லையம்பதியைச் சேர்ந்தார். அங்கு ஆடல் பெருமானைத் தொழுது ஆனந்தப் பரவசமுற்றார். தமது வீட்டுப் பொருட்கள் யாவையும் விற்று இறைவர் திருக்கோயிலுக்கு விளக்கேற்றி வந்தார்.

கையில் எதுவும் இல்லாத நிலையிலானார் இவர். இரத்தலை விரும்பவில்லை. அது இழிவன்றோ! எனவே கணம் புல்லை அறுத்து அதை விற்று அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு நெய் வாங்கி விளக்கேற்றி வந்தார். இதனால் இவருக்குக் கணம் புல்லர் என்னும் பெயர் ஏற்பட்டது.

ஒருநாள் இவர் வெட்டியெடுத்த புல் விற்பனையாகவில்லை. திருவிளக்கேற்ற வேண்டுமே. என்ன செய்வார் ! எனினும் இவர் சோர்வு கொள்ளவில்லை. அப்புற்களையே திரியாகத் திரித்து விளக்கேற்றினார். எரிய வேண்டும் அளவுக்கு அந்தப் புற்கள் போதவில்லை. எனவே அவர்தம் திருமுடியை எடுத்து விளக்கு எரியப் பயன்படுத்தினார். இதைக்கண்ட பிறைசூடிய பெருமான் அவருக்கு இன்னருள் சுரந்து தம் திருவடி நிழலை அளித்தார்.

உண்மையான இறைத் தொண்டைப் புரிய முனைவோர் எதையும் பயனாக்கிக் கொள்வர் என்பதைக் கணம்புல்லர் வரலாறு அறிவிக்கின்றது.

## கோவை பாடித் தொண்டு செய்தவர்

திருக்கடவூரைச் சொந்த ஊராகக் கொண்டவர் காரிநாயனார். இவர் தமிழ்ப் புலமை மிக்கவர். இவர் முக்கண்ணப் பெருமானை எக்கணமும் மறவாத இதயம் படைத்தவர். தித்திக்கும் இனிய தமிழில் கோவை பாடுவது இவரது புலமைச் சிறப்பு.

இவர் முப்பெரும் தமிழ் மன்னர்கள்பால் அடிக்கடி செல்வார். அவர்களிடம் தாம் பாடிய கோவை நூற்களை விரித்துக் கூறி அரங்கேற்றுவார். தம் கவிதை நயத்தை விளக்குவார். அவர்கள் மனமுவந்து இப்புலவர்க்குப் பொருளை அள்ளி வழங்குவார்கள். காரியார் அப் பொருள்களைத் தமக்குப் பயன்படுத்தாது சிவப்பணிக்கே செலவிட்டு வந்தார். திருக்கோயில்கள் கட்டுவதும் அடியார்களுக்கு அமுது செய்தலும் இவர் வழக்கமாயிருந்தது. இவ்வாறு நேரிய உள்ளத்தோடு சீரிய சிவத்தொண்டுகள் செய்து இறுதியில் இறைவர் திருப்பதம் பெற்றார்.

இவ்வரலாற்றிலிருந்து தம் புலமையில் கிடைத்த பொருள் முழுவதையும் சிவப்பணிக்கே நல்கிய ஒரு புலவர் கோமானின் சிவபக்தியைத் தெரிந்து கொள்கிறோம்.

## சமணம் விட்டுச் சைவம் சார்ந்தவர்

நின்றசீர் நெடுமாறன் பாண்டிய மரபில் தோன்றிய மன்னர். இவர் வல்லமை மிக்கவர். வடபுல மன்னரை திருநெல்லையில் வெற்றி கண்டவர். இவர் சமண சமயத்தைச் சார்ந்து ஒழுகி வந்தார். இவரது மனைவியார் மங்கையர்க்கரசியார் சைவ நெறியினர்.

மன்னர் சமண நெறியைப் பின்பற்றியதால் நாட்டு மக்களும் சைவத்தைத் துறைந்து சமணத்தை மேற்கொள்ளலாயினர். எனவே பாண்டி நாட்டில் சைவம் தளர்ச்சியுற்றது. திருநீற்றொளி மங்கத் தொடங்கியது. இது கண்டு அரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் மிக்க கவலை கொண்டனர். இருவரும் மன்னரை எவ்வாறு சைவத்திற்கு திருப்புவது எனச் சிந்தித்தனர். பின்னர் தாம் கொண்ட முடிவுப்படி அவர்கள் திருஞானசம்பந்தப் பெருமானிடம் தூதுவர்களை அனுப்பி, அவருக்குப் பாண்டி நாட்டில் சைவம் அருகி வருவதை அறிவிக்கச் செய்தனர்.

இச்செய்தி அறிந்த ஞானசம்பந்தர் உடனே பாண்டி நாடு நோக்கிப் பயணப்பட்டார். இவரது வருகையை அறிந்த சமணர்கள் கவலை கொண்டனர். அவர்கள் அரசரைத் தம் வயப்படுத்தி, சம்பந்தப் பெருமானுக்குக் கொடிய இன்னல்கள் இழைத்தனர். இதனால் சம்பந்தர் சீற்றமும் வேதனையும் கொண்டார். அவரது சீற்றத்தின் விளைவால் அரசருக்கு வெப்பநோய் கண்டது. நோயைத் தீர்ப்பதில் சமணரும் ஞானசம்பந்தரும் ஈடுபட்டனர். சமணர்கள் செய்த செயலால் மன்னர் நோய் மிகுதிப்பட்டது. சம்பந்தர் திருநீற்றைப் பூசி மன்னரின் நோயைத் தீர்த்தார்.

திருஞானசம்பந்தப் பெருமானால் மன்னர் சமணம் விட்டுச் சைவ நெறி சேர்ந்தார். பின்னர் சைவம் தழைக்கத் திருப்பணிகள் பல செய்து சிவபிரான் திருப்பதம் பெற்றார்.

சைவத்தை நன்கு உணர்ந்தவர்கள் பிற சமயங்களில் சேரார் என்பதை நின்றசீர் நெடுமாறன் வரலாறு உணர்த்துகின்றது.

## நெஞ்சக் கோயிலில் வழிபட்டவர்

தொன்றுதொட்டு புகழ்கொண்ட தொண்டை நாட்டில் கடற்கரையருகேயுள்ள வளமிக்க ஊர் திருமயிலை. இங்கு வேளாளர் குலத்தில் வாயிலார் என ஒருவர் தோன்றியிருந்தார். இவர் சிவனையே நினைக்கும் சிந்தை கொண்டவர். சிவனை மறக்காத இவர், அப் பெருமானுக்குத் தம் நெஞ்சத்திலேயே திருக்கோயில் அமைத்தார். அக்கோயிலில் உணர்வெனும் விளக்கை ஏற்றி, இன்பமென்னும் நீராட்டி, அன்பு என்னும் அமுது படைத்து இறைவரை வழிபட்டு வந்தார். இத்தகைய திருத்தொண்டினை நீண்டகாலம் செய்து இவர் சிவனார் திருவடி நீழலையடைந்தார்.

உண்மை உணர்வில் இறைவரை வழிபட்டால் உய்வு பெறலாம் என்பதை வாயிலார் வரலாறு அறிவிக்கின்றது.

# ஆலய வழிபாடு

*செல்வி ஜெயானந்தா நிவேதிகா*
*தரம்– 7 D*
*கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்.*

இறைவன் எங்கும் இருக்கின்றார். அவரை எங்கும் வணங்கலாம். ஆயினும், இறைவன் ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்று அருள்புரியும் இடம் ஆலயம் என்பதால், அங்கு சென்று கடவுளை வணங்குவதே சிறப்பானதாகும். ஆலயம் என்பதற்கு ஆன்மா லயப்படும் இடம் எனப் பொருள் கூறுவர். நாம் தினமும் சென்று வழிபடுதல் நன்று. தினமும் செல்ல முடியாதவர்கள் விசேட தினங்களிலாவது ஆலயத்துக்குச் சென்று வழிபடுதல் வேண்டும். ஆலயம் புனிதமான இடம். இறைசிந்தனையுடன் ஆலயத்திற்கு செல்லுதல் வேண்டும். ஆலயங்கள் ஆன்மாக்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை வழிபடுவதற்கு உகந்த இடமாக விளங்குகின்றது. இறைவனையும் வழிபடும் பக்தர்களையும் ஒன்றிணைப்பது ஆலயங்களில் நடைபெறும் பூசையாகும். இப்பூசைகள் நாள்தோறும் நடைபெறும். நித்தியபூசை, விசேட காலங்களில் நடைபெறும் நைமித்தியபூசை, பயன் கருதிச் செய்யப்படும் காமியபூசை என மூன்று வகைப்படும். நாம் ஆலயத்திற்கு செல்லும் போது பூசைப் பொருட்கள் கொண்டு செல்ல வேண்டும். பூசைப் பொருட்கள் புனிதமானவை. இவற்றை ஒரு தூய்மையான தட்டில் வைத்து அரைக்கு மேல் தாங்கியவாறு கொண்டு செல்ல வேண்டும். ஆலய வீதிகளை வலம் வரும் போது சிவசிந்தனையுடன் இறைவனை இரு கைகளாலும் கூப்பி வணங்கிக் கொண்டு மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு என்ற நியதிப்படி வீதிவலம் வருதல் வேண்டும். ஆலய வழிபாடுபோல் ஆலயத் தொண்டும் மனநிறைவைத் தருகின்றன. அன்பை வளர்க்கின்றன. வாழ்வை மேம்படுத்துகின்றன. ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதனால், நமது ஐம்பொறிகளும் ஒடுங்கி, இறைவனை நாம் நினைப்பதற்கு வழியேற்படுகின்றது. மேலும், ஆலயங்களில் தெய்வ அருள் நிறைந்திருப்பதால், அங்கு எமது மனம் அமைதி பெறும்; வாழ்வு வளம் பெறும்; ஆன்மா ஈடேற்றம் அடையும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

# விரதங்களும் பண்டிகைகளும்

*செல்வி ஜெயானந்தாஷாயினி*
*தரம்– 6 C*
*கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்.*

விரதநாட்களிலும் பண்டிகை தினங்களிலும் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்க வேண்டும். சைவ மக்களால் பின்பற்றப்படுகிற சமய ஒழுக்காறுகளில் விரதங்களும் அடங்கும். இவை 'எமது வாழ்வில் இறையுணர்வையும் புனிதத் தன்மையையும்' ஏற்படுத்த உதவுகின்றன. விரதமானது மனம், பொறி, வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்புடன் வழிபடுதல் ஆகும். விரதம் என்ற சொல் நோன்பு என பொருள் தரும். விரதம் என்பது ஒரு வகை விசேட வழிபாடாகும். விரதங்கள் நமக்கு நல்லறிவைத் தருகின்றன.

விரதங்கள் அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டியவை அதிகாலையில் நித்திரை விட்டெழுதல், புறத்தூய்மை, அகத்தூய்மை பேணுதல், தோய்த்துலர்ந்த ஆடை அணிதல், ஆலயத்திற்கு சென்று பக்தியுடன் வழிபடுதல், அர்ச்சனை செய்தல், திருமுறைகள் பாடுதல், உணவை சுருக்குதல், பகிர்ந்துண்ணல் போன்றவற்றை செய்தல் உத்தமமாகும். விரதநாட்களில் முடிந்தவரை தானதர்மங்கள் செய்ய வேண்டும். விரதங்கள் அனுட்டிப்பதால் பல நன்மைகள் கிடைக்கின்றன. அவையாவன நமக்கு நல்லறிவைத் தருகின்றன. கடவுள் மீது பக்தியை ஏற்படுத்துகின்றன. பொறுமை, புலக்கட்டுப்பாடு உள்ளவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் மாற்றுகின்றது. விரதங்கள் மனிதனை நல்வழிப்படுத்துவதில் முக்கிய பங்கு எடுக்கின்றன. எனவே நாங்களும் விரதம் அனுட்டித்து இறையருளையும் நற்பலன்களையும் பெறுவோமாக.

சமயம் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் வருடம் தோறும் குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்படும் விசேட தினங்கள் பண்டிகைகள் எனப்படும். பண்டிகை என்ற சொல் இறையுணர்வை வளர்க்கவும் குடும்பத்தாருடன் சந்தோசமாக இருக்கவும், ஒற்றுமை, மகிழ்ச்சி என்பவற்றை ஏற்படுத்தவும் காரணமாக உள்ளது. தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன குறிப்பிடத்தக்க பண்டிகைகள் ஆகும். புத்தாடை அணிதல், கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்துதல், வாழ்த்துமடல்கள் அனுப்புதல், சுவையான உணவுவகைகளை சிறுவர்கள், பெரியவர்கள், அயலவர்கள், நண்பர்கள் முதலானோர் சேர்ந்து உண்ணும் விருந்து வைபவமாக பண்டிகைகள் விளங்குகின்றன.

இத்தினங்களில் ஏழைகளுக்கு எம்மால் இயன்றவரை தான தர்மங்களை செய்ய வேண்டும். பண்டிகைகளில் சித்திரை வருடப்பிறப்பு சித்திரைமாதப் பிறப்பன்று கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கல் தைமாதப்பிறப்பன்று சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்கு கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தி பொருந்திய நேரம் தீபாவளி கொண்டாடப்படும். சைவ சமயத்தவர்களாகிய நாம் விரதங்களையும், பண்டிகைகளையும் அனுசரித்து நற் பலன்களையும் இறையருளையும் பெறுவோமாக.

# இந்துக்களின் வாழ்வில் பிறந்த நாளின் சிறப்பு

செல்வி அபிராமி வேல்சிவானந்தன்
தரம்– 8
கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.

இந்து சமய மக்கள் பல வைபவங்களை கொண்டாடு வார்கள். இதில் திருமணவிழா, குழந்தையை தொட்டிலில் போடும் விழா, ஏடு தொடக்குதல், பிறந்த நாள் விழா, பெண் ருது சோபன விழா போன்றவை அடங்கும். இந்த நிகழ்ச்சிகளின் ஊடாக எமது தர்ம முறைகளை ஆகம விதிப்படி நிகழ்த்துவர். இதனால் எம்மக்கள் இடையே சைவசமயத்தின் மகிமையும், தமிழர்களாகிய எமது பாரம்பரியம் பண்பாடு, கலாசாரம் போன்ற விழுமியங்களும் சிறப்பாகப் பேணப்படுகின்றது. மேலும் வளரும் பிள்ளைகள் இயல்பாகவே இந்த முறைகளையும் சடங்குகளையும் தெரிந்து கொள்வர். இந்த வகையில் ஒருவரின் பிறந்தநாளை எவ்வாறு கொண்டாடுகிறோம் என்று பார்ப்போம்.

இந்து சமயத்தவரை பொறுத்தவரை ஒவ்வொரு பிறந்த நாளையும் அவர்களது பெற்றோரும் உற்றோரும் குழந்தை பிறந்த அன்று அடைந்த சந்தோசத்தை நினைத்து கொண்டாடுவர். குழந்தை பிறந்தவுடன் பிறந்த நேரம், காலத்தைக் கணித்து சோதிடம் எழுதுவார்கள். அதற்கமைய ஒருவரின் பிறந்தநாளின் போது பிறந்த நட்சத்திரம், இராசி, போன்றவற்றை கூறி கோயிலில் சிறப்பு அர்ச்சனை செய்வர். காலையிலேயே குளித்து புத்தாடை அணிந்து கோயிலுக்குச் செல்வர். அங்கு பூசகரிடம் பிறந்த நட்சத்திரத்தைக் கூறி சிறப்பு அர்ச்சனை செய்வர். அது தவிர தத்தமது வசதிக்கேற்ப தான தருமங்களை செய்வர். வீட்டிலும் அறுசுவையோடு உணவு சமைத்து உற்றார் உறவினருடன் சேர்ந்து மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பர். அவ்வாறே உறவினர்களும் பரிசுப் பொருட்களை அளித்து குழந்தைக்கு வாழ்த்துக் கூறிச் சந்தோஷப்படுவர். இந்த பிறந்தநாள் விழாவானது முதலாம் இரண்டாம் வருடங்களில் மட்டுமல்ல வளர்ந்து ஐம்பது, அறுபது, எழுபத்தைந்து, எண்பது வயதுகளிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பிறந்தநாளில் தானதருமங்கள் குறிப்பாக அன்னதானம் செய்வது மிகவும் விசேஷம். வீட்டில் பிறந்த நாளின்போது மங்கல வாத்தியங்கள் இசைக்கப்படும். இந்த பிறந்தநாள் விழாவானது பல நல்ல பழக்கவழக்கங்களை நமக்கு கற்றுத்தருகிறது. எம்மிடம் இருப்பதை இல்லாதவர்களுக்கு கொடுத்து சந்தோஷப்படுதல், கிடைப்பதை பகிர்ந்து கொடுத்தல், சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளையும் வித்தியாசங்களையும் காணாதிருத்தல் போன்ற நற்பண்புகளை வளர்க்கிறது.

பிறந்தநாள் என்பது நாம் பிறந்ததன் பயனை, சந்தோஷத்தை அனுபவித்து சிறப்பாக கொண்டாட வேண்டும். அதனால் எம் இந்து சமயத்தில் தான தருமங்கள் பேணப்படுகிறது. ஒவ்வொரு வரும் தமது பிறந்த நாளை தம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரைப் போற்றும் புண்ணிய நாளாகக் கொண்டாடவேண்டும். பெற்றோர்களைத் தெய்வமாக, வழிகாட்டிகளாகப் போற்றும் நம் பாரம்பரியத்தை நாமும் கைக்கொள்வது வாழ்வை சிறப்படையச் செய்யும்.

**சிந்தனை விருந்து**

# ஒளியும் இருளும்

ஒளி வரும்போது இருள் அடங்கிவிடும். ஒளி நீங்கியதும் மீண்டும் இருள் வருவதைப் பார்க்கிறோம்.

ஒருநாள், இருள் கடவுளிடம் போய் முறையிட்டது. "நான் எங்கு போனாலும் இந்த ஒளி என்னைத் துரத்தி வருகிறது. எனக்குப் பயமாக இருக்கிறது. ஏதாவது செய்யுங்கள்" என்றது.

கடவுள், ஒளியை அழைத்துக் கேட்டார். "இருளா? இருள் என்பது என்ன என்று கூட எனக்குத் தெரியாதே! நான் ஏன் துரத்தப் போகின்றேன்?" என்று ஒளி பதிலளித்தது.

இந்தக் குட்டிக் கதையில் உண்மை நிறைய இருக்கின்றது. ஒளி என்றால் அறிவு என்றும், இருள் என்றால் அறியாமை என்றும் வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு அறிவைப் பற்றித் தெரியும். அடிப்படையாக அறியாமை ஒன்று உண்டு. நாம் யார் என்பது பற்றியும், நமக்கு ஆதாரம் எது என்பது பற்றியும் நம்மிடம் தெளிவு இல்லை. அறியாமைதான் இருக்கிறது. அப்படி ஒரு அறியாமை உண்டு என்பதும் நமக்குத் தெரியாது. இந்த அறியாமைக்கு மூலகாரணம் ஆணவம் என்கிற மலம். ஆணவம் உள்ளவரை அறியாமை இருக்கும். திருவருள் துணையுடன் அறியாமையை நீக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார்கள் அருளாளர்கள்.

சேக்கிழார் ஒரு சிறந்த அருளாளர். அனபாய சோழ மன்னனுடைய அமைச்சர். ஒப்பற்ற சிவபக்தர். மன்னன் இன்பத்துறை சம்பந்தப்பட்ட இலக்கியத்தில் ஆர்வம் காணபித்து வந்ததைப் பார்த்தார்; வருந்தினார். அறுபத்து மூன்று சிவனடியார்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அவனுக்கு எடுத்துச் சொன்னார். மன்னன் மனம் மாறியது. சேக்கிழாரை ஒரு நூல் எழுதச் சொன்னான். பெருங்காப்பியமான திருத்தொண்டர் புராணம் பிறந்தது.

"கதிரவன் உலகத்து இருளைப் போக்குகின்றான். அது பிற இருள். இந்தக் காப்பியம் மக்களுடைய அக இருளைப் போக்க உதவும்" என்று சேக்கிழார் முன்னுரையாகச் சொல்கிறார்.

நமது ஆன்மா உலகத்தோடு ஒன்றி நிற்கும் போது அதற்கு உலகம்தான் தெரிகிறது. கடவுள் தெரிவதில்லை. உலகத்தைப் பற்றிய அறிவு; கடவுளைப் பற்றிய அறியாமை. இந்த அறியாமையை நீக்கிக் கொள்ள கடவுள் துணையையே நாட வேண்டும். உள்ளத்து இருள் நீங்கி, ஆன்மா சிவத்தை அடைவதே மேலான குறிக்கோளாகும்.

பார்வைக்கு இருளும் ஒளியும் மாறி மாறி வரும். ஆனால், ஆன்மா, இருளாகிய உலகப் பற்றை விட்டு இறைவனுடைய திருவருள் ஒளியை நாடி அடையும் போது இந்த ஒளி நிலைத்து நிற்கும்; நிறைவைத் தரும்.

திருவருள் ஆன்மாவுடன் வந்து சேர முயற்சியை மேற்கொள்ள வேண்டும். திருவருள் ஒளி பெற்ற உள்ளம் ஒளியேயாய் சிவமாய் விளங்கும். இது ஓர் ஆழமான திருமந்திரம்.

*ஒளியும் இருளும் ஒருகாலும் தீர*
*ஒளியுளோர்க் கன்றே ஒழியாதொளியும்*
*ஒளியிருள் கண்ட கண்போல் வேறாய் உன்*
*ஒளியிருள் நீங்கி உயிர் சிவம் ஆமே.* *(1819)*

*(நன்றி: குமுதம் பக்தி)*



# பெரியபுராணம் காட்டும் பெண்களின் சிறப்பு

**மங்கையர் ஒளி**

ஆ. காயத்திரிதேவி
அரசு மகளிர் கலைக்கல்லூரி, புதுக்கோட்டை

**முன்னுரை**

உலகெலாம் உணர்ந்(து) ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம் !

பெரியபுராணம் சைவ வரலாற்றுக் காப்பியம், சிவனடியார்களான நாயன்மார் அறுபத்து மூவரின் வரலாற்றைக் கூறுவது. செயற்கரிய செய்வார் பெரியர் என்கிறார் திருவள்ளுவர். செயற்கரிய செயல்களைச் செய்த பெரியோர்களின் வரலாற்றைக் கூறும் பெரிய புராணம் சைவ வரலாற்றுக் காப்பியம் மட்டுமன்று, தமிழ், சைவ, தேசிய காப்பியம், சமயஞ்சார்ந்த சமுதாயக் காப்பியம், சமய சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம். சொல்லப்போனால் சாதி ஒழிப்புக் காப்பியம். அடியார்களுள் சாதி வேறுபாடு இல்லை. ஆதிசைவர் முதல் ஆதிதிராவிடர் வரை பல்வேறு சாதியினரும் ஓரணியில் நின்று சைவப் பணி செய்ததை இன்றும் திருக்கோயில்களில் காணலாம்.

இப்படிப்பட்ட பெரியபுராணத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. பெரிய புராணத்தில் பெண்களின் கற்பு போற்றப்படுகிறது. பெண் சிவனடியார்களும் ஆண்களுக்கு இணையாகச் சிவநெறியில் இருந்துள்ளார்கள். பல பெண்கள் சிவனடியார்களின் வாழ்வில், தொண்டு நெறியில், கடமையுணர்வில் கணவன் பக்திநெறியில் பங்கெடுத்துள்ளமை தெரியவருகிறது. இவர்களின் பங்களிப்பை பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## திருநாவுக்கரசர் வாழ்வில் திலகவதியார்

திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், அவதாரம் செய்த நாடான திருமுனைப்பாடியில் வேளாளர் மரபில் குறுகையர்குடியில் புகழனார் என்ற சிவபக்தர் தன் மனைவி மாதினியாருடன் இல்லறம் நடத்தி வந்தார். புகழனார், மாதினியார் தம்பதிகளுக்கு திருமகளைப் போல் திலகவதியாரும், பின் பொய்மையிருள் அகற்ற வந்த செங்கதிர் போல் மருள்நீக்கியாரும் பிறந்தனர். மருள்நீக்கியாருக்கு தலைமயிர் நீக்கும் மங்களவிழா நடக்கும்போது திலகவதியாருக்கு பன்னிரண்டு வயதானதால் புகழனார்தன் மகளுக்கு திருமணம் செய்விக்க விரும்பினார். தனக்கு சமமான குடும்பச் சிறப்போடு கலிப்பகையார் என்ற வேளாளர் தலைவன் சிறந்த போர் வீரன் மட்டுமல்லாது, சிவபெருமானுக்கு மெய்யடிமைத் தொண்டு செய்யக் கூடியவனாகவும் இருந்தான். திருமகளைப் போல் விளங்கும் திலகவதியாருக்கும், கலிப்பகையாருக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. அப்போது வடபுலத்தில் போர் ஏற்படவே கலிப்பகையார் வேந்தன் கட்டளைப்படி போர் முனைக்கு சென்றான். விதிவசத்தால் திலகவதியின்தந்தை கொடிய நோய்க்கு ஆளாகி இறக்கவே தாய், மாதினியாரும், காதலின் கற்பு நெறியோடு உயிர் நீத்தார். இதற்கிடையில் போருக்கு சென்றிருந்த கலிப்பகையாரும் போர்க்களத்தில் தம் மன்னருக்காக உயிர் விட்ட செய்தியறிந்த திலகவதியார் உள்ளம் உருகினார். என் தந்தையும் தாயும் என்னை அவருக்கு மணம் முடித்துக் கொடுக்க இசைந்தார்கள். அந்த முறையால் நான் அவருக்கே உரியவள். ஆகையால் என் உயிரை அவருடைய உயிருடன் சேர்ப்பேன்! என்று முடிவு செய்தார். அதையறிந்த மருள்நீக்கியார் தம் தமக்கையின் காலில் விழுந்து என் தாயும், தந்தையும் உயிர் நீத்த பிறகும் நான் உயிர்தரித்திருக்கிறேன் என்றால் என் தமக்கையாரான உம்மையே பெற்றோராக எண்ணி தரித்திருக்கிறேன். இனிமேல் என்னைத் தனித்து விட்டு செல்வீரானால் உமக்கு முன் நான் உயிர் துறப்பேன் என்றார். தம் தம்பியின் பேச்சைக் கேட்ட திலகவதியார் தம்பிக்காக உயிர் வாழத் தொடங்கினார். ஆனால் திருமாங்கலியச் சூத்திரமோ அழகான பொன் மணியாபரணங்களோ பூணாமல் திலகவதியார் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு மாதவம் புரிந்து வந்தார். மருணீக்கியாரும் துயரத்தை ஒழித்து சிவவுலகில் புகழ் பெற பல தொண்டுகளைச் செய்தார். ஆனாலும் "நான் நிலையில்லா வாழ்க்கைக்கு உரியேன் அல்லன்" என கருதி துறவு பூண்டு நன்மார்க்கத்தை உணர விரும்பினார். அப்போது சிவபெருமான் அவரை ஆட்கொள்ளாததால் சமண சமயத்தில் ஈடுபட்டு தருமசேனர் என்ற பெயருடன் சமண சமயத்திற்கு தொண்டு செய்தார். ஆனால் திலகவதியார் சிவ நன்னெறியில் ஈடுபாடு கொண்டு உறவினர்களை விட்டு திருக்கெடில நதியின் வடகரையில் திருவதிகை என்னும் ஊரிலுள்ள திருவீரட்டானம் திருக்கோயிலை அடைந்து சிவபெருமானின் திருவடிகளை வணங்கி அன்று முதல் சிவ சின்னங்களை அணிந்து சிவபெருமானுக்கு பல திருப்பணிகள் செய்தார். ஆனால் சிறந்த சிவ பக்தையான திலகவதியார் தன் தம்பியின் சமண பக்திகண்டு வருந்தி சிவபெருமானிடம் தன் தம்பியை சமண சமயத்திலிருந்து காக்கும் பொருட்டு வேண்டினார். திலகவதியாரின் வேண்டுதலுக்கு இணங்கிய சிவபெருமான் தருமசேனருக்கு கொடும் சூலை நோயை கொடுத்து சைவ சமயத்திற்கு மாற்றி ஆட்கொண்டார். இதைக் கண்ட திலகவதியார் தம் திருப்பணிக்கு அருளிய சிவபெருமானின் கருணைத் திறத்தை மகிழ்ந்தார். இவ்வாறு திலகவதியார் தம் தந்தையார் மணம் பேசிய காரணத்தினால் கலிப்பகையாரை துணைவனாக கருதி கற்பு நெறியோடு வாழ்ந்தார். ஒரு தமக்கையாக இருந்து மருணீக்கியாரை நல்வழிப்படுத்தினார். சிறந்த சிவபக்தையாக இருந்து சிவபெருமானுக்கு பல தொண்டுகள் செய்து இறைவனடி சேர்ந்தார்.

## காரைக்காலம்மையாரின் திருத்தொண்டு

சோழ நாட்டின் கடற்கரையில் உள்ள காரைக்கால் நகரத்தில் தனதத்தனார் என்ற வணிகருக்கு பெண் குழந்தை பிறந்து அக்குழந்தைக்கு புனிதவதி என்று பெயர் சூட்டி சீரோடும், சிறப்போடும் வளர்த்து வந்தார். அக்குழந்தை சிறுவயது முதற் இயற்கையாகவே சிவபெருமானிடம் கொண்ட பேரன்பின் காரணமாக இளமையிலேயே சிவபெருமானின் கதைகளைத் தன் தோழிகளிடம் பேசி வந்தார். புனிதவதியார் சாமுத்தரிகா இலட்சணம் பொருந்திய பருவப் பெண்ணாக வந்தவுடன் நாகப்பட்டினத்து நீதிபதி மகன் பரமதத்தனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். சிறுவயது முதலே இயல்பாக இருந்த சிவனேயம் நாளுக்கு நாள் வளர்ந்து, தன் வீட்டிற்கு வரும் சிவனடியார்களுக்கு உணவளித்து பொன்னும் பொருளும் கொடுப்பது சிவனடியார்களுக்கு செய்யும் தொண்டு சிவபெருமானுக்குச் செயவதாக நினைத்து செய்து வந்தார்.

ஒருநாள் கணவன் பரமதத்தன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றைச் சிவனடியாருக்கு உணவாக அளித்தார் புனிதவதியார். பரமதத்தன் நண்பகல் உணவிற்கு வந்ததும் கனிகளில் ஒன்றை வைத்தார். கனியோ சுவை மிகுதியாக இருந்ததால் இன்னொன்றையும் பரமதத்தன் கேட்டான். செய்வதறியாது திகைத்த புனிதவதியார் இறைவனிடம் வேண்டவே மற்றொரு கனி கையில் வந்தது. அதை பரமதத்தனிடம் கொடுத்தார். முன் கனியை காட்டிலும் இது மூவுலகிலும் பெறுவதற்கு அரியது இக்கனி என நினைத்து மனைவியிடம் கேட்டான். மீண்டும் திகைத்த புனிதவதி நடந்ததைக் கூறினாள். துணுக்குற்ற பரமதத்தன் மீண்டும் ஒரு கனி கேட்கவே அப்படியே செய்தார் புனிதவதியார்.

அதுமுதல் பரமதத்தன் கண்களுக்கு, புனிதவதியார் தெய்வமாகவே தோன்றினார். வாணிபம் செய்ய கடல் மேல் செல்வதாகக் கூறிச் சென்று பெரும் செல்வங்களைச் சேகரித்து வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து இல்லறத்தை நடத்தி அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்து அதற்கு புனிதவதி எனப் பெயர் சூட்டித் தன் மனைவியுடன் இன்பமாக வாழ்ந்தான். கற்புநெறி தவறாத புனிதவதியார் இதைக் கேள்விப்பட்டு சுற்றத்தாருடன் செல்கையில் பரமதத்தன் தன் மனைவி, குழந்தையுடன் புனிதவதியின் காலில் விழுந்து வணங்கி, உமது அருளால் நான் வாழ்கிறேன்;; என்று புனிதவதியாரைத் தெய்வமாக நினைத்து வணங்கினான். தன் கணவன் சொன்ன மாற்றங் கேட்டதும், ஈசனே! என் கணவர் குறித்த கொள்கை இது. இவருக்காகவே நான் உடல் வனப்பைத் தாங்கியிருந்தேன். இனிமேல் இந்த உடல் வனப்பு வேண்டாம் என நினைத்து, இறைவா உன் திருவடிகளைப் போற்றும் பூதகணங்களைப் போல் எனக்கும் பேய்வடிவை தந்தருள வேண்டும் என மெய்நெறியின் உணர்வோடு இறைஞ்சினான். அடுத்த கணம் பெண்மையின் வனப்பெல்லாம் மாறி எலும்புக் கூடாக நின்றார். அதுமுதல் காரைக்காலம்மையார் என்ற பெயருடன் சிவபெருமானை துதிப்பதே தன் கடமையாகக் கொண்டார். இதிலிருந்து அம்மையாரின் கற்பின் மேன்மையையும் சிவதொண்டின் பெருமையையும் அறியலாம்.

> **மனதை தூய்மையாக வைத்துக் கொண்டால் ஆத்மா நன்கு பிரகாசிக்கும்.** *(ஆத்மபோதம்)*

## மங்கையர்க்கரசியாரின் தொண்டு

மங்கையர்க்கரசியார் மங்கையர்களுக்கெல்லாம் தனி அரசியாக விளங்கியவர், சோழர்களின் குலக்கொழுந்தாம் மானி என்னும் திருநாமமுடையவர். சிறந்த சிவபக்தையான இவர் நின்றசீர் நெடுமாறப் பாண்டியன் மனைவியாகித் தம் கணவரின் சமணச் சார்பால் பாண்டிய குலத்திற்கு நேர்ந்த பழியைத்தீர்த்தவர்.

திருஞானசம்பந்தர் திருவாக்கினால் புகழ்ந்து காட்டப்பெற்ற மங்கையர்க்கரசி ஞானசம்பந்தரின் அருளால் தமிழ்நாட்டிற்கு வந்த இடரினைப் போக்கி சைவ சமயம் பாண்டிய நாடெங்கும் பரவச் செய்தவர். இவர் புகழ்கொண்ட பாண்டிய மன்னனாகிய நின்றசீர் நெடுமாறனாருக்கு சைவத் திறனில் வழித்துணைவியாராகி நீண்டகாலம் வாழ்ந்து தம் கற்புத்தன்மையும் சைவநெறி தவறிய தம் கணவனை நல்வழிப்படுத்திய பெருமை மங்கையர்கரசியையே சாரும்.

## அப்பூதியடிகளின் மனைவியின் மாண்பு

அந்தணர் அந்தணர்க்கு அடிமையாதல் இல்லை. ஆனால் அந்தணரான அப்பூதியடிகள் வேளாளரான திருநாவுக்கரசு சுவாமிகளை பார்க்காமலே அவர்மீது நட்புகொண்டு அடிமையான அப்பூதியடிகளின் வரலாற்றை விளக்குவது இது. திங்களூரில் அந்தணரான அப்பூதியடிகள் சிவபெருமான் மீது அன்பு கொண்டவர். பார்க்காமலேயே அப்பூதியடிகள் தம் வீடு, கருவிகள், மக்கள், பசுக்கள், எல்லாப்பொருட்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயரிட்டு, தாம் அமைத்த திருமடம், தண்ணீர் பந்தலுக்கு திருநாவுக்கரசர் பெயரையே வைத்து நடத்திவந்தார். அப்போது திருநாவுக்கரசர் திருப்பழனம் என்ற சிவத்தலத்தை தரிசித்து விட்டு திங்களுரை அடைந்தார். அங்கு அப்பூதியடிகளின் அறத்தொண்டினைக் கேள்விப்பட்டு அவர் வீட்டில் அமுதுண்ண இசைகிறார்.

அப்பூதியடிகளின் மனைவி சிறந்த சிவபக்தை. அப்பூதியடிகளும் அவரது மனைவியும், சிவ நெறி தவறாதவர்கள் சிவனடியார்களுக்கு தவறு நேர்ந்தாலோ அதை சிவகுற்றமாக நினைத்தார்கள். அப்பூதியடிகளின் மனைவி அறுசுவைகளுடன் கறிகளாகி உணவு பரிமாற இலை பறித்துவர மூத்த திருநாவுக்கரசரை அனுப்பினாள். அங்கு அரவம் தீண்டி மகன் இறக்கவே அதை நாவுக்கரசருக்குத் தெரியாமல் பாயில் சுற்றி ஒரமாக வைத்துவிட்டு நாவுக்கரசரை வணங்கி எங்கள் குடி முழுதும் உய்யுமாறு திருவமுது செய்ய எழுந்தருள வேண்டும்'' என வேண்டினார்கள். திருநாவுக்கரசர் எழுந்து கைகால்களை கழுவி மூத்த புதல்வர் எங்கே என்று கேட்டு அவரையும் தன்னுடன் உணவு உண்ணச் சொன்னார். அப்பூதியடிகளும், அவர் மனைவியும் செய்வதறியாது திகைத்தனர். பின்பு நடந்ததைக் கேள்விப்பட்டு பாம்பு கடித்த குழந்தையை உயிர்ப்பித்து அப்பூதியடிகள் குடும்பத்தினருடன் சிலகாலம் தங்கி பின்பு திருப்பழனம் என்னும் சிவத்தலத்துக்கு சென்று சிவபெருமானை வழிபட்டார் திருநாவுக்கரசர். இங்கு அப்பூதியடிகளின் மனைவியின் கடமையுணர்வு போற்றப்படுகிறது. தன் கணவன் சிவத்தொண்டு புரிகிறார். சிவனடியாரின் சேவையே தன் உயிர்மூச்சாக கொண்டுள்ள அப்பூதியடிகளுக்கு உற்ற துணையாக மனைவி விளங்குகிறார். பாம்பு கடித்து இறந்து விட்டான் மகன் என்று தெரிந்தும் கணவன் சிவனடியாருக்குச் செய்யும் தொண்டில் இருந்து தவறக்கூடாது என்பதில் உற்ற துணையாக நின்றார். இங்கு இவருடைய கற்பு நெறியோடு கடமையுணர்வும் புலப்படுகிறது.

## கருதரும் பெருமை நீர்மை கலிக்காமர் தேவியார்

"திருப்பெண்ணாகடம்" என்னும் வலிமைபொருந்திய ஊரில் கலிக்காமர் என்னும் பெரியார் தன் மனைவியுடன் வாழ்ந்து சிவனடியார் திருவடிகளுக்கு தொண்டு செய்துவந்தார். கலிக்காமர் திருத்தொண்டு செய்துவரும் நாளில் தமது திருமனையில் அமுது செய்ய வந்த தொண்டர்களுக்கு மனைவி கரகத்திலிருந்து நீர்வார்க்க கலிக்காமர் அடியார்களுடைய கால்களையெல்லாம் விளக்கி பாதபூஜை செய்யலானார். அப்போது தமக்கு பணிவிடைக்காரராய் இருந்து ஏவற்பணியை வெறுத்து கோபித்துக் கொண்டு போன ஒருவர் சிவனடியார் வேடந்தாங்கி அடியார்களுடன் இருந்தார். கலிக்காமர் அவரது திருவடிகளையும் சுத்தம் செய்ய முற்பட்ட போது காதல் மனைவி இவர் முன்பு நமது ஏவலைச் செய்யாது விட்டுச் சென்றவர் போலும் என்று எண்ணும்போது கரகநீர் வார்க்கத் தாமதப்பட்டது. இதைக் கண்ட கலிக்காமர் தம் மனைவியை ஏறிட்டு பார்த்து "இவ்வடியார் முன்பு இருந்த நிலையைக் குறித்து வெட்கித் திருவடி விளக்க நீர் வார்க்காது தயங்குகிறார் போலும்" என நினைத்து கரகத்தை எடுத்து கொண்டு மனைவியின் கையைத் துண்டுகளாக வெட்டினார். பின்பு சிவனடியாரின் திருவடிகளுக்கு தாமே பூஜை செய்தார். கலிக்காமர் மனைவியின் தன்மான உணர்வும் கற்புத்தன்மையும் இதில் புலப்படும்.

## இயற்பகை நாயனாரின் இல்லாளின் இயல்பு

சோழ வளநாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் இயற்பகையார் என்னும் வணிகர் சிவபெருமானின் சிவனடியார்கள் யார் வந்து எதைக் கேட்டாலும் அப்படியே கொடுக்கும் பண்புள்ளத்தோடும் தன்மனைவியோடும் இல்லறம் நடத்தி வந்தார். இறைவன் இயற்பகையாரின் பக்தியை சோதிக்க சிவவேதியராக வேடம் கொண்டு இயற்பகையாரிடம் உன்னுடைய காதலுக்குரிய மனைவியை தான் கேட்டுப் பெறவே இங்கே விரும்பி வந்தேன் என்றார். இயற்பகையாரும் சிவவேதியரின் விருப்பத்தை மனைவியிடம் கூறினார். இயற்பகையாரின் மனைவி கணவன் இட்ட பணியை செய்யும் பத்தினிப் பெண்ணாக காட்சியளித்தார். இயற்பகையார் மனைவியை சிவவேதியாருடன் அனுப்பி வைத்து தாமே காவலனாகச் சென்று எதிர்ப்பு தெரிவித்த சுற்றத்தார்களையும் வெட்டி வீழ்த்தினார். இயற்பகையாரின் பக்தியை உலகறியச் செய்து சிவபெருமான் உமாதேவியுடன் காட்சி கொடுத்தார். தன்னுடைய தொண்டரான இயற்பகையாருக்குத் திருவருள் நிலைக்காட்டி, கற்பிற் சிறந்த அவருடைய மனைவியாருக்கும் பேரின்ப வீடு தந்தார்.

## தலைவர் பணி சிறக்க நின்ற திருவெண்காட்டு நங்கை

சோழநாட்டில் திருச்செங்காட்டங்குடி என்ற ஊரில் மாமாத்திரர் குலத்தில் பரஞ்சோதியார் என்பவர் "தெளிந்த பொருள், சிவபெருமானின் திருவடிகளே ஆகும்" என்பதை உணர்ந்து சிவனடியாருக்கு வேண்டுவதை கொடுத்து வாழ்ந்து வந்தார். இவர் தன் அரசனுக்கு பக்கத்துணையாகவும், சேனாதிபதியாகவும், யானைப் படைகளை நடத்திச்செல்பவனாகவும் இருந்து பகைவரை வெற்றி கொண்டான். பின் பரஞ்சோதியார் சிவனடியார் என்று மன்னனுக்குத் தெரியவந்ததும் சோழ மன்னன் இறையிலி மானியங்களைக் கொடுத்து இறைபணியைத் தொடங்குமாறு உத்தரவிட்டார்.

திருச்செங்காட்டங்குடியிலுள்ள கணபதீஸ்வரப் பெருமானை பரஞ்சோதியார் வழிபட்டு சிவனடியார்களுக்கு தொண்டு செய்யும் திருத்தொண்டராகிய பரஞ்சோதியாருக்கு திருவெண்காட்டு நங்கை இல்லக்கிழத்தியாக அமைந்து கருத்தொருமித்த காதலொடு இல்லறவாழ்க்கையை நடத்தியவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு சீராளன் எனப் பெயரிட்டு சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தனர். பரஞ்சோதியாரின் சிவநெறியை பார்த்து மக்கள் அவரைச் சிறுத்தொண்டர் என அழைக்கலாயினர்.

சிறுத்தொண்டரின் திருத்தொண்டு வடகயிலையிலுள்ள சிவபெருமானுக்கு எட்டியது. சிவபெருமான் பயிரவச் சங்கமர் (அடியார் வேடம்) திருவேடங்கொண்டு சிறுத்தொண்டரைக் கண்டு தன்னை பசி வாட்டுவதை போல காண்பித்து தன் பசிக்கு ஐந்து வயது நிரம்ப பெற்ற சின்னஞ்சிறு பாலகன் உணவாக இருக்க வேண்டும் எனவும், அதை தாய் தந்தையே இன்முகத்துடன் கறியமுது செய்து கொடுக்க வேண்டும் என்றார். சிறுத்தொண்டரும், திருவெண்காட்டு நங்கையும் தன் மகனையே அடியாருக்கு அமுது படைத்தனர். சிறுத்தொண்டரின் சிவபக்தியை பாராட்டி சீராளனை உயிர்பெறச் செய்து சிவபெருமான் உமாதேவியாரோடும் மைந்தன் முருகப்பெருமானோடும் சோமாஸ் கந்தமூர்த்தியாகக் காட்சி கொடுத்தனர். இங்கு தலைவன் கருத்தறிந்து நடந்த திருவெண்காட்டு நங்கையின் பணியே தலைசிறந்த பணி என மேற்கொண்டது போற்றத்தக்கது.

## முடிவுரை

பெரியபுராணம் காட்டும் பெண்களின் சிறப்பு என்னும் கட்டுரையில் சைவசமயம் சிறக்க பெண்களும் தங்கள் பணியை மேற்கொண்டுள்ளனர். பெரியபுராணத்தில் பெண்கள் சிறந்த சிவபக்தையாகவும், கற்புடைய பெண்களாகவும், கணவர் சிவநெறியைப் பரப்ப முற்படும்போது அவர்களும் துணை நின்றுள்ளது பெரியபுராணம் வாயிலாக அறிய முடிகிறது. தன் அரசன் தவறான வழியில் செல்லும் போது அவர்களை நல்வழிப்படுத்தும் ஆசிரியர்களாகப் பெண்கள் சித்திரிக் கப்பட்டுள்ளனர். பெண்களின் கற்பு, பக்தி, கடமை, துணிவு முதலியன பெரியபுராணம் வாயிலாக அறியலாம்.

*(இக்கட்டுரை இவ்வருடம் (2010) பெப்ரவரி மாதம் புதுச்சேரியில் நடைபெற்ற பெரிய புராண பன்னாட்டு ஆய்வு மாநாட்டின்போது வெளியிடப்பட்ட பெரிய புராண ஆய்வு நூலிலிருந்து நன்றியுடன் பெறப்பட்டது.)*

### மாமன்றத்தில் வருடாபிஷேகம்

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் அமைந்துள்ள அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலின் வருடாபிஷேகம் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியன்று பகல் நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் ஆரம்பமான விசேட அபிஷேகத்தை தொடர்ந்து, நண்பகல் 12.30 மணிக்கு பூசையும் வழிபாடும் இடம்பெற்றன.

# மாசற்ற அன்பில் மலரும் உயர்பக்தி !



இறைவனின் திருநாமத்தைச் சொல்லுவதனால் மட்டுமே இறைவனின் அருளுக்கு நாம் பாத்திரர்களாக ஆகிவிட முடியாது. உள்ளத்தே பூரண அன்புடன் நாம் இறைவனின் திருநாமத்தை தியானித்தோமானால்தான் இறைவனும் நம்மிடம் நெருங்கி வருவான்.

இறைவனின் அருள் பூரணமாக நமக்குக் கிடைக்கவேண்டுமேயானால் – இறைவனின் அருகாமையில் நாம் இருக்கவேண்டுமேயானால் இறைவனை உள்ளத்து அன்புடன் மனம் கனியக்கனிய நேசிக்க வேண்டும். உள்ளத்தே தோன்றும் தூய அன்புதான் பக்தியாகப் பரிணாமம் கொள்கின்றது. சுயநலம் சார்ந்ததாக இருக்கும்வரை அது வெறும் அன்பு; சுயநலமற்ற நிலையில் அதுவே உன்னதமான பக்தியாக பரிணாமம் கொள்கின்றது.

நாம் நம் உறவுகளிடம் செலுத்தக்கூடிய அன்பானது பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் சுயநலம் சார்ந்ததாகவே இருக்கின்றது. அதேவேளையில் ஒரு தாய் தன் குழந்தையிடம் செலுத்தும் அன்பானது சுயநலமற்று இருப்பதால், அந்தத் தாயன்பை, தன் தெய்வத்திடம் அவள் கொண்டிருக்கும் பக்தி என்றே சொல்லலாம்.

இறைவனிடமான நம்முடைய பக்தியானது இரண்டு வகைப்படும். ஒன்று அச்சத்தினால் விளைவது; மற்றது மாசற்ற அன்பில் மலர்வது. இறைவனை பூஜிக்கா விட்டால் நமக்கு ஏதேனும் கெடுதல் நேர்ந்துவிடுமோ? வாழ்க்கையில் சோதனைகளை சந்திக்க நேரிடுமோ என்பது போன்ற எண்ணங்களினால் தோன்றும் பக்தியானதுதான் அச்சத்தினால் தோன்றும் பக்தி என்பது. இது உண்மையான பக்தி இல்லை.

வேடர் குலத்தில் தோன்றிய கண்ணப்பர் சிவபெருமானிடம் கொண்ட பக்தியும்; சபரி இராமபிரானிடம் கொண்டிருந்த பக்தியும் அவர்கள் மாசற்ற அன்பினால் மலர்ந்ததுதான். அதனாலேயே காலங்களைக் கடந்தும் அவர்களுடைய அந்த பக்தியானது போற்றப் பெறுகின்றது. இறைவனிடம் இப்படி உள்ளன்புடன் பக்தி செலுத்தாதவர்களுக்கெல்லாம், இறைவன் அருகில் இருந்தாலும் கூட தொலைவில் இருப்பவனாகவே திகழ்வான். இதைத்தான் இருந்தும் இல்லாத நிலை என்பது.

குருக்ஷேத்திர யுத்தம் தொடங்கப்போகும் நிலை. துரியோதனனும், அர்ஜுனனும் கிருஷ்ணனிடம் உதவி கேட்டுப் பெறுவதற்காக வருகின்றார்கள். துரியோதனனைப் பொறுத்தமட்டில் அவனுக்குப் படைவலிமையே பெரிதாகத் தோன்றுகின்றது. அர்ஜுனனோ கிருஷ்ணன் ஒருவன் மட்டும் தன்னுடன் இருந்தாலே போதும் என்று எண்ணுகின்றான். காரணம் அர்ஜுனனுக்குப் புரியும் கிருஷ்ணன் பரப்ரம்ம ஸ்வரூபி என்பது. அதனாலேயே அர்ஜுனன் கிருஷ்ணனை நேசித்தான். அந்த நேசமானது இறைவனாம் கிருஷ்ணனை எப்போதும் அவனுக்கு அருகிலேயே இருக்குமாறு செய்தது.

துரியோதனனுக்கு கிருஷ்ணன் தன்னைப்போன்ற ஒரு சாதாரண மனிதன் தானே என்ற அலட்சியம். எனவே அவனால் கிருஷ்ணனை நேசிக்கவோ – பூஜிக்கவோ முடியவில்லை. ஆகையினால் இறைவன் துரியோதனை விட்டு வெகு தூரத்திலேயே இருந்து விட்டான்.

இப்படி துரியோதனனைப் போல் இறைவனை அறியாமலும், உணராமலும் இருப்பவர்க்கெல்லாம், இறைவன் வெகு தூரத்தில் இருப்பவன் ஆவான் என்பதையே மாணிக்கவாசகர்,

*'புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்குழல்கள் வெல்க'* என்கிறார்.

அதே மகாபாரதத்தில் மற்றொரு நிகழ்ச்சி. கௌரவ சபையில், பாஞ்சாலி அகௌரவப் படுத்தப்பட்டபோது, கௌரவர்களின் கௌரவமற்ற செயல்கண்டு ஆன்றோரும், சான்றோரும் தலைகுனிந்து நின்றனர். அநாதரவான நிலையில் தன் இரு கரங்களாலும் மார்பினை இறுகப் பிடித்தபடி 'கிருஷ்ணா, கோவிந்தா' என்றெல்லாம் கதறி கதறி கண்ணனை அழைக்கின்றாள் பாஞ்சாலி. கிருஷ்ணனின் உதவி அவளுக்குக் கிடைக்கவில்லை.

காரணம் அவள் என்னதான் கதறி கதறி கிருஷ்ணனை அழைத்தாலும்கூட, இரு கரங்களினால் தன் மார்பை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தாள். இச்செயலானது, இறைவனிடமான அவளுடைய சரணாகதியானது பூரணத்துவம் பெறாததையே எடுத்துக் காட்டுகின்றது. தான் கதறி கதறியும் கண்ணனின் அருள் கிடைக்காத நிலையில், ஒரு கட்டத்தில் மார்பை இறுகப் பிடித்திருந்த தன் இரு கரங்களையும் கூப்பியவளாக பாஞ்சாலி கிருஷ்ணனை அழைக்கின்றாள். அவ்வேளையில் பகவான் கிருஷ்ணரின் அருளால், அவளது கௌரவம் கௌரவர் சபையில் காப்பாற்றப்படுகின்றது.

பாஞ்சாலியைப் போல், தான் என்னும் எண்ணம் அகற்றி கரம் கூப்பி இறைவனை வணங்கும்போது, நம்முடைய உள்ளமெல்லாம் மகிழும்படியாக இறைவனுடைய பூரண அருள் நமக்குக் கிடைக்கின்றது. இதனையே,

*'கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க'*

என்கிறார் மாணிக்கவாசகர். தொடர்ந்து – *'சிரம் குவிவார் ஓங்குவிக்கும், சீரோன் கழல் வெல்க'* என்கிறார்.

அதாவது தலையால் பணிந்து வணங்குபவர்களை இறைவன் ஆன்மீகத்தில் உயர்நிலைக்கு இட்டுச் செல்கின்றானாம்.

யோகநெறியில் ஆறு ஆதாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவைகளே அவை. சாதகன் ஒருவன் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, ஒவ்வொரு ஆதாரமாக உயர்த்திக் கொண்டு செல்லும் நிலையில், அந்தந்த நிலைக்கேற்ற சக்தியை அடைகின்றான். இவ்விதமாக குண்டலினியை ஆக்ஞா எனப்படுகின்ற நெற்றியைப் புருவங்களின் மத்தியில் கொண்டு நிறுத்தும் போது பல அபூர்வ சித்திகள் கைவரப் பெறுவதுடன், சாதகனுடைய உள்ளமும் சதாசர்வ காலமும் ஆனந்தத்திலேயே திளைத்திருக்கின்றது. இந்நிலையினை கரம் குவிவாரின் நிலைக்கு ஒப்பிட்டால், ஆக்ஞா சக்கரத்தில் நிலைபெற்றிருக்கும் குண்டலினி சக்தியை சஹஸ்ராரத்தில் சங்கமப்படுத்தி, இறைவனுடன் ஐக்கியமாகும் நிலையை சிரம் குவிவாரின் நிலைக்கு ஒப்பிடலாம்.

பிறப்பெடுத்த ஒவ்வொருவருக்கும் இறைவனிடமே சென்று ஐக்கியமாக வேண்டும் என்பதுதான் இலட்சியமாக இருக்கவேண்டும். அந்த இலட்சியம் ஒரு பிறவியிலேயே நிறைவேறிவிடும் என்பது சாத்தியமல்ல. அதற்குப் பல பிறவிகள் தேவைப்படலாம். பல பிறவிகள் கடந்த ஒரு நிலையில் நாம் இறைவனுடன் ஐக்கியமாக வேண்டுமானால், ஒவ்வொரு பிறவியிலும் இறைவனை நாம் நினைத்துப் போற்றியபடியே இருக்க வேண்டும். *(நன்றி: ஞானபூமி)*

## மாமன்றத்தின் அஞ்சலி

## அமரர் வேலுப்பிள்ளை முருகேசு



கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதியன்று காலமான ஸ்ரீ அரவிந்தர் இலங்கை நிலையத்தின் ஸ்தாபகரும், முருகேசு அன்ட் நீலகண்டன் சட்ட நிறுவனத்தின் நிறுவனரும் தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி வேலுப்பிள்ளை முருகேசு அவர்களின் மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவர் மாமன்றத்தின் பொதுச் செயலாளரும், சட்டத்தரணியுமான கந்தையா நீலகண்டன், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும் கொழும்பு விவேகானந்த சபையின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஏ. ஆர். சுரேந்திரன் ஆகியோரின் மாமனாருமாவார். அமரரும் அவரின் அலுவலகமும் மாமன்றப் பணிகள் பலவற்றுக்குப் பின்னணியில் பக்கபலமாக இருந்து உதவி வந்தமை குறிப்பிடற்பாலது.

அன்னாரது ஆத்ம சாந்திக்கு மாமன்றம் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

## அமரர் பத்மநாதன் நகுலேந்திரன்



அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையின் சிறப்பு உறுப்பினரான திரு. பத்மநாதன் நகுலேந்திரன் ஜூன் 22ஆம் திகதியன்று காலமானார் என்பதை மாமன்றம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றது.

மின்னியல் உயர் தொழிற் கல்வி நிறுவனமொன்றில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த இவர், நீண்ட காலமாகவே மாமன்றத்தின் முகாமைப்பேரவை உறுப்பினராகவிருந்து பெரும் சேவையாற்றியுள்ளார். மாமன்ற கட்டிடக் குழுவில் செயலாளராக சிலகாலம் பணியாற்றி, மாமன்ற கட்டிடப் பராமரிப்பு தொடர்பாக குறிப்பாக மின் இணைப்பு, மின்வழங்கல் விடயத்தில் பெரிதும் உதவி வந்துள்ளதுடன், இது விடயத்தில் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வந்திருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

திரு. ப. நகுலேந்திரன் அவர்களது மறைவையிட்டு இவரது குடும்பத்தினருக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கிறது.

## அமரர் ஆறுமுகம் இரத்தினவடிவேல்



மாமன்ற முகாமைப் பேரவையின் உறுப்பினரும், விவேகானந்த சபையின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஏ. ஆர். சுரேந்திரன் அவர்களது தந்தையார் திரு. ஆறுமுகம் இரத்தினவடிவேல் அவர்கள் கடந்த மே மாதம் 7ஆம் திகதியன்று காலமானார். இவரது மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அமரர் ஆ. இரத்தினவடிவேல் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றார். சிறுவயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கியதுடன், தீவிர இறைபக்தியாளனாகவும் திகழ்ந்தவர். பாடசாலை நேரம் தவிர்ந்த ஒய்வு நேரங்களில் நல்ல சமய அறிவு நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கம் இவரிடம் இருந்தது. வாசிப்பின் மகத்துவத்தால் இறைவன் மேலிருந்த பற்று மேலும் வியாபித்தது.

இவர் இலங்கை புகையிரத திணைக்களத்தில் கடமையாற்றியவர். சமய, ஆன்மீகத் துறையில் பல அரிய தொண்டுகளை ஆற்றிக் கொண்டிருந்த பெரியார் க. இராமச்சந்திரா அவர்களும் அந்நாளில் புகையிரத திணைக்களத்தில் ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருந்ததால், இரத்தினவடிவேல் அவர்களுக்கு அவரது நெருங்கிய தொடர்பு கிடைத்ததுடன், சமய, ஆன்மீக விடயங்களில் இருவரும் இணைந்து கலந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் கிடைத்தது. இதன் ஊடாக தனது பக்தி உணர்வையும் பெருக்கிக் கொள்ள முடிந்தது. இவர், இந்தியாவுக்கு தலயாத்திரை சென்றபோது பகவான் ரமண மகரிஷி அவர்களின் தரிசனமும் கிடைத்தது. தொடர்ந்து பல தடவைகள் இந்தியாவில் தல யாத்திரைகளை மேற்கொண்டு வந்துள்ளார். இதன்போது பல ஞானிகளினதும் மகான்களினதும் தொடர்பு இவருக்கு கிடைத்து வந்தது. சுவாமி இராமதாஸர், அன்னை கிருஷ்ணாபாய், பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா, சுவாமி சாந்தானந்தா போன்ற மகான்களது தரிசனத்தை இவர் பலமுறை பெற்றுள்ளார். இவர் மறைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பதாகவும், இந்தியாவில் தலயாத்திரை மேற்கொண்டதுடன், புட்டபர்த்தி சென்று பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அவர்களையும் தரிசித்து வந்திருக்கிறார். இதுவே இவரது இறுதி தலயாத்திரையாகவும் அமைந்துவிட்டது.

எப்போதுமே இறைசிந்தனையும், தீவிர பக்தியும் கொண்டவராகத் திகழ்ந்த அமரர் இரத்தினவடிவேல் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் ஒருவராக சங்கமித்துள்ளார் என்றே சொல்ல வேண்டும். இவர் மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர்.

அன்னாரது ஆத்மசாந்திக்கு மாமன்றம் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்தித்துக் கொள்கின்றது.

## மாமன்றச் செய்திகள்

### வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை



மாமன்றத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர் விடுதியின் 12வது ஆண்டு நிறைவு விழாவும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரையும் ஏப்ரல் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

அன்றைய தினம் காலை 10.00 மணியளவில், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி வளாகத்திலுள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கல்லூரி மண்டபத்தில் மாமன்றத் தலைவர் மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை அவர்களது தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், அமரர் க. வேலாயுதபிள்ளை அவர்களின் நிழற்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி என்பவைகளைத் தொடர்ந்து, இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு. ந. மன்மதராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதன் பின்னர், இடம்பெற்ற தலைமையுரையைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராசமனோகரி புலேந்திரன், கொழும்பு இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. த. சங்கரலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பின்னர், கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா "சைவமக்களின் பண்பாட்டு மரபில் கோயில் கிரியைகளும் அவற்றின் உள்ளார்த்தங்களும்" எனும் பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை நன்றியுரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, விடுதி மாணவ, மாணவிகளது பிறந்தநாள் வைபவமும் இடம்பெற்றதுடன், கொழும்பு மகளிர் இந்து மன்றத்தினர் தங்கள் வெளியீடான அப்பியாசப் புத்தகங்களை விடுதி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கினார்கள்.

### மாமன்றத்தின் அஞ்சலி

## அமரர் திருமதி ரதி தங்கமயில்

மாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினர் திரு. பொ. தங்கமயில் அவர்களது துணைவியார் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியன்று காலமானார்.

அன்னாரின் மறைவுக்கு மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆத்ம சாந்திக்கு அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

### இரத்மலானை புனர்வாழ்வு மையத்திலிருந்து மாணவர்கள் விடுவிப்பு

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த புனர்வாழ்வு மையத்தில் தங்கியிருந்த மாணவர்கள் அனைவரும் கடந்த மே மாதம் 24ம் திகதியன்று விடுவிக்கப்பட்டனர்.

நீதி, மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த வருடம் அக்டோபர் மாதத்தில் வன்னியிலிருந்து அழைத்து வரப்பட்ட 273 மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கல்வி வசதிகள் வழங்க வேண்டும் என்ற நன்னோக்கத்தில் அவர்களை கொழும்பு இந்துக் கல்லூரி புனர்வாழ்வு மையத்தில் தங்கவைத்து விடுதி மற்றும் உணவு வசதிகள் உட்பட சகல வசதிகளுடன் பராமரித்து வந்தது.

இங்கு தங்கியிருந்த மாணவர்கள் விடுவிக்கப்பட்டு அவர்களது பெற்றோருடன் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் மாமன்றம் அரசாங்கத்திடம் அடிக்கடி வேண்டுகோள் விடுத்து வந்தது.

இவர்களுள் ஒரு பகுதியினர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் எஞ்சியிருந்த அனைவரும் கடந்த மே மாதம் 24ம் திகதியன்று விடுவிக்கப்பட்டு, அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுள் வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களை, அவர்களது பெற்றோர்கள் விரும்பும் பட்சத்தில் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்பதற்கான வசதிகளுடன் அவர்களை இலவச மாணவர் விடுதியில் அனுமதித்துப் பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் மாமன்றம் உறுதியளித்துள்ளது. கடந்த டிசம்பர் மாதத்தில் க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய புனர்வாழ்வு மையத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாமன்றம் விசேட கல்விப் பயிற்சிகளை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரத்மலானை புனர்வாழ்வு மையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் மே 24ம் திகதி திங்கட்கிழமை மாலை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தலைமையில் நடைபெற்றது. மாமன்ற உறுப்பினர்கள், பலவழிகளிலும் உதவிகள் வழங்கிய சமூகசேவையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். இந்த வைபவத்தில் பேசிய மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், "இந்தப் பிள்ளைகளைப் பொறுபேற்குமாறு அரசு வேண்டுகோள் விடுத்தபோது, அவர்களை ஏற்றுக்கொண்டு சகல உதவிகளையும் வசதிகளையும் வழங்கினோம். புனர்வாழ்வு மையத்தை மாணவர் விடுதியாகவே நடத்துவதற்கு அரசாங்கம் சுதந்திரம் தந்திருந்தது. இதன்மூலம் இந்தப் பிள்ளைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இவர்கள் மீண்டும் தங்கள் குடும்பத்தினருடன் இணைந்து கொள்வது மகிழ்ச்சிக்குரியது. இந்தச் சந்தர்ப்பத்தை தந்த முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்" என்றார்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க அவர்களும் இந்த நிகழ்வில் உரையாற்றினார்.

# மணிவிழா கண்ட மன்மதராஜன்

## மாமன்றம் வாழ்த்துகிறது



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைப்பேரவை உறுப்பினரும், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியின் அதிபருமான திரு. ந. மன்மதராஜன் இவ்வருடம் மே மாதம் 19ம் திகதியன்று மணிவிழா கண்ட பெருமை பெற்றுள்ளார்.

இவர் ஏற்கனவே மாமன்றத்தின் உபதலைவர்களுள் ஒருவராகவும், மாமன்றத்தின் குழுக்கள் பலவற்றிலும் இணைந்திருந்ததுடன், இப்போது மாமன்ற விடுதிகள் குழுவில் உறுப்பினராகவிருந்து சிறப்பாக சேவையாற்றி வருகிறார்.

திரு. மன்மதராஜன் அவர்கள் இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியின் அதிபராகவிருந்து ஆற்றிவரும் பணிகளும் வெகுவாகப் போற்றத்தக்கன. இராணுவ முகாமாக மாற்றப்பட்ட கல்லூரியை, மீண்டும் அதேயிடத்தில் இயங்கச் செய்ய வேண்டும் என்பதில் அக்கறையும், ஆர்வமும் கொண்டு செயற்பட்டு வந்த அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு பெரிதும் உதவியவர்களுள் கல்லூரி அதிபரான திரு. மன்மதராஜன் அவர்களது பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் படிப்படியான வளர்ச்சிக்கும், மாணவர்களது கல்வித் திறமை, ஒழுக்கம் என்பவற்றுக்கும் அவரது தீவிரமான முயற்சியும், உழைப்பும் காரணமாக இருப்பது பெரிதும் போற்றத்தக்கது. மாணவர்களது வழிபாட்டுக்காக கல்லூரி வளாகத்தில் விநாயகப் பெருமானுக்கு ஆலயமொன்று அமைக்க வேண்டும் என்பதில் பெரும் முயற்சி எடுத்து அதனை நிறைவேற்றியதுடன், சிறு ஆலயமாக விருந்த அதனை ஒருசில வருடங்களில் ஒரு பெரும் ஆலயமாக அமைவதற்குப் பெரும் பங்காற்றிய பெருமைக்குரியவராக இவர் திகழ்கிறார்.

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரிக்குப் பின்னாலிருந்த இந்து வித்தியாவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான 220 பேர்ச் காணியை அரசாங்கம் சுவீகரித்திருந்தது. இதனை மீண்டும் சங்கத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு திரு. மன்மதராஜன் அவர்கள் பெரும் முயற்சி மேற்கொண்டு வெற்றி கண்டார் என்பதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

மாமன்றத்தினால் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டுவரும் இலவச மாணவர் விடுதியின் பராமரிப்பு விடயத்திலும், இங்கு தங்கியிருக்கும் மாணவர்களது கல்வி போதனையிலும் திரு. மன்மதராஜன் வழங்கி வரும் உதவியும் ஒத்துழைப்பும் பெரிதும் பாராட்டத்தக்கன.

மணிவிழா கண்ட திரு. மன்மதராஜன் அவர்களுக்கு மாமன்றம் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆரோக்கியமான உடல் நலத்துடன் வாழ்ந்து, சமய சமூகநல, கல்விப் பணிகளை மேலும் சிறப்பாகத் தொடருவதற்கு திருவருள் துணை நிற்க வேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

## மாமன்றத்தின் அம்புலன்ஸ் சேவை

யாழ். மக்களின் நன்மைகருதி, மாமன்றத்தினால் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அம்புலன்ஸ் சேவை சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்கள், மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு வரவேண்டிய தேவையேற்படும்போது மாமன்றத்தின் மேற்படி அம்புலன்ஸ் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். குறைந்த கட்டணத்தில் இந்த சேவையைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 211/7, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள மாமன்றத்தின் யாழ். பணிமனையுடன் (தொலைபேசி இல. 021-2221075) அல்லது கொழும்பிலுள்ள மாமன்ற தலைமையகத்துடன் (தொலைபேசி இல. 011-2434990) தொடர்பு கொள்ளலாம்.

## மாமன்றத்தின் இணையத்தளம்

இந்து மாமன்ற செய்திகளுடன் பலவித தகவல்களையும் வழங்கும் தகவல் மையம்.

பாருங்கள் ! உங்கள் கருத்துக்களை அனுப்பி வையுங்கள் !

www.hinducongress.lk

## இந்து ஒளி (காலாண்டிதழ்)

இந்து சமய அறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்த கட்டுரைகள், கவிதைகள், ஆன்மீக புராணக் கதைகள் உட்பட பல பயனுள்ள அம்சங்களுடன் காலாண்டிதழாக கடந்த பதின்னான்கு வருடங்களாக தொடர்ந்து வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றின் விலை | : | ரூபா 30.00 |
| வருடாந்த சந்தா | : | ரூபா 120.00 |
| தபாற் செலவு (நான்கு இதழ்களுக்கு) | : | ரூபா 180.00 |

எந்த மனிதனின் வாழ்வும் நிரந்தரமாய் இருளில் இருப்பதில்லை. என்றாவது அவன் வழிபடும் தெய்வத்தின் அருளால் ஒளிக்கிரணங்கள் வாழ்வில் சுடர்விடும்: இடர் நீங்கி ஏற்றம் உண்டாகும் திருப்புமுனை தென்படும். அத்தெய்வத்தை சிக்கெனப்பிடித்துக் கொள்ளவேண்டும். அப்போது விதிவிலகி வெற்றிப் பாதையைக் காட்டும்.

(திருமுருக கிருபானந்த வாரியார்)

## புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு திருமண வைபவம்

### மாமன்றம் மங்கலத் தாலி வழங்கியது

வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளான 53 ஜோடிகளுக்கு கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதியன்று திருமண வைபவம் நடைபெற்றது. தேசிய ஒருமைப்பாட்டு சம்மேளனம் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது.

திருமணம் செய்து கொண்ட இந்த 53 ஜோடிகளுக்குமான ரூபா 2, 50,000/= பெறுமதியான மங்கலப் பொட்டுத் தாலியை அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது.

இந்த திருமண வைபவத்தின்போது மாமன்றப் பிரதிநிதிகளாக கொழும்பிலிருந்து சென்ற உபதலைவர்களான திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன், விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா, முகாமைப்பேரவை உறுப்பினர் திரு. த. சிவகுமாரன் மற்றும் திரு. கோ. இளையராஜா, திரு. இ. இராஜ்குமார் ஆகியோருடன், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன், பொருளாளர் வைத்தியகலாநிதி ஆ. அரசக்கோன், மாமன்ற அறங்காவலர் சபை உறுப்பினர் திரு. தெ. ஈஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள் மாமன்றத்தின் வெளியீடுகளை அன்பளிப்பாக வழங்கியதுடன், மாமன்றத்தின் சார்பாக நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

## ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் ஆண்டு விழா

மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தினதும், பனங்காடு பாசுபதேசுவரர் அறநெறிப் பாடசாலையினதும் 7ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த மே மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு அக்கரைப்பற்று பிரதேச இந்து மாமன்றத் தலைவர் திரு. வே. சந்திரசேகரம் தலைமை வகித்தார். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா மகராஜ் அவர்களும், பனங்காடு பாசுபதேசுவரர் ஆலய பிரதமகுரு க. லோகநாதக்குருக்கள் அவர்களும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்கள். இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அவர்கள் மாணவர்களிடையே அறநெறிக் கருத்துக்கள் புகட்டப்பட வேண்டும் எனவும், மாணவர்களுக்கு நீதிக் கதைகள் மூலம் நல்ல கருத்துக்கள் முன்வைக்கப்படவேண்டும் எனவும் கூறி பல அறநெறிக் கதைகளையும் ஆசியுரையின் போது எடுத்துச் சொன்னார்.

இந்த வைபவத்தின்போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அருமைநாயகம் பேசும்போது மாவட்ட ரீதியாக மாணவர்களது கல்விப் போதனைகளை விருத்தி செய்ய வேண்டிய அவசியத்தையும், அறநெறிப் பாடசாலைகளின் முக்கியத்துவத்தையும், அவை சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பங்களிப்புகளையும் எடுத்துக் கூறியிருந்தார்.

அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா நந்திக் கொடியை விழாவின் போது வழங்கியதுடன் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளைக் கொண்டு ஏற்றுவித்தும், அங்கவீனர்களுக்கு முச்சக்கர வண்டிகளையும் கையளித்தார். இவர் தனது உரையின்போது மதமாற்றங்களை முற்றாக ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், கிழக்கு மாகாணத்தில் இந்துக்கள் சமயப் பண்பாடுகளோடும் விழுமியங்களுடனும் வாழ வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினார்.

இந்த நிகழ்வின்போது அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை சிறப்பு உறுப்பினரும் கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளருமான திரு. ம. பாலகைலாசநாத சர்மா சிறப்புப் பொழிவாற்றினார். இவர் தனது உரையில் அறநெறிப் பாடசாலைகளின் கல்விப் பண்பாட்டிற்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆற்றுகைகளையும் பங்களிப்புகளையும் எடுத்துச் சொல்லியதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இந்து சமய அறக்கருத்துக்களை நன்கு அறிந்து அவற்றின்படி வாழ வேண்டிய அவசியத்தையும் கூறியிருந்தார். மேலும் இந்து மாமன்றம் சமயப்பணி, சமூகப்பணி ஆகியவற்றுடன் அறப்பணிகளையும் செய்து இவ்வாறான விழாக்கள் மூலம் மதமாற்றம், மத எதிர்ப்பு, மதம் பற்றிய தவறான பிரச்சாரங்கள் ஆகியவற்றை முற்றாக நீக்கி, இந்துக்கள் சமயப் பண்பாட்டு அம்சங்களோடு சிறப்பாக வாழவேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

அகில இலங்கை இந்து மாமன்ற பிரதிச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களையும், இந்துஒளி மற்றும் சமய அறநெறி நூல்களையும் அன்பளிப்புச் செய்து சிறுவர்களுக்கு அறநெறிக் கல்வியையும் பாடசாலைக் கல்வியையும் போதித்து அவர்களை நற்பிரஜைகளாக வளர்க்க வேண்டிய அவசியத்தை தனது உரையின்போது உணர்த்தி இருந்தார்.


மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொடியப்பு பியசேன கலந்து கொண்டு மாவட்ட ரீதியில் கல்வி வளர்ச்சியின் தேவைபற்றி கருத்துக்களை கூறியிருந்தார். விசேட அதிதியாக கலந்துகொண்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் திரு. வி. ஜெகதீசன் பாடசாலை மட்டத்தில் நண்பகல் வேளைகளில் அறநெறிப் பாடங்கள் புகட்டப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தியிருந்தார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. ப. அனிருத்தினன் உரையாற்றும்போது, தங்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பங்காற்றி வருவதை எடுத்துச் சொல்லி, இதனூடாக மதமாற்றத்தை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

இவ்விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கலாசார அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சமய சமூக நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிற்றுரைகளை நிகழ்த்தினார்கள்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை, நடனம், கிராமியப் பாடல்கள், கிராமிய நடனங்கள், வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பேச்சுப் போட்டிகளிலும் சமயப் போட்டிகளிலும் பங்குபற்றிய மாணவர்களுக்கு இந்நிகழ்வின் போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

– பாலா

# Construction of A Hindu Temple



*Kalaipulavar K. Navaratnam*

Hindu religious ritualism is very closely connected with temples. A Hindu is expected to start his religious life with the help of a temple, but he is not compelled to stick to it right through his life. Models and aids which are found indispensable in the kindergarten stage of education become burdens and unnecessary encumbrances in the advanced classes. Similar is the case with temple ritualism and ceremonials to one who is advanced in formless contemplation of God. Yet, men of spiritual illumination do not look down upon ritualism nor do they despise those who observe it. It is said in the *Bhagavad Gita:*

> Whatsoever the superior person does, that is followed by others. What he demonstrates by action, that, people follow.
>
> One should not unsettle the understanding of the ignorant, attached to action; the wise (himself) steadily acting, should engage the ignorant in all work.

True to this injunction the mystics of Hinduism, though they transcended all forms of temple ritualism, yet, lived their lives in the temple surroundings and helped to create piety and devotion in the hearts of the people for religious ritualism.

The Hindu temple is so constructed as to resemble the structure of the human body. It re-sembles the body of a man lying on his back with the head on the west and the feet towards the east.

| No | |
|---|---|
| 1.Head | -*Garba Grham.* Holy of Holies |
| 2.Neck | -*Artha Mandapam.* |
| 3.Chest | -*Maha Mandapam.* |
| 4.Stomach | -*Sthapana Mandapam.* |
| 5.Section below the intestines | -*Stampa Mandapam.* |
| 6.Thighs | -*Sabha Mandapam.* |
| 7.Knees | -*First Entrance.* |
| 8.Lower Legs | -*Kalyana Mandapam or Utsava Mandapam.* |
| 9.Feet | - Main Entrance with *Gopuram.* |

The main image or the *Mula Murthy* is installed in the *Garba Grham.* The priest stands and performs *puja* in the *Artha Mandapam.* The *Utsava Murthies* (functional images) are placed in the *Maha Mandapam.* In the human body the functional organs are in the chest, above the stomach. The Sacrificial pit is constructed in the *Sthapana Mandapam* into which the offerings of rice, ghee etc. are put during Homa. The flag staff -*Kodi Stampam* and *Pali-peetam* are in the *Stampa Mandapam.* Music and dances are performed in the *Sabha Mandapam* which is also known as *Nritta Mandapam.* The *Utsava Murthy* is decorated and placed in the *Kalyana Mandapam* during festival days. The first entrance with a small *gopuram* represents the knees. The big *gopuram* on the main entrance represents the feet with the toes up.

There are two court-yards round the main shrines. The first one starts from the *Sabha Mandapam* and goes round the main shrine. This is the inner *prakaram* (corridor). The second one starts from the *Kalyana Mandapam,* and goes round the inner *prakaram.* Devotees are expected to go round the *prakarams* and offer worship at the main shrine first and again at the minor shrines. In the inner *prakaram* there are smaller shrines for the different aspects of the *Mula Murthy* or for others connected with it.

The shrine for the Sakti aspect of the *Mula Murthy* (Chief Deity) is placed on the northern side of the Maha *Mandapam* facing the south. The temple tank is constructed outside the second *Prakaram,* on the southern side, facing the shrine of Sakti. The tall tower over the *Garba Grham* is called Vimanam, and towers at the entrances of the temple are called *gopurams.* The temples in Ceylon are all built according to the Dravidian style of architecture.

***Temple Images***

Temple images are of two types. They are called *Mula Murthies* and *Utsava Murthies.*

*Mula Muthies* are those which are permanently installed in the *Garba Grham* and are not meant to be taken out in procession during festival days. *Mula Murthies* are made of granite. *Utsava Murthies* are images made of metals and are meant to be taken in procession.

Images are made according to the *Agamic* rules which are collected and codified in books known as *Silpa Shastras*. The person who is engaged in making images is known as *sthapathi or silpi.* He is expected to lead a life of devotion and be proficient in *Dhyana Yoga*. There are definite *dhyanaslokas* for the deities which give detailed description of the image's and a *silpi* is expected to contemplate on this description and obtain a mental vision of the figure before he begins the work. *Sukracharya* says: "Let the image-maker establish images in temples by meditation on the deities who are the objects of his devotion. In no other way, not even by direct and immediate vision of an actual object, is it possible to be so absorbed in contemplation as thus in the making of images." If an object of devotion can be expressed in material form, it must be in a beautiful form, since that is the one thing, in the material world of which the soul never gets tired. "A thing of beauty is a joy for ever." In aesthetic pleasure the soul realizes its own inherent blissful nature-*Atmanandam*. "In India, the ultimate aim of life is Release *(Moksha)* and art is one means of attaining this aim." writes, Stella Kramrishch.

"In Hindu religion symbolism and metaphysics go together. Metaphysical ideas are made more vivid and real through art. Though, the real nature of the Absolute is beyond human understanding, yet, through art, religion tries to bridge the gulf between the Infinite and the finite. This is the reason why Hindu Metaphysicians brought art into religious practices. Modern Hindus, who are heirs to the religious traditions of Hinduism, are attempting to ignore this fundamental truth and are endeavouring to separate art from religion following the example of the industrial-minded West.*

It is the clear injunction of the *Silpa Shastras* that artistic excellence should not be sacrificed for the purpose of mechanical accuracy regarding anatomy and measurements. South Indian Hindu images have received the encomiums of great art critics of the West because of their aesthetic value. Prof: William Rothenstein says: "No Chinese artist has reached greater perfection of poise and form than the *Nataraja* bronzes or the ecstatic figures of *Sundaramoorthi Swami* achieve." Augustin Rodin, the famous sculptor says: "The Indian *Nataraja* can well contest for superiority in gracefulness with the gesture of the Venus de Medici's which defends its charms by the arm, while *Siva* does the same by an ingenious gesture." One art critic writes: "In the absorbing serenity of expression, in the rhythmic sways and the dynamic symmetry of the poses, above all in the moving and generalized forms of an original yet artistic anatomy, the bronzes of this school (South India) translate the abstruse conceptions of Brahminic philosophy, into which the artists have skilfully mingled their own meditation, their prayers, and all the hopes of their lives. To know them and to appreciate them is to receive an initiation into a new world of plastic dreams not revealed in any of the masterpieces of Greek or Renaissance bronzes."

Images in the temples are not mere realistic representations of any human figure. They are idealized symbolic representations of the various aspects of the Divine as conceived and experienced by the devotees right through the history of Hinduism. To understand and appreciate Hindu images one should have a complete knowledge of Hindu mythology, tradition and the Hindu spiritual culture. They are the embodiments of the ideals and religious aspirations of a people who have lived through thousands of years of religious endeavour. To appreciate and understand a Hindu image one should possess a pair of mystical eyes and a spiritual insight rather than a tourist outlook that seeks novelty to satisfy the instinct of curiosity.

*The beauty of the buildings with their repose and mystery, the dim lights with the suggestion of aloofness and awe, the song and the music, the image and the worship, all have suggestive power. All arts, architecture, music, dance, poetry, painting and sculpture, are used to make in fact the indefinable power of religion, for which no art is an adequate vehicle. Those who participate in the worship are united with historic Hindu experience, and with pro-found spiritual forces which have moulded what is best in our heritage.

- *Religion and Society*, p. 125

Quoted from Studies in Hinduism
by Kalaipulavar K. Navaratnam

# திருக்கேதீச்சரப் பெருமானின் இரதோற்சவப் பெருவிழா (26.05.2010)





சுவாமி உள்வீதி வலம் வருதல் நிகழ்வு நடைபெறுகிறது






இரதோற்சவத்தின் போது சேவையில் ஈடுபட்டுள்ள மன்னார் மாவட்ட இந்து ஆலயங்கள் ஒன்றியத்தின் சிவதொண்டர் அணியினர் வைத்தியகலாநிதி மு. கதிர்காமநாதன், வைத்தியகலாநிதி ஆ. அரசக்கோன் தலைமையில் பக்தர்களுக்கு தாகசாந்தியளிக்கிறார்கள்.





தேரோடும் வீதியை குளிர்மைப்படுத்துவதிலும், பக்தர்களுக்கு மதிய உணவு வழங்குவதிலும் ஈடுபட்டுள்ள சிவதொண்டர்கள்

# திருக்கேதீச்சரப் பெருமானின் தீர்த்தோற்சவப் பெருவிழா ( 27.05.2010)



ஆலயத்தினுள் பூசை வழிபாடுகள்



பஞ்சமூர்த்திகள் பாலாவி தீர்த்தக் கரைக்கு எழுந்தருளும் காட்சி




தீர்த்தோற்சவ நிகழ்வு



பாலாவி தீர்த்தக் கேணிக்குச் செல்லும் பாதை



பக்தர்கள் தீர்த்தமாடுகிறார்கள்



பாலாவி தீர்த்தக்கரையில் அருள்பாலிக்கும் பிள்ளையார் கோயில்

# மாமன்றத்தில் மகா சிவராத்திரி விழா (13.03.2010





மகா சிவராத்திரி பூசை வழிபாடும், மாமன்ற சமய விவகாரக் குழுவின் செயலாளர்
திரு. மு. சொக்கலிங்கம் நந்திக்கொடி ஏற்றிவைப்பதையும் காணலாம்





மாமன்றக் காலாண்டிதழான "இந்து ஒளி"யின்
மகா சிவராத்திரி சிறப்பிதழ் மாமன்றப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி அவர்களினால் வெளியிட்டு
வைக்கப்படுவதையும் இரத்மலானை விடுதி மாணவர்கள்
இசை விருந்து வழங்குவதையும் காணலாம்.






மகசீன், வெலிக்கட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளுக்காக இவ்வருட தைப்பொங்கலுக்கான, பூசை வழிபாட்டுக்குரிய பொருட்களையும், சித்திரைப் புதுவருடத்திற்கான நிவாரணப் பொருட்களையும் வழங்கியபோது, மாமன்றப் பிரதிநிதிகள் குழுவில் சென்ற மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, பிரதிச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன், திரு. எஸ். கிருபானந்தமூர்த்தி, சிவஸ்ரீ க. கி. நாராயணக் குருக்கள் ஆகியோருடன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்.

## வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை (04.04.2010)






கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் அன்பளிப்பாக அப்பியாசப் புத்தகங்களை திருமதி வனஜா தவயோகராஜா (தலைவி), திருமதி காமினி அசோகன் (உபதலைவி), திருமதி இராஜமனோகரி புலேந்திரன் (நிர்வாக உறுப்பினர்) ஆகியோர் விடுதி மாணவர்களுக்கு வழங்குகிறார்கள்.




நிகழ்வுக்கு வருகை தந்திருந்தோர்

## புனர்வாழ்வு முகாமில் திருமண வைபவம் (13.06.2010)





வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 53 ஜோடிகளுக்கு நடந்த திருமண வைபவத்தின்போது மணமக்களுடன் நிகழ்வில் கலந்து கொண்ட மாமன்ற உபதலைவர்களான திரு. எஸ்.ரி.எஸ். அருளானந்தன், விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன், பொருளாளர் வைத்தியகலாநிதி ஆ. அரசக்கோன், புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோரை படங்களில் காணலாம்.

திருமணம் செய்து கொண்ட இந்த 53 ஜோடிகளுக்குமான மங்கலப் பொட்டுத்தாலியை அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.





திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகள் மற்றும் அதன் சுற்றாடல் பகுதிகளின் திருத்த வேலைகளின் பின்னர் ஆலயத்தின் நுழைவாயில் பகுதியையும், இவ்வருடம் நடைபெற்ற இரதோற்சவத்தின்போது இடம்பெற்ற பஞ்சரதப் பவனியையும் காணலாம்.





வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை (04.04.2010) நிகழ்வின் போது, இரத்மலானை விடுதி மாணவிகள் இறைவணக்கம் செலுத்துவதையும், விடுதி மாணவர்களது பிறந்தநாள் வைபவத்தையும், விடுதி மாணவியின் கலை நிகழ்ச்சியையும் காணலாம்.



மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி அதிபருமான திரு. ந. மன்மதராஜன் அவர்களது மணிவிழா நிகழ்வின்போது நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், மாமன்றத்தின் சார்பாக பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, பொருளாளர் திரு. வே. கந்தசாமி ஆகியோரால் திரு. மன்மதராஜன் கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.






புதுச்சேரியில் நடைபெற்ற (பெப்ரவரி 2010) பெரிய புராண ஆய்வு மாநாட்டில் புதுவை முதல்வர் வைத்திலிங்கம் அவர்கள் மாமன்றப் பிரதிச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களுக்கு "அன்புநெறி செம்மல்" என்ற பட்டமும், மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களுக்கு "சிவநெறி செல்வர்" என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படுவதையும், மாநாட்டுக்கு வருகை தந்த பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் காணலாம்.

UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL : +94 11 2330195